வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஐப்பசி திங்கள் 10-ம் நாள் (27—10—1963) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 8 | இதழ் 22




# ஐ. நா. வுக்கு அனுப்பிய தந்தி பரிசீலனை

## மனித உரிமை பகுதிக்கு சமர்ப்பித்ததாக தகவல்

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் காரியதரிசிக்கு இரு வாரங்களுக்கு முன்பு அனுப்பிய தந்தி ஐ. நா. வின் "மனித உரிமைப் பகுதி"க்கு நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைத் தெரிவித்து ஐ. நா. காரியதரிசியிடமிருந்து பதில் வந்துள்ளது.

இலங்கையில் இன, மத, வகுப்பு அடிப்படையில் நாவேறுபாடுகள் காட்ட இங்குள்ள சட்டங்கள் இடமளிப்பதில்லையென்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் திரு. பி. டி. எஸ். குலரத்தின குறிப்பிட்டிருந்தார். இதை மறுத்துத் தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்கள் இந்நாட்டில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் சட்டத்தினாலும் நிர்வாக நடவடிக்கைகளினாலும் அவஸ்தைக்குள்ளாவதாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்குத் தந்திச் செய்தி அனுப்பிவைத்திருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

தமிழரசுத் தந்தை ஐ. நா. காரியதரிசிக்கு அனுப்பிய தந்தியில் குறிப்பிட்டிருந்ததாவது:

"இலங்கையிலுள்ள தமிழர்கள் சட்டத்தினாலும் நிர்வாக நடவடிக்கைகளாலும் அவஸ்தைப்படுகிறார்கள். இதற்கு உதாரணமாக, பத்து இலட்சம் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் குடியுரிமைச் சட்டத்தையும், நாட்டின் சனத்

(9-ம் பக்கம் பார்க்க)



வடக்கு அராலி முருக மூர்த்தி ஆலயப் பிரவேசத்தின் போது எடுத்த படங்கள்:— (1) திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. உரை நிகழ்த்துகிறார். திரு. கே. பி. ஹரன், முதலியார் சின்னத்தம்பி, திரு. வேலாயுதபிள்ளை ஆகியோர் அமர்ந்துள்ளனர். (2) பாரதி சனசமூக நிலையத் தலைவர் திரு. கு. இலையம்பலம் பக்திப் பரவசமேலீட்டால் மெய்யுருகிப் பாடுகிறார். (3) ஆலய முகாமையாளர் திரு. எஸ். ஜி. எஸ். மணியம் தம்பதிகளும், புதல்வன் திரு. ஜி. புவனேந்திரனும். (4) திறந்துவிடப்பட்ட ஆலயத்துள் சென்று வழிபடும் மக்கள் (5) பெண் பக்தர்கள் புடைசூழ உரையாற்றும் திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம். (செய்தி 6-ம் பக்கம்)

# சிறுபான்மையோரை வஞ்சிக்கும் பயங்கரத் திட்டம்

## நிதி மசோதாவின் கோரம்

சிங்களவரல்லாதோர் எவரும் காணி, வீடு முதலியவற்றை வாங்கவோ, விற்கவோ, குத்தகைக்கு எடுக்கவோ, சீதனமாகக் கொடுக்கவோ, அடவு பிடிக்கவோ முடியாதபடி ஒரு அந்தரங்கத் திட்டத்தை வகுத்துக் கொண்டே நிதி மசோதாவின் சில ஷரத்துக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. பிரஜைகளல்லாதோர் என்ற பதப் பிரயோகத்தினாலேயே சிறுபான்மை இனத்தவர்களனைவரையும் வஞ்சிக்கவே இந்த மசோதா தயாரிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

இலங்கைப் பிரஜைகளல்லாதோர் எவரும் இங்கு காணி, வீடு வாங்கவோ, குத்தகைக்கு எடுக்கவோ, அடவு பிடிக்கவோ நேர்ந்தால், காணிப் பெறுமதிப்படி நூற்றுக்கு நூறு வீதம் வரி கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ, அல்லது சீதனமாகவோ வீடு, கட்டடம், காணி எதை வழங்கினாலும், அதற்கும் 100 வீத வரி, வழங்குபவர் செலுத்த வேண்டும். புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிதி மசோதாவின்படி மேற்படி நிலை உருவாக விருக்கிறது.

காணியைப் பதிவு செய்யும் போது, சிங்களப் பெயர்களையுடையோரல்லாதோருக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களனைவரையும் சந்தேகப் பிரஜைகளாக்கிக் கொள்வதற்கும் இந்த மசோதா வழி வகுக்கிறது.

மசோதாவில் "பிரஜைகளல்லாதோர்" என்று குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறையில் தமிழ் பேசும் மக்களையே அது பாதிக்கும். காணிக்குரிய உறுதியில் தமிழ்ப் பெயரோ அல்லது முஸ்லிம் பெயரோ காணப்பட்டால், பதிவு அதிகாரி காணி வாங்குபவருடைய பிரஜா உரிமையை ருசுப்படுத்தும்படி 15 நாட்கள் அவகாசம் கொடுப்பார். எனெனில் சிங்களவர்களல்லாதோர் அனைவரையும் பிரஜைகளல்லாதோர் என்று தான் அவர் கருத முடியும். பிரஜாவுரிமையை நிரூபிக்கத் தவறினால் அந்த உறுதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டு விடும்.

இஸ்லாமிய சமூகத்தவரையும் இந்த மசோதா படுமோசமாகப் பாதிக்குமாகையி

(9-ம் பக்கம் பார்க்க)

### மீண்டும் பாத யாத்திரை

ஒத்திவைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் பாத யாத்திரையின் அடுத்த கட்டம், காலநிலை சீராக விருந்தால் திங்கட்கிழமை 28-10-63 முதல் மீண்டும் ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்தே பாத யாத்திரையின் அடுத்த கட்டம் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர் நாட்டின் விடுதலைக்கு அயராது போரிட்ட வீரர்

## ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை உணர்வுக்கு ஓர் ஒளி விளக்கு

## அவர் தான் தலைவர் ஏமன் டி வேலரா

சுயநலம் சிறிதுமில்லை; சுகவாழ்வில் ஆசையில்லை; காரணம், துன்பச் சூழுவளியும் சுதந்திர எண்ணமும் அவருடைய வாழ்வில் இணைந்தவை! இத்தனைக்கும் அவரோ கிழத் தலைவர்! யார் அவர்?

மாடி மனை மக்கள் சுற்றம் போனாலும் நாடு, நாடு என்று நாட்டின் சுதந்திரத்திற்கு காடு மேடு அலைந்து, கடுந் துன்பங்களை வடுகளாகப் பெற்று நாடு பிடிக்கும் ஆசைகொண்டோரை 'ஓடு, ஓடு இந்த நாட்டை விட்டு ஓடு'—என்று கூடி, போராடி, வெற்றி தேடி இன்று புகழ் மேடுதனில் அமர்ந்திருக்கும் கிழத் தலைவர் பற்றிய கட்டுரைதான் இது!

கிழவர் தான்!—என்றாலும் கிழத்தன்மை இதய அறைகளிலே இல்லை; எண்பத்தியொரு வயதென்றாலும் எழுச்சிமுரசம் அவரது பேச்சு; கண்தெரியாது அந்தக் கிழவருக்கு; அதேபோல் கண்மூடியாய், அடிமையாய் வாழவும் தெரியாது அவருக்கு!

அவர் பிறந்த பொன்னாடு ஈரம் இறந்துவிட்ட நெஞ்சுடையோரின் இரும்புக் கைகளிலே சிக்கிக் கொண்டு தத்தளிப்பதைக் கண்டார். தன்னைப் பெற்ற அன்னை நாடு வன்னெஞ்சக்கார வெறியர்கள் பூட்டிய விலங்குகளைச் சுமந்து திரியும் அவலத்தைக் கண்டார். அப்போது அவருக்கு இள வயது தான். எனவே, வேகமாயிருக்கும் இரத்தத் துடிப்பு உணர்ச்சியால் இரத்தக் கொதிப்பாக மாறியது!

### போர் முரசு கொட்டினார்

ஆதிக்க வெறியர்களுக்கெதிராகப் போர் முரசம் கொட்டினார்; 'சதி புரிந்து, நாட்டை இந்த அடிமைக் கதிக்குக் கொண்டு வந்தோர், இங்கிருந்தால் இறப்போம் என்ற பீதியிலே ஓடவேண்டும், நம் நாடு விட்டு!'—என்று கர்ஜித்தார்.

சிங்கத்தின் கர்ஜனை கேட்டுச் சிறும்புலிக் கூட்டம் ஒன்று திரண்டது. தங்கத் திருநாட்டின் வாழ்விற்காக அங்கங்களை அறுத்துவைக்கத் தயாராயினர், தொண்டர்கள்!

இரத்த வெள்ளத்தில் மிதந்தாலும், அவர்கள் விடுதலைப் பெருமூச்சுத் தான் விட்டனர்; கைகளில் எலும்பு ஒடிந்து தொங்கினாலும், தசை கிழிந்து நரம்பு தொங்கினாலும், அவர்கள் வாய் 'தாய் நாடு வாழ்க!' என்றே முழங்கிற்று. கொடுஞ் சிறையில் வாடினர்; செக்கிழுத்துச் செந்நீர் கொட்டினர்! சதையைத் துண்டு துண்டாக்கினும் சுதந்திர எண்ணம் ஓயுமோ—மாயுமோ— என்ற 'குரல்' எழுப்பினர்! இடைவிடாப் போராட்டம் நடைபெற்றது.

பாமா. ராஜகோபால்

### அஞ்சவில்லை அந்த இளைஞர்

விடுதலை வீரர்களை வேட்டைநாயென வெறிகொண்டு துரத்தினர், ஆங்கிலேயர்! உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் ஊரடங்குச் சட்டத்திற்கும் அஞ்சவில்லை அந்த அயர்நாட்டு இளைஞர்கள்! தலைவர்களின் தலைக்கு விலை பேசினர், ராஜதந்திரக் கலை தெரிந்த ஆங்கிலேயர்! 'நாட்டு மக்கள் காட்டிக் கொடுப்பர் தலைவர்களை. சுட்டுப் பொசுக்கிவிடுவோம் அவர்களை'—என்று எண்ணினர். ஆனால், அடிமை முத்திரை தாங்கிட எண்ணம் கொள்ளாத அந்நாட்டு மக்கள், மடி நிறையப் பொன் கிடைக்கும் வகையிருந்தும் தலைவர்களைக் காட்டிக் கொடுக்க மறுத்தனர்.

ஆகவே— ஆங்கிலேயரே தேடினர். தொடர்ந்து வரும் ஆங்கிலப் படைகண்டு அஞ்சவில்லை. சரணமோ சரணமென்று காலில் விழவில்லை தலைவர்கள்!

ஆங்கிலேயரோ தேடுகின்ற வேலையைத் துரிதமாக்கினர்; கட்டுப்பாடுகளை அதிகமாக்கினர்; கடைசியில், பழுத்த பலங்குலையில் பழம் விழுவதுபோல் தலைவர்கள் ஒவ்வொருவராக அகப்பட்டனர்.

என்றாலும்— கிழத்தலைவர் அகப்படவில்லை! சாகசங்கள் புரியும் வயதில்லை அவருக்கு —என்றாலும் அந்த ஆதிக்கச் சண்டாளர்களின் கண்களில் அவர் படவேயில்லை!

வலைபோட்டுத் தேடினர்; அவர் தலைக்கு விலையை அதிகப்படுத்திக்கொண்டே போயினர்; என்றாலும் பயனில்லை!

வெள்ளிக்காசுக்கு யாராவது ஆசைகொள்ள மாட்டார்களா?—ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்குக் கொள்ளிவைக்க நினைக்கும் அந்தக் 'குடுகுடு' கிழவர் கிடைக்க மாட்டாரா என்று ஏங்கிற்று ஆங்கிலேய ஏகாதிபத்யம்!

### தங்கத் தலைவரை காட்டிக் கொடுக்கவில்லை

வெள்ளிக் காசுக்குத் தங்கத் தலைவரைக் காட்டிக் கொடுக்கத் துணியவில்லை, நாட்டு மக்கள்!

ஆங்கிலேயரின் பெருமுயற்சிக்குப் பிறகு, பெரும் படை உதவிகொண்டு, பெருமூச்சு வாங்க அவரைக் கடைசியில் கைது செய்தனர்!

அந்தத் தலைவன் யார்?—நாட்டின் நல்வாழ்விற்குக் குரல் கொடுத்த அவன் யார்?—சுதந்திரப் போராட்டத்தின்போது கடைசியாக —தனிவீரனாகப் போராடிச் சிறைபட்ட அந்த வீரன் யார்?—ஒப்புவமை இல்லாத தியாகக் கனலை இதயத்தில் கொண்ட அவ்வீரன் யார்?

அவர்தான் இன்றைய அயர்நாட்டின் தலைவர் ஏமன் டி வேலரா!

### அயராது போரிட்டவர்

ஆம்; அயர் நாட்டின் சுதந்திரத்திற்காக அயராது போரிட்டவர்! அமெரிக்காவிலுள்ள நியூயோர்க்கில் அயர் பெண் ஒருத்திக்கும் ஸ்பானியப் பெருமகனொருவருக்கும் பிறந்தவர் தான் டி வேலரா!

—என்றாலும் அயர்நாட்டின் மடியில் தான் தன் ஆக்கம் இருக்கவேண்டுமென்பதற்காக நாட்டின் சுகதுக்கங்களுக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டவர் அவர்!

இத்தகைய மேதைதான் —நம் நாட்டிலே நடமாடும் சில 'மேதைகள்' போலல்லாது—தன் நாட்டின் விடுதலையே பெரிதெனக் கருதினார்! நாட்டின் ஆணிவேரில் புகுந்து விட்ட புழுக்களை அவர் கொல்ல நினைத்தாரே தவிர, மரத்திற்குப் பொட்டிட்டுப் பூஜிக்கவில்லை! 'விடுதலை வந்தால் தான் வளம் கொழிக்கும்; புனிபட்டால்தான் வெண்கலம் துலக்கும்'—என எண்ணினார்; விடுதலைப் பெரும் போரில் குதித்தார்!

### துன்பங்கள் பலப்பல

[illegible] துன்பங்கள் [illegible] கேட்கின்ற உள்ளமும் உணர்ச்சி கொள்ளாமல் அடங்காது!

காடுமேடுகளில் அலைந்திருக்கிறார்; அயர்நாட்டை ஆண்ட பிரிட்டிஷ்காரரின் கழுகுக் கண்களில் தென்படாமலிருக்க! பசி-பட்டினி-துன்பம், இத்தனையும்-அவருக்கு நண்பர்கள்! அடிமைத்

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிப்பேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

### செந்தமிழாள் எங்கள் ஆச்சி!

—உமாதேவி—

தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என்போம்—எங்கள்
 தமிழிந்த உலகெங்குந் தழைத்தோங்கச் செய்வோம்.
தமிழ் வெல்க! தமிழ் வெல்க! என்போம்—எங்கள்
 தமிழென்று மழியாத தனமென்று கொள்வோம்!

அமிழ்தன்ன தமிழ் வாழ்க வென்றால்—நெஞ்சில்
 அணுசக்தி போலார்வ அலைமோது மன்றோ!
குமிழன்ன வாழ்வின்பம் எண்ணி—எங்கள்
 குலதெய்வத் தமிழேல மிடுமெண்ணங் கொள்வோம்.

தமிழ் வாழும் பயிரென்று கொள்வோம்—என்றுந்
 தமிழர்க்கு உணவிந்தத் தமிழென்று சொல்வோம்
தமிழ் எங்கள் உயிரென்று கொள்வோம்—அன்புத்
 தமிழின்றி நாமெல்லாஞ் சடமென்று சொல்வோம்.

பயிருக்குப் பிணிவந்த போது—பஞ்சை
 பசிக்கு அழுதென்ன பயனென்று சொல்வீர்
உயிருக்குப் பகைவந்த போது—எங்கள்
 உணவுக்கு அழுகின்ற உலகென்ன விந்தை!

தமிழெங்கள் விழிஎன்று சொல்வோம்—கண்ணைத்
 தமிழ்விற்று உயிர்வாழு நிலையின்றே வெல்வோம்
விழியெங்கள் மொழியென்று சொல்லின்—செய்யும்
 வினைவேறு சொல்வேறாய் வீசாது செல்வோம்

நீருக்கு அழியாநந் தமிழை—வேகும்
 நெருப்புக்கு நீறாத நிதியாஞ் செந்தமிழை
பாருக்குப் பண்பூட்டுந் தமிழை—தொக்கும்
 பதவிக்கும பணத்துக்கும் பதிலீவ தாமோ?

ஆச்சிக்கு அழகான பெயராய்—எங்கள்
 அறிவுக்குத் துணையாகி அணியான தமிழை
மூச்சுக்கும் பேச்சுக்கும் பெருகும்—எங்கள்
 முதுசொத்தாந் தமிழெங்கள் முழுச்சொத்து மன்றோ?

நாநேற்று வந்தோமின் றுள்ளோம்—நாளை
 நாமேகு நாளாகும் நாமேது கண்டோம்?
ஆனாலும் ஆச்சிசெந் தமிழாள்—என்றும்
 ஆண்டாண்டு வாழ்கின்ற அருஞ் செல்வமன்றோ!

தமிழ் வாழ்க! தமிழ் வெல்க! என்போம்—எங்கள்
 தமிழிந்த உலகாளுந் தனமெய்தச் செய்வோம்!
குமிழன்ன வாழ்வின்பம் விற்றும்—எங்கள்
 குலதெய்வத் தமிழோங்கக் குலசேவை செய்வோம்!

செந்தமி ழாளெங்கள் ஆச்சி—எங்கள்
 சிந்தை மலர்ந்திடச் செயுமவள் ஆட்சி!
வந்திடுந் தானுக மீட்சி—எங்கள்
 வளம்போங்க வளமோங்க வருக அவ்வாட்சி!

### யாத்திரை கண்டேன்

—பண்ணாகம். ப. இராசகுரு—

செந்தமிழைக் காத்திடவே துடிதுடிக்கும் தோள்கள்
 செம்மை மிகு அறத்தினையே நாடிநிற்கும் நெஞ்சு
தந்தைவழித் தந்தையராம் வாழ்ந்துவந்த நாட்டில்
 தமிழுரிமை கேட்கின்ற சால்புற்ற வார்த்தை
சிந்தையுறு நிந்தமிழால் பாடுகின்ற பாக்கள்
 செகந்தோரை யுடன்சேர்க்கும் செம்மையுறு—சொற்கள்
விந்தையெனப் பிறர் விளம்ப விறுகொண்ட செல்கை
 விடுதலையின் வீரர்களைக் கண்டுவந்தோம்யாமே.

சுதந்திரத்தை நாட்டுவதும் நம் தொழிலே யென்று
 சோராத நெஞ்சுறுதி கொண்டவரின் ஆர்ப்பு
இதந்தருமே மற்றுமின்பம் என்றேங்கா நெஞ்சு
 இன்னல்கள் பலகோடி தாங்குகின்ற வீரம்
மதந்தருமோர் யானையினை மாய்க்கின்ற தோள்கள்
 மண்ணவரும் போற்றுகின்ற வீரமிகு செல்கை
கரந்தன்னை அறுத்தங்கே அன்பினையே நாட்டி
 காப்பதுவே நம்தாயை யன்றெழுந்த வீரம்.

வேறு

சாதிமத வேற்றுமைகள் ஓட்டி நிற்போம்
 சமரசத்தை நிலைநாட்ட வேண்டும் இங்கு
காதினிக்கும் தமிழ்காக்கச் சிறந்த செய்கை
 காசினியில் வாழுகின்ற தமிழர் சேர்வோம்
மேதினியில் பல வேறு கட்சி வேண்டாம்
 மிக்கவரும் தக்கவரும் என்று வேண்டாம்
வீதியெல்லாம் தமிழ் முழங்கச் செய்வோமென்று
 வி:த்தை நிலைநாட்டிச் செல்வர் காட்சி.

ஒன்றுபட்டு வாழ்வதுவே சான்றோர் செய்கை
 உண்மையுடன் நாமிதனைப் பற்றிநிற்போம்
கன்றுதனை நினைந்தோடும் பசுவைப் போலே
 காதலுடன் தமிழுரிமை பெற்றே தீர்வோம்
சென்றெட்டுத் திசையெல்லாம் செல்வம் சேர்ப்போம்
 செகத்தினிலே மற்றோர்க்கே அடிமையாகோம்
வென்றெட்டுத் திசையெல்லாம் கொண்டு வாழ்ந்த
 வீரமிகு தமிழ் மரபில் வந்தோம் நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மணிவண்ணன்,
மண்டூர்

கே: தேநீரோ, அல்லது கோப்பியோ அல்லது வேறு ஏதோ குடிபானமோ குடித்துவிட்டுப் பாத்திரத்துள் சிறிது வைக்கிறார்களே இதன் காரணம் என்ன?

ப: பானம் வழங்கியவர்களுடன் பகிர்ந்து சாப்பிடுவது தமிழ்ப்பண்பு. எனவே வழங்கியவர்கள் அருந்துவதற்காகவே பாத்திரத்தினடியில் சிறிது மீதம் வைக்கிறார்கள். ஆனால் மதுபானம் மட்டும் அந்தப் பண்புக்கு அப்பாற்பட்டது.

ஃ

கு. பாலகணேசன்
பதுளை

கே: ஈழத்தில் "தமிழன்" உயர்வது எப்போது?

ப: உயர்ந்துதான் இருக்கிறான் மலையகத்தில் மிக உயர்ந்த மலைமீது நின்று உழைப்பவனும் தமிழன் தானே!

ஃ

குமாரச் செல்வன்,
ஏழாலை-மேற்கு

கே: ஆளைப்பந்தியில், அகில இலங்கை ஆளைப்பந்தித் தமிழ்க் காங்கிரஸைக் காணவில்லையே! எங்கு சென்றதோ?

ப: ஐயோ பாவம்! "பெயர்ப்பலகை அந்தஸ்து" கூட போய் விட்டதே என்று ஒரு மூச்சு அழுது தொலையுங்கள்.

கே: தமிழினத்தின் "பகிஷ்கரிப்பு" இயக்கத்துக்கு எதிர்ப்பு இயக்கம் ஆரம்பிக்க முன்பும், நிராசரதரினக் கோஷர், 'ஈழத் தந்தை' செல்வாவின் தலைமையில் நடைபெறும், புனிதப் பாத யாத்திரையைப் போல் ஒன்று தொடங்குமுனையவில்லையே ஏன்?

ப: சிங்களக் கிராம மக்களிடம் "வாங்கிக் கட்ட" முடியாததால்.

ஃ

இ. தயாநிதி, ஆனைக்கோட்டை

கே: ஆனைப்பந்தியடி தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக் கிளையின கதி என்ன?

ப: ஓரிரு பத்திரிகை அறிக்கைகளோடு அதன் மூச்சு அடங்கிவிட்டது.

ஃ

ஒற்றுமைப் பிரியன்,
ஏழாலை-மேற்கு

கே: இலங்கையில் புரட்சி செய்தே அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று புளத்சிங்கலத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர்திரு.எட்மண்ட் சமரக்கொடியும், தொழிற் சங்க சம்மேளனக் காரியதரிசி திரு. என்.சண்முகதாசனும்கூறியிருப்பதும் அவர்களின் தலைவர்களாகிய எட்டியாந்தோட்டைப் பிரதிநிதியும், அக்குரஸ்ஸைப் பிரதிநிதியும் புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியாதென்று கூறியிருப்பதும் எதைக் காட்டுகிறது?

ப; கோட்டைக்குள் குத்துவெட்டு என்பதையும் ஆட்சியை வாளால் பிடிப்பதா வாக்கால் பிடிப்பதா என்பதில் பரஸ்பர கழுத்தறுப்பு என்பதையும் காட்டுகிறது.

ஃ

எஸ். மகாலிங்கம்,
இன்னக் கிண்ணியா

கே: மனிதனால் செய்ய முடியாதது ஏது?

ப: மங்கையின் உள்ளத்தை ஆழம்பார்ப்பது.

ஃ

நுணாவைச் செல்வம்,
மாதகல் மேற்கு

கே: தமிழரசுக் கட்சி எந்த ஒரு இயக்கத்தைத் தொடங்கினாலும், நான் முந்தி நீ முந்தி என்று அறிக்கைவிடத் தொடங்கி விடுகிறார்களே சிலர். இவர்களுக்குத் தமிழில் பற்று இல்லையா?

ப: அந்த அறிக்கைகளைக் கூட அவர்கள் தமிழில் விடுவதில்லையே! தமிழ்ப் பற்று எங்கிருந்து வரும்? மொழி உரிமையைச் சாப்பிட்டு வயிற்றுப் பசியைத் தீர்க்க முடியுமா என்று கேட்கும் கும்பலைச் சேர்ந்தவர்களல்லவா அவர்கள்?

செல்வி ஆர். எஸ். மாரியாய்,
எவிங்டன் தோ., பொரலங்கடை

கே: இ. ஐ. காங்கிரஸ் விசேடப் பஞ்சப்படி 17-50 க்குப் போராட்டம் நடத்தப் போகிறது. தொண்டமான் நாள் ஒன்றுக்கு 3-50 சம்பளத்திற்குப் போராட்டம் நடத்தப் போகிறாராம். இவர்களில் யார் நடத்துகிற போராட்டத்தை மலை நாட்டு மக்கள் நம்பலாம்?

ப: அவர்கள் போராட்டம் நடத்துபவர்களல்ல. எனவே "நம்பும்" கேள்வியே எழவில்லை.

ஃ

இ. கு. கோவிந்தராஜன்,
பொகவந்தலாவ

கே; வாடிய நாரிலே மலரைத் தொடுக்கும் இவ்வுலகம் வாடிய மலரை ஏன் நாரிலே தொடுக்க மறுக்கிறது?

ப: முன்னையது மக்கள் கண்களில் விபரீதமாகப்படுவதில்லை. வயோதிபர்கள் குமரிகளை மணப்பதே அதற்குச் சான்று. பின்னையதை மக்கள் வெறுக்கின்றனர்.

ஃ

கு. வேலு, பலாங்கொடை

கே: இலங்கையில் வாழும் இந்தியர் ஒருவர் இந்த நாட்டுப் பெண்ணை மணம் புரிந்தால் அவருக்குப் பிரஜா உரிமை கிடைக்குமா?

ப: கிடைக்கும். ஆனால் பிரதமரின் விருப்பம் எப்படியோ?

கே: எனது நண்பரைப் பார்த்து சில பெண்கள் ஆசைப்படுகிறார்களே! அவர் யாரை மணம் புரிவது?

ப: அவர் எந்தப் பெண் மீது ஆசை வைக்கிறாரோ அந்தப் பெண்ணை.

சி. சுப்பிரமணியம்,
தெல்லிப்பளை

கே: அடுத்த தேர்தலில் திரு. சுந்தரலிங்கம் உங்களுடன் காங்கேசன்துறையில் போட்டியிடுவதாகக் கூறியுள்ளார். உங்கள் கருத்து?

ப; நான் காங்கேசந்துறையில் போட்டியிடப் போவதாக உங்களிடம் கூறியது யார்?

ஃ

அ. ஜே. குலசிங்கம், சுண்ணாகம்

கே: தமிழ்ப் படத் தயாரிப்புக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகச் சென்ற வாரக் கேள்வி பதி

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டி யனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

லில் கூறியிருந்தீர்கள். எனக்கு விருப்பமுண்டு. ஆகக் குறைந்தது எவ்வளவு மூலதனத்துடன் தொடங்க வேண்டும்?

ப: குறைந்த பட்சம் இரு 'ல' கரங்களாவது வேண்டும்.

ஃ

வ. சிவசக்தி, புங்குடுதீவு

கே; தமிழ்நாடு சிங்களக் குடியேற்றத்தின் மூலம் பறிபோய்க் கொண்டிருக்கிறதே, அதைப் பற்றித் தமிழரசுக் கட்சி மௌனம் சாதிப்பது ஏன்?

# கடுகி வாரீர்!

—எருவில் மூர்த்தி—

மாறிவரும் ஆட்சியினர் மதிகெட்ட
குண்டர்களா! மடையர்தாமா!
ஏறிவருஞ் சூதுகளை எதிர்க்காது
கோழைகள் போல் இருக்கலாமா?
ஊறிவரும் மொழிப் பற்றின் ஒரு துளியே
போதாதோ உரிமைகாக்க?
சீறி வருஞ் சிங்களத்தின் செருக்கடக்கச்
செம்மல்களே திரண்டு வாரீர்!

ஆதி தொட்டு நமக்கிருந்த அரசுரிமை
பறிபோக அடிமை போன்றே
நாதி யற்ற தமிழர்களாய் நாம் வாழின்
பிற நாட்டார் நகைத்திடாரோ?
நீதி யற்ற போருக்காய் நிற்கவில்லை;
நம்பக்கம் நியாயமுண்டு!
தீதி யற்றுங் கொடியவரின் திமிர் அடக்கத்
தீரர்களே திரண்டு வாரீர்!

உரிமையெலாம் பறிகொடுத்தே ஊமைகளாய்ச்
செவிடர்களாய் உணர்ச்சி யற்ற
எருமைகளாய் வாழ்வதுவும் எமதினத்தின்
வரலாறோ? எண்ணிப் பாரீர்!
தரணியெலாம் புகழ் மணக்கத் தடையடைத்து
விறல் கொண்ட தமிழர் செய்த
பரணி யெலாம் அந்நியராற் பாழடையப்
பார்த்திருத்தல் பண்புதானோ?

வரையெடுத்த திண்தோளன் வண்டமிழன்
இராவணனின் மரபில் வந்தோர்
திரைபடுந்து இழமெனினும் திடுதிடெனப்
பொருரென்றால் தெறிப்பதுண்டே!
மறையாபுத்தே உரிமைப்போர்ப் படைசேர்க்கும்
அன்றுவரை பொறுத்தல் நன்றோ?
கரையுடைந்த கடல் போலக் கணக்கின்றி
வி[illegible] வாரீர்!

ப: நீங்கள் எந்த உலகத்தில் வசிக்கிறீரையா? தமிழ் மண் பறிபோவதைத்தடுத்து நிறுத்த ஆரம்பம் முதல் தொடர்ந்து போராடும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி தானே.

கே: தமிழனுக்கு உத்தியோகமும் வியாபாரமும் இல்லையேல் வாழ்வுண்டா?

ப; வாழ்வுக்காகத்தானே விவசாயத்தையும் கைத்தொழிலையும் உமது கேள்வியில் விட்டு வைத்திருக்கிறீர்.

ஃ

வே. மகேந்திரன்,
கொழும்பு-12

கே: இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மொழிக் கொள்கைக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் மொழிக் கொள்கைக்கும் வேறுபாடு என்ன? இவ்விரண்டில் எது சிறந்தது?

ப: இவ் விரண்டில் இ. ஐ. முன்னணியின் மொழிக் கொள்கையேசிறந்ததென்று கூறலாம்.

கே: விஜயன் வருவதற்குமுன் இலங்கையிலிருந்த பூர்வீகக் குடிமினராகிய இயக்கர், நாகர், வேடுவர், திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களா?

ப: இதில் ஐயம் ஏன்?

ஃ

தமிழரசு அபிமானி,
யாழ்ப்பாணம்

கே: கல்முனை எம். பி இப்பொழுது எங்கே நிற்கிறார்?

ப: மதில் மேல் நிற்கிறார். பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தான் தயாராம். அதே சமயத்தில் உரிமைப் போரில் கலந்து கொள்ளவும் தயாராம்.

ஃ

க. பொன்னுத்துரை,
ஈறற்பெரியகுளம்

கே: சீன—இந்திய எல்லைத் தகராறினால் இலங்கையும் பாதிக்கப்படுமா?

ப: இந்தியா இலங்கையின் ஒரேயோர் அண்டை நாடு. எனவே இந்தியாவைப் பாதிக்கும் பெரிய அரசியல் சம்பவங்கள் இலங்கையையும் நிச்சயம் பாதிக்கும்.

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி

கே; யாழ்ப்பாண மாஜி மேயர் சி. பொன்னம்பலம் அவர்கள் தனக்குத் தமிழ் வராது என்கிறார். அத்துடன் யாழ். மாநகர சபை தமிழ் நிர்வாகத்தையும் கண்டிக்கிறார். இவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: மாநகரசபை அலுவல்களைத் தனிச் சிங்களத்தில் மட்டுமே நடத்த வேண்டுமென்று அவர்கூறவில்லையே! அந்த மட்டில் யாழ் நகரம் தப்பிப் பிழைத்தது. தமிழ் தெரிந்தாலும் தெரியாதென்று கூறுவது ஒரு காலத்தில் "பாஷனாக" இருந்தது.

ஃ

ஆ. வெள்ளையம்மா,
தொணியகலை

கே: திருகோணமலை உபதேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தங்கள் அபேட்சகர்களை நிறுத்தப் போவதாக முன்னர் தீர்மானித்திருந்தும், இறுதியில் அந்தத் தீர்மானத்தைக் கைவிட்டது ஏன்?

ப: இரு கட்சிகளும் போட்டியிட்டால் சிங்களவர் வாக்குகள் பிரிந்துவிடும். எனவே எல்லாச் சிங்கள வாக்குகளையும் பெறலாமெனக் கருதி ஒரு சிங்களவர் நிறுத்தப்பட்டிருக்கிறார். தமிழர் வாக்குகளை இரு கூறுக்கும் எண்ணத்துடன் ஒரு தமிழர் வேறு நிறுத்தப்பட்டுள்ளார். சிங்கள வேட்பாளருக்குச் சிங்களவர் வாக்குகளுடன், ஒரு பகுதி முஸ்லிம் வாக்குகளும் கிடைத்துவிட்டால் வெற்றிபெறலாமென்பது அவர்கள் போட்டுள்ள தப்புக்கணக்கு.

கே: உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி உள்நாட்டில் மக்கள் தத்தளிக்கும் போது, பிரதமரும் மற்ற மந்திரிமார்களும் அடிக்கடி வெளிநாடு சென்று இப்படிப் பொதுப் பணத்தை விரயலாக்கலாமா?

ப: பொதுப்பணமாதலின் விரயமாக்குவதில் சிக்கனம் தேவையில்லை என்று அவர்கள் கருதியிருக்கலாம்!

ஃ

க சுப்பிரமணியம், காரைநகர்

கே: முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை 'முட்டை எழுத்தாளர் சங்கம்' என்றால் சாலப் பொருந்தும் என்கிறேன்?

ப: ஐயோ! அப்படிப் பெயர் வைத்துவிடாதீர்கள். நல்ல முட்டைக்குக் கடையிலே கிராக்கி ஏற்பட்டு விடும். எனவே "கூழ்" என்ற சொல்லையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

கே: மெல்லிய பெண்களில் உள்ள கவர்ச்சியும், அழகும், தடித்த பெண்களிடம் இல்லையே?

ப: அது அவரவர் ரசனையைப் பொறுத்த விஷயம்.

கே: இலங்கைப் பிரதமர் தன் நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்காது, பிற நாட்டவர்க்குப் புத்தி சொல்வது எதைக் காட்டுகிறது?

ப: புத்தி சொல்வது வெகு எளிது என்பதைக் காட்டுகிறது.

ஃ

'மணிமாறன்' கொழும்பு-11

கே: 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' அது என்ன குணம்?

ப; நற்குணம்.

கே; தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்திப் போராட்டத்தின் விளைவைப் பற்றித்தங்களின் கருத்தென்ன?

ப: திரு. பக்தவத்சலம் முதன் மந்திரியாக இருப்பதால் சிறைகள் நிரம்பி வழியும்.

ஃ

சி. இரகுபதிவல்லன்,
புங்குடுதீவு.

கே: கேரளம் கே. எறமு என்பவர் ஒரு தி. மு. க. மேடையில் பேசும்போது கேரளத்திலே மூலை, முடுக்கு சந்து பொந்திலெல்லாம் கூட அண்ணா என்ற பெயர் பரவி விட்டது என்கிறாரே?

ப: இதிலென்ன புதுமை இருக்கிறது? டில்லி இராசாங்க சபையில் முழங்கத் தொடங்கிய பின்னர் அண்ணா பெயர் அகில இந்தியாவிலும் அடிபடுகிறதே!

ஃ

இ. பாலசுப்பிரமணியம்,
அட்டன்.

கே: தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு வரவரக் குறைகிறதா? அல்லது அதிகரிக்கிறதா?

ப: மூதூர், ஊர்காவற்றுறை இடைத் தேர்தல் முடிவுகளையும், பாதயாத்திரையையும் பார்த்த பிறகு இன்னுமா இந்தக் கேள்வி?

**மந்திர சக்தியை நிரூபிப்பதற்கு**

உங்களுக்கு நிறைவேறவேண்டிய காரணங்களை நிறைவேற்றித்தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. உங்கள் காரணங்களை அறிவிக்கவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

**பி. எம். திசாநாயக்க,**

கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் கூட்டும் வட்ட மேஜை மாநாடு

## சிங்களப் பத்திரிகை தரும் தகவல்

## கிராமங்களின் தமிழ்ப் பெயர்களை மாற்ற மந்திரிக்குச் சிபார்சு

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ரஷியாவிலிருந்து திரும்பியதும், வட, கிழக்குமாகாணங்களில் அரசகரும மொழியான சிங்களத்தில் அலுவல்களை நடத்தும் முறை பற்றி எல்லா அரசியற் கட்சிகளையும் கொண்ட ஒரு வட்ட மேசை மகாநாடு நடாத்த முடிவு செய்திருக்கிறார் என்று "தவஸ" (சிங்களத் தினசரி) பத்திரிகை 21-10-1963-ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அடுத்த ஆண்டு தொடக்கம் கச்சேரி முறையை ஒழித்துவிட்டு, மாவட்ட சபைகள் நிறுவி, அந்தப் பிரதேசங்களில் அந்தந்த மொழியின் மூலம் அலுவல்களை நடாத்துவது பற்றியும், அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதைச் சிங்களத்தில் எப்படிச் செய்யலாம் என்பது பற்றியும் இந்த மகாநாடு விவாதிக்கும்.

மாவட்ட சபை அமைப்பு மூலம் மொழிப் பிரச்சினைக்கு நேர்மையான முறையில் தீர்வு காண்பதோடு, தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வகையிலும் அநீதி இழைக்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் நம்புகிறது."

### வடக்கே மரண யாத்திரையாம்

"வடக்கே "பாதயாத்திரை" மரண யாத்திரையாகுமா?" என்று மகுடமிட்டு தவஸ 21-10-63 ஒரு கட்டுரை எழுதியுள்ளது.

அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"அன்னியர் இந்நாட்டை ஆட்சி புரியும்போது பெரும்பான்மையோரான சிங்கள மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அனாதைகளாக்கப்பட்டனர். ஆனால் சிறுபான்மையினரோ அன்னியரின் மொழியைக் கற்று, அவர்களின் நடை உடை பாவனைகளைச் சிரமேற் கொண்டு, அவர்களின் எண்ணப்படி நடந்து, அரசாங்கத்தின் உயர் பதவிகளைக் கைப் பற்றிக் கொழுத்தனர்.

அன்னிய மொழியைக் கற்று, அன்னிய பழக்க வழக்கங்களையும் கலாசாரங்களையும் மேற்கொள்வது இன உணர்ச்சிக்குப் பாதகமானது என்று அப்பொழுது இச் சிறுபான்மையோர் கருதவில்லை. எமது மொழிக்கு இடமில்லையே என்று அவர்கள் கூச்சலிடவுமில்லை, கண்டனப் பொதுக் கூட்டங்கள் நடத்தவுமில்லை. சத்தியாக்கிரகம் தொடங்கவுமில்லை. பாத யாத்திரைகள் நடத்தவுமில்லை.

### ஆர்வம் திடீரென ஏற்பட்டதாம்

ஆனால் இன்று? பிரிட்டிஷாரின் ஆட்சி அஸ்தமித்து, சுதேசிகள் ஆட்சி அதிகாரம் பெற்றதும் இந்நாட்டுச் சில சிறுபான்மையோருக்கு என்றுமில்லாத "இன ஆர்வமும்," "மொழி ஆர்வமும்" திடீரென ஏற்பட்டன.

பெரும்பான்மையோரான சிங்களவர் கைக்கு அதிகாரம் சென்றதும், அவர்கள் சிறுபான்மையோரை நசுக்கி ஒடுக்குகின்றனரெனக் கூச்சலிடுகின்றனர்.

ஐம்பதுக்கு ஐம்பது கேட்கப்பட்டது. சிங்களக் கொடியை உயர்த்தினால் இரத்தம் சிந்தும் எனத்தந்திகள் பறந்தன. பிராந்தியச் சுதந்திரத்துக்காகப் போராட்டங்கள் ஆரம்பமாயின. உட்கார்ந்தும், நின்றும், படுத்தும் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

## சிங்கள இதழ்களில்...

நாட்டில் கடுமையான வகுப்புவாதப் பிரச்சினைகள் கிளம்பின.

பொதுமக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை போடும் இத்தகைய இயக்கங்களை, எந்தக் கட்சியால் — எந்த நபரால் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும், அவற்றை நசுக்க முயற்சி செய்தல் அவசியமாகும்.

### தமிழரசு, நாம் தமிழர்

இன்று வட இலங்கையிலும், மலைநாட்டில் சில பகுதிகளிலும் பரவியுள்ள தமிழரசு இயக்கமும் அதன் கிளையாகக் கருதப்படும் "நாம் தமிழர்" இயக்கமும் இந்நாட்டுத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரிடையே ஒரளவு சிங்கள — எதிர்ப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

### மனிதக் கொலை: பயங்கரச் செயல்

சேர். பொன். இராமநாதன், பொன். அருணசலம் போன்ற தமிழ்த் தேசாபிமானிகள் சமுதாயத்தைக் கருத்திற்கொண்டு, நாட்டின் பொது முன்னேற்றத்துக்காக உழைத்தனர். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றாமல், மிக எளிதாகத் தலைமைப் பதவியைப் பெறும் நவீன வழியொன்றினைக் கண்டுபிடித்த தற்போதைய தமிழ்த் தலைவர்கள் வகுப்புவாதத்தை அதற்குக் கருவியாக்கிக் கொண்டனர்.

இந்த நாட்டின் பெரும்பான்மையோரான சிங்களவர்களைச் சிறுபான்மையோர் எந்நாளும் நசுக்கிக் கொண்டிருக்க வேண்டுமானால், அது ஒரு அன்னியர் ஆட்சியின் கீழ்த்தான் சாத்தியமாகும்.

ஆனால் இந்நாடு அரசியற் சுதந்திரம் பெற்று, சுதந்திர ஆட்சி நடத்துவதால், அயல் நாட்டினருக்குப் பாதபூசை செய்வது மூலம், சுதேசிகளை அடக்கி ஒடுக்க இந்த நாட்டில் எந்தச் சிறுபான்மையினருக்கும் [illegible] இடமும் கிடைக்காது.

### அபிவிருத்திக்கு ஒரே மொழி

நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த, பிளவுபடாத ஒரு சமுதாயம் ஏற்பட வேண்டும். ஒரே மொழியில் கருமமாற்றினால் மட்டுமே அத்தகைய ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

நலலதொரு கொள்கைக்காக நல்ல நோக்கத்துடன் பாத யாத்திரை தொடங்கினால், அது மிகச் சிறந்ததாக அமையும். ஆனால் தீங்கான கொள்கைக்காகக் கெட்ட நோக்கத்துடன் தொடங்கும் பாத யாத்திரை "மரண யாத்திரையாக" மாறவும் கூடும். ஒரு மனிதனுக்குரிய பொருளை அடித்துப் பறிக்கும் நோக்கங் கொண்டு நடத்தும் பாத யாத்திரைகள் மரண யாத்திரைகளானதற்கு மனித வரலாற்றுச் சான்றுகள் உண்டு. எனவே தலைவர்களின் உபதேசங்கள் எதுவாயினும்சரி, இம்மாதிரியான செயல்களிலிருந்து விலகி நிற்பதற்கு தமிழ் மக்கள் முயற்சிசெய்ய வேண்டும்.

### "நாம் தமிழர்" ஓரணியில்

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'ரிவிதின' (சிங்கள ஞாயிறு இதழ்) வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், மலை நாட்டில் வசிக்கும் தமிழர்கள் நாளடைவில் மலையகத்தை விட்டு வெளியேறிவிடக் கூடுமென்றும் இலங்கை முழுவதிலும் பரவலாக வசிக்கும் தமிழர்கள் எல்லோரும் ஒரே பிரதேசத்தில் வசிக்க வேண்டுமென்று "நாம் தமிழர்" தீர்மானித்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்களவரோடு நடத்தும் மொழிப் போராட்டத்தைக் கைவிட்டு, வட இலங்கையில் தமிழர்களுக்கெனத் தனிப் பிரதேசம் அமைப்பதற்காக உடனே நடவடிக்கையில் இறங்குமாறு "இந்திய நாம் தமிழர்" இயக்கத் தலைவர்கள் இந்நாட்டு 'நாம் தமிழர்' இயக்கத்துக்கு இரகசியமாக அறிவித்திருப்பதாகவும் இச் செய்தி கூறுகிறது.

### தமிழ்ப் பெயர்களை மாற்றுக

அநுராதபுரம் பகுதியில் தமிழ்ப் பெயர்களைக் கொண்ட கிராமங்களின் பெயர்களை மாற்றி, புராதன சரித்திரப் பெயர்களைச் சூட்ட வேண்டுமென நகர, கிராமப் பெயர்களை மாற்றுவதுபற்றிப் பரிசிலனைசெய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, அமைச்சருக்குச் சிபார்சு செய்துள்ளது என்று 'சவஸ' (23-10-63) தெரிவிக்கிறது. இதன்படி கூட்டிகுளம் ஜயசிரிபுர என்றும், சிவலா குளம் சாலிய புரம் என்றும் பெரிய குளம் மஹவெவா என்றும், சின்ன வன்னிய குளம் விஜயபுர என்றும் மாற்றப்படுமென இப் பத்திரிகை கூறுகிறது.

### தமிழ்ப் பகுதியில் சிங்கள கிராமக் கமிட்டி

"இரு சிங்களக் கிராமக் கமிட்டிகள்" என்ற தலைப்பின் கீழ் "சிங்கள பௌத்தயா" (மகாபோதி சங்கத்தின் வாராந்தப் பத்திரிகை) 19-10-63ம் திகதி கிழக்கு மாகாணத்தில் சேருவில பிரதேசத்திலும், தெஹிவத்த பிரதேசத்திலும் இரு கிராமக் கமிட்டிகளை நிறுவ அரசாங்கம் உத்தரவிட்டுள்ள செய்தியைப் பிரசுரித்துள்ளது.

"இவ்விரு கிராமக் கமிட்டிகளைப்பெறுவதற்காகப் பாடுபட்டு உழைத்த சேருவில் மங்கள ரஜமக விகாராதிபதி ஸ்ரீ சுமேதங்கர தேரோ, இந்தப் பிரதேசத்திற் சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகியோர் வசிக்கிறார்களெனினும் சிங்களவர் எல்

(13-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

### பதுளை, திருகோணமலை மாவட்ட இடையிறுதித் தேர்வு முடிவுகள்

திருகோணமலை, பதுளை மாவட்டங்களுக்கான சுதந்திரன் பேச்சுப் போட்டியின் இடையிறுதித் தேர்வு கடந்த 19ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. பதுளை சரசுவதி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. தமிழோவியன் தலைமையிலும், திருகோணமலை பெருந்தெரு மி. மி. பாடசாலை மண்டபத்தில் திரு. க. சிவகுரு அவர்கள் தலைமையிலும் போட்டிகள் நடைபெற்றன. நடுவர்களின் முடிவுக்கு இசையப்பின்வருவோர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

#### திருகோணமலை மாவட்டம்

#### முதற் பரிசு

மு. சந்திரசேகரம், 39/34 புகையிரத வீடுதி, திருகோணமலை, பாடசாலை: இந்துக் கல்லூரி, திருகோணமலை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்.'

#### இரண்டாம் பரிசு

ஈ பவானா, கோணேஸ்வர வைத்தியசாலை, 338, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருகோணமலை. பாடசாலை: இந்துக் கல்லூரி, திருகோணமலை.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோரின் நிலை'.

#### மூன்றாம் பரிசு

ச. யோகநாயகி, ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்'.

பின்வருபவர்கள் பாராட்டுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.


[அட்டன் மாவட்ட இடையிறுதிப் போட்டியில் பாராட்டுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்ட வி. ஸ்ரீதரன் அவர்களின் பெயர் தவறுதலாக வி. சிறிதரன் என்று பிரசுரமாகியுள்ளது. வி. ஸ்ரீதரன், பணியக் கடைவீதி. பூண்டுலோய என்பது அவரின் முகவரி. பிழை ஏற்பட்டதற்கு வருந்துகிறோம்]

நித்தியலெட்சுமி செல்லத்தம்பி, அர்ச் மரியாள் வீதி, திருகோணமலை. பாடசாலை: அர்ச். மரியாள் ஆங்கிலப் பாடசாலை, திருகோணமலை.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோரின் நிலை'.

ஸி. சோமசுந்தரம், சாம்பல் தீவு, திருகோணமலை பாடசாலை: அர்ச். சூசையப்பர்

(9-ம் பக்கம் பார்க்க)




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தோட்டப் பாடசாலைகளில் சிங்களம்

## போதனா மொழியாம்

## இனத்தை அழிக்கும் முயற்சியில் ஆட்சியாளர் தீவிரம்

தோட்டப் பாடசாலைகளனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளதாக அறிய வருகின்றோம். கல்வியைப் பொறுத்தமட்டில் ஒரு முன்னேற்றமுமில்லாது ஆண்டாண்டு காலமாக அழுது புரண்ட மலையக மக்களுக்கு மேற்கூறிய செய்தியானது ஆனந்தத்தை அளிக்கச் செய்கின்றது. ஆனால் அத்தோடு ஒரு பேரிடியும் விழுந்துள்ளது. தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் பட்சத்தில் அங்கு சிங்கள மொழிதான் போதனா மொழியாக இருக்குமாம். பல்வலிக்கு மருந்தைக் கொடுத்தும் பைத்தியத்தை உண்டுபண்ணுவது போல் இருக்கின்றது இக்கூற்று.

இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் தாய் மொழியிலேயே கல்வி புகட்டப்படுதல் வேண்டுமென்று அடிப்படைக் கொள்கை இருக்கையிலே, தோட்டச் சிறார்கள் மட்டும் இது விடயத்தில் அநீதி இழைக்கப்படுவது ஏன்?

உரிமைகளற்ற அடிமைகள் தானே, ஆகையாலே நாம் நினைத்ததையெல்லாம் இவர்களிடம் சாதித்து விடலாம் என்ற எண்ணமா? அன்றி, படிப்படியாகச் சிங்களத்தைப் போதித்து, சிங்களவர்களாக மாற்றி, பௌத்த மதத்தையும் இவர்களிடம் புகுத்தி, "தமிழன்" என்ற நாமத்தையே அழிக்கச் செய்யும் சதியா?

"மலைநாட்டு மக்களின் மட்டில் கல்வி ரீதியில் தனது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டி விட்டது இந்த இலங்கை அரசாங்கம்" என்று பிரமுகர்கள் எள்ளி நகையாடுவரெனப் பயந்து, "கல்வி மட்டில் இவர்களுக்கும் கருணை காட்டியுள்ளோம்" என்று சொல்லிக் கொண்டு கழுத்தையறுக்க முற்படுகின்றனர் நன்றி கெட்ட ஆட்சியாளர்.

### காக்கையும் குயிலும்

மலையக மக்கள் உரிமைகள் எதுவுமின்றி நசுக்கப்பட்டுவரும் நிலையிலே, அவர்கள் விரும்பாத ஒன்றை, வில்லங்கமாகப் புகுத்திவிட எண்ணம் போலும். மலைநாட்டுத் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள் என்பது ஏதோ உண்மைதான் என்றாலும், அதற்காக அவர்கள் சிங்களத்தைப் படித்துச் சிங்களவர்களாகத்தான வேண

ஞா. பெ. அல்பிறெட்
டிக்கோயா

டுமா? ஏன் அவர்கள் ஒரு தனி இனத்தவர்களில்லையா? அவர்களுக்கென்று தனி மொழி, கலை, கலாச்சாரம் என்பதெல்லாம் இல்லையா?

ஆயிரம் காக்கைகளுக்குள்ளே ஒரு குயில் வாழலாம். வாழ்ந்தாலும் அதன் பழக்க வழக்கங்கள் காக்கையைப் போல அமைந்து விடுமா? மாந்தளிரைக் கோதி விளையாடாமல், மாமிசத்தைக் கொத்தியுண்ணுமா? கூ, கூ, என்று தன் இனிய மொழியில் கூவிப் பாடாமல், கா, கா வென்று கரையத்தான் செய்யுமா? இந்தப் பறவைக்கு இருக்கும் பண்பாவது மனிதனுக்கு — அதுவும் தமிழனுக்கு இல்லாமற் போகும் என்பதா இந்தச் சிங்கள வகுப்புவாதிகளின் எண்ணம்?

### வேண்டாமய்யா இந்த வீண் படிப்பு!

உழைத்துக் கொடுத்து, இந்த நாட்டை உயர்த்தி வைத்திருக்கும் உழைப்பாளிகளுக்கு உரிமைகள் இல்லை. அவர்களின் சிறுவர்களுக்களுக்குப் போதிய கல்வி வசதியில்லை. தோட்டங்கள் தோறும் பாடசாலைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளெல்லாம் மாட்டுக் கொட்டிலுக்குச் சமமானவை.

(13ம் பக்கம் பார்க்க)

## மலையக மக்களுக்கு நல்வழி காட்டும் தாபனம்

### இலங்கைத் தொழிலாளர் கழக வழி சென்றால் வெற்றி

—தமிழ் மணி—

'யாழ்ப்பாணத் தமிழர்கள் மலையகத் தமிழரைக் காட்டிக் கொடுத்தவர்கள். ஆகையால் அவர்களின் சந்தர்ப்பவாதத்திற்கு மலையகத்தார் பலியாகமாட்டோம்' என்று கூறுபவர்களும், பொன்னிலும் மண்ணிருக்கும் என்பதை மறந்த பெரியோர்களும் மலையகத்தில் இன்னும் முற்றாக மறைந்து விடவில்லை. அப்படி அவர்கள் மறைந்திருந்தால் இன்று மலையகமெங்கும் தமிழரசுக் கொடி செந்தமிழ் என்ற தென்றலில் ஆடி அசைந்து கொண்டிருக்கும்.

தங்களின் பதவி மோகத்தாலும், பணப் பசியாலும், மலையகத் தமிழருக்குக் குடியுரிமை மறுத்த சட்டத்திற்குத் தலை அசைத்த தமிழ்க் காங்கிரசார், இன்று தரை மட்டமாகத் தாழ்த்தப்படும் அளவுக்குப் பகிஷ்கரிக்கப்படவிருக்கின்றனர் அதே யாழ்ப்பாணத் தமிழரால் என்பதை மலையகப் பெரியோர்கள் நன்கு அறிவர். சுயநலவாதிகளைச் சுண்டெலிகளாய் மாற்றிய பின்தான் தியாகத் தீரர்களைக் கொண்ட தமிழரசுக்கட்சி, தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் உருவாகியது.

'இலங்கையில் பிறந்து அல்லது இலங்கையைத் தாயகமாகக் கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரணப் பிரஜாவுரிமை உண்டென நிலைநாட்டல்'—இதுவே தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் முதல் நிற்பது. இ. தொ. கா விடமோ, ஜ. தொ. கா. விடமோ இல்லாத இந்தத் திடமான கொள்கை யார் மலையகத்தாரைத் தலைமை தாங்க வேண்டுமென்பதைத் திட்டவட்டமாகக் காட்டுகிறது.

கொலைகாரர் கையில் சிக்கித் திண்டாடும் தமிழ் மொழிக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கசியாத காங்கிரஸ் மாநாடுகளால், அலைகடலில் தத்தளிக்கும் மலையகத் தமிழர், தமிழ் மொழி காக்கத் தலைவர்களைத் தியாகம் செய்து கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் வலையில் சிக்கிப் படகில் ஏறுவதைத் தடுக்கவோ தவிர்க்கவோ, முடியாது. பலவகையிலும் சிதறுண்டு கிடந்த வட கிழக்கு மாகாண மக்களைத் 'தமிழர்' என்ற நான்கு எழுத்துகளுக்குள் அடக்கிய பெருமை தமிழரசுக்கட்சிக்கே உரியது.

ஜ. தொ. கா. 17-50 வேண்டுமென்று கேட்கும் போது இ. தொ. கா. ரூ. 30/ வேண்டுமென்றும் ஒரு தலைவர் தலை வேண்டுமென்றால் மற்றவர் வால் வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் திரிவது சுயநலப் பித்தலாட்டம் ஆகும். இன்று மலையகத் தமிழரின் ஒற்றுமைக்கும் விமோசனத்திற்கும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு நேர்ப்பாதை தமிழரசுக்

(13-ம் பக்கம் பார்க்க)

# மலை நாடு

## இ. தொ. கழகத்தை

## வட பகுதிக்கு விஸ்தரிக்க நடவடிக்கை

### மன்னார் மாவட்டத்தில் முதல் கிளை நிறுவப்பட்டது

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நடவடிக்கைகளை மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முருங்கன் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்குக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாகக் கடந்த வாரம் மேற்படி கழகத்தின் துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமையா, மன்னாருக்கு விஜயம் செய்தார். அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் நிமித்தமாக அடம்பனைச் சேர்ந்த பரப்புகடந்தான் என்ற கிராமத்தில் 15-10-63ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகத்தின் கிளை ஒன்று நிறுவப்பட்டது.

திரு. ராமய்யா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பரப்புகடந்தானில் வதியும் பொது மக்களும் விவசாயிகளும் மலைநாட்டிலிருந்து அடம்பன் பகுதியில் குடியேறியுள்ள தோட்டத் தொழிலாளர்களும் பெரும் திரளாகச் சமுகம் தந்திருந்தனர்.

திரு. ராமையா அவர்கள் பேசும் போது, 'தோட்டத் தொழிலாளர்கள் சமுதாயத்தில் மிக மிகப் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த எமது கழகம் நிறுவப்பட்டுள்ளது. மலைநாட்டிலே கழகம் செவ்வனே இயங்கி வருகிறது. மலைநாட்டிலிருந்து இதர பகுதிகளுக்கும் கழகத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும். மன்னார் மாவட்டத்தில் ஆரம்ப நடவடிக்கையாகப் பரப்புகடந்தானில் கழகத்தின் கிளையை நிறுவுகிறோம். அடம்பனிலும் அக்கம் பக்கமுள்ள கிராமங்களிலும் வசிக்கும் அனைவரும் இந்தக் கழகத்தில் பங்கு பற்றி ஒன்றாய் ஒரே சமூகமாய்ச் சேரவேண்டும். உங்கள் மகிழ்ச்சியிலே ஒற்றுமையும் கட்டுப்பாடும் நிலவ வேண்டும்' என்று கூறினார்.

அடுத்து மன்னார்ப் பகுதிப் [illegible] திரு. [illegible] தான் அவர்கள் பேசும்போது, 'உழைப்பாளிகள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள ஸ்தாபன ரீதியாகத் திரளவேண்டும். மேலும் உங்களில் ஒருவனாக என்னை நினைத்து உங்கள் பகுதிக்குத் தலைவராகவும் நியமித்து விட்டீர்கள். இதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, உங்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கும், கஷ்டங்களுக்கும் என்னால் இயன்றவரையில் முழு மன

(13-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கழகம்

## பதுளை மாவட்ட குழு அமைப்பு

இலங்கைத் தொழிலாளர் கழகம் பதுளை மாவட்ட அலுவலகத்தில் 13-10-63 தேதி திரு. கே. கிட்ணசாமி தலைமையில் நடைபெற்ற, பொதுக் கூட்டத்தில் அநேகமான தோட்டத் தொழிலாளர் பங்குபற்றினார். மாவட்டக் குழுவையும் நிறுவினர்.

மேற்கண்ட கூட்டத்தில், இ. தொ. கழக பதுளை மாவட்ட மேலதிகப் பிரதிநிதி திரு. வீ. சண்முகவேல் பேசும்போது, கூறியதாவது:—

தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏக காலத்தில் தோன்றிய தொழிற் சங்கங்கள், அவற்றின் கடமையினின்று தவறிவிட்டன. அவைகள், ஒவ்வொன்றும் தொழிற் சங்க ரூபத்தில் வர்த்தகக் கோஷ்டிகளாக மாறி விட்டன.

அதன் பயனால்தான், எனது சகோதரர்களான தோட்டத் தொழிலாளர், வாக்குரிமை, மொழியுரிமை, பிறப்புரிமை போன்ற முக்கிய உரிமைகளை இழக்க நேரிட்டது. எனவே மற்றத் தொழிலியக்கத்தாரால் செய்ய முடியாத பணியை நமது இ.தொ. கழகம்செய்ய முன்வந்துள்ளது. குறிப்பாக, நாமிழந்த உரிமைகளைப் போராடிப் பெறவே நமது இ. தொ. கழகம் தோன்றி இருக்கின்றது. எனவே அன்புத் தொழிலாளத் தோழர்களனைவரும் ஒருமித்து ஒரு கொடியின் கீழ் நின்று கடமையாற்ற வேண்டும்."

நிர்வாகிகள் தெரிவு:—

திரு. கே. கிட்ணசாமி, தலைவர், திரு. பி. எஸ். வி. பெரியண்ணன், துணைத் தலைவர், திரு. வீ. சண்முகவேல், பொதுச் செயலாளர், திரு. எம். ஐ. எம். அம்துான் துணைச் செயலாளர், திரு. எஸ். இராமையா, பொருளாளர்.

மேற்கண்ட ஐவரையும் தெரிவுசெய்த பின், கீழ்க்காணும் நால்வரும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். திரு. வி. எம். செல்லையா, திரு. கே. எம். வேலு, திரு. ஏ. [illegible] இராமையா, திரு. [illegible] வேலு.

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக்கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-50

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிஞர் அண்ணா தலைமையில்

# இந்தி எதிர்ப்புப் போராட்டம்

## நவம்பர் பதினேழாம் நாள் சென்னையில் ஆரம்பம்

## நீண்ட காலத் திட்டம் தயாராகியுள்ளது

## சட்ட எரிப்பு, மறியல் போன்ற அம்சங்கள் முக்கிய இடம்பெறும்

இந்தியை ஆட்சி மொழியாக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் பதினேழாவது பிரிவு மாதம் ஒரு நாள் எரிக்கப்படும். பின்னர் பதினைந்து நாட்கள் பிரசாரத்திற்கென்று ஒதுக்கப்படும். அடுத்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு எரிக்கப்படுவதற்கு, முன்பு மத்திய அரசாங்கத் திணைக்களங்களான அஞ்சலகங்கள், இந்திப் பிரச்சார நிறுவனங்கள், வானொலி நிலையங்கள், வருமான வரி, கணக்குப் பரிசோதகர் திணைக்களங்கள் ஆகியவற்றின் முன்பு மறியல் நடைபெறும்.

இந்த வகையில் இந்தியை எதிர்த்துப் போராடுவதற்கு நீண்டதொரு திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் வகுத்துள்ளது.

அடுத்த திங்கள் பதினேழாம் நாள், முதல் முதலாக அறிஞர் அண்ணா தலைமையில் ராயபுரத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையமான 'அறிவகத்'திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் இந்திய அரசியல் சட்டத்தின் 17ம் பிரிவு (இந்தி ஆட்சி மொழி என்று குறிப்பிடும் பிரிவு) கிழிக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்படும். இதைத் தொடர்ந்து நவம்பர் 30ம் திகதி வரை இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி நாடுபூராவும் பிரசாரம் நடைபெறும்.

பூங்குன்றன்

### மதியழகன், ஆசைத்தம்பி, அன்பழகன் மறியல்

அதன் பின்னர் டிசம்பர் முதலாம் திகதி முதல் 14ம் திகதி வரை கே. ஏ. மதியழகன், பேராசிரியர் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தலைமையில் சென்னையில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களின் முன்னர் மறியல் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து தமிழ் நாடு பூராவும் சட்ட எரிப்புப் போராட்டமும், மறியல் போராட்டமும் நடைபெறும்.

1965ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரைக்கும் போராட்டத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஏனைய திராவிட மாநிலங்களான ஆந்திரா, கேரளம், கன்னடம் ஆகிய ராஜ்ஜியங்களில் அரசியற் சட்டத்தை எரித்தால் தண்டனை கிடையாது. ஆகவே அந்த மாநிலங்களில் மறியல் போராட்டம் மட்டுமே நடைபெறும்.

### போராட்டத்தில் தி. மு. க. தலைவர்கள்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக முக்கியத் தலைவர்கள் பங்கு கொள்ளும் இடமும் காலமும்:-

**சட்ட எரிப்பு**

அறிஞர் அண்ணா: 1963 நவம்பர் 17ம் திகதி, சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரை.

இளமுருகு பொற்செல்வி: 1964 ஏப்ரல் 19ம் திகதி, நெல்லை.

கலைஞர் மு. கருணாநிதி: 1964 ஜூலை 19ம் திகதி, தஞ்சை.

என். வி. நடராசன்: 1964 டிசம்பர், சென்னை.

**மறியல்**

பேராசிரியர் அன்பழகன், மதியழகன், ஆசைத்தம்பி: 1963 டிசம்பர் 1 முதல் 14 வரை, சென்னை.

இரா. செழியன், அன்பில் தருமலிங்கம்: 1964 மார்ச் 1 முதல் 14 வரை, திருச்சி.

நாவலர் நெடுஞ்செழியன், எஸ். ஏ. இராசமாணிக்கம்: 1964 ஜூன் 1 முதல் 14வரை, கோவை.

நாஞ்சில் மனோகரன்: 1964 ஜூலை 1 முதல் 14 வரை, குமரி.

சத்தியவாணி முத்து, ப.உ. சண்முகம்: 1964 நவம்பர் 1 முதல் 14 வரை, வேலூர்.

அ. பொ. அரசு, சிட்டிபாபு: 1964 டிசம்பர் 21 முதல் 1965 ஜனவரி 1 வரை, சென்னை.

இந்த வகையில் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்த்துத் தென் இந்திய மக்கள் தங்களின் அமைதியான எதிர்ப்பைக் காட்ட முனைந்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலச் செயல் திட்டம் போராட்டம் என்ற ஒன்றையே சுற்றிச் சுழன்று அமைந்துவிட்டது.

### நீண்ட காலப் போராட்டம்

இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுவுள்ளதாக அமையும் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது திராவிட முன்னேற்றக் கழகம் வகுத்துள்ள திட்டம்.

ஒரு நாள் அடையாளப் போராட்டமாக அமைந்துவிடாது, பதினைந்து மாதங்களுக்கு உரிய திட்டத்தை வகுத்துள்ளார்கள் தி. மு. கழகத் தலைவர்கள்.

### அரசியல் மேதையின் ஆதரவு

முதுபெரும் அரசியல் அறிஞரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தமது முழு ஆதரவையும் இப்போராட்டத்துக்குத் தருவதாக வாக்களித்துள்ளார். இந்திய முஸ்லிம் லீக்கின் ஆதரவும் உண்டு. இவை யெல்லாவற்றிற்கும் மேலாகத் தென்னக மக்களின் ஆசியும் ஆதரவும் கிடைத்திருக்கின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்திய இந்தி எதிர்ப்பு மாநாடுகள்.

சென்னை நகரில் கடந்த பதின்மூன்றும் திகதி நடந்த இறுதி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் போராட்டத் திட்டத்தை, வெள்ளம் போல் திரண்டிருந்த மக்கள் மத்தியில் அறிஞர் அண்ணா அவர்கள் படித்துக் காட்டிய பொழுது மக்கள் காட்டிய உற்சாகத்திலிருந்து இந்தி எத்திசையாலும் தென்னகத்தில் நுழைய முடியாது என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிந்துவிட்டது.

(13-ம் பக்கம் பார்க்க)

## அராலி வடக்கில் ஆலயப் பிரவேசம்

### எதிர்ப்பெதுவுமின்றி அமைதியாக நடந்தது

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த வடக்கு அராலியில் உள்ள முருகமூர்த்தி ஆலயம் கடந்த 18—10—63 வெள்ளிக்கிழமை சகல மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டது. ஊர் மக்களின் ஏகோபித்த சம்மதத்தைப் பெற்ற இவ் வைபவம் எதுவித இடையூறுமின்றி நடைபெற்றது.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. கே. பி. ஹரன், முதலியார் சின்னத்தம்பி, முதலியார் கந்தையா, காந்திஜி சேவா சங்கத்தைச் சேர்ந்த திரு. வேலாயுத பிள்ளை, திரு. சி. கதிரவேலுப் பிள்ளை ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயத்தின் முகாமையாளர் திரு. எஸ். ஜி. எஸ். மணியம் ஆலயப் பிரவேசத்துக்காக அரும்பாடுபட்டிருக்கிறார் என்று தெரிய வந்தது. அவருடைய புதல்வரும், ஆலய நிர்வாகியுமான திரு. ஜி. புவனேஸ்வரன் முன்னின்று ஆலயப் பிரவேசத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததுடன் ஊர் மக்களை வரினதும் ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், "பலவிதமான சேவ[illegible] வரும் எத்தனையோ ஆலயங்[illegible] இந்து [illegible] செயல்களுக்கு இடமளிக்கின்றன. தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்கும் வகையில் வடக்கு அராலி மக்கள் எடுத்துள்ள இந்தச் சீரிய முயற்சி தமிழ் கூறும் நல்லுலகனைத்தினது பாராட்டையும் பெறும் என்பதில் ஐயமில்லை" என்று கூறினர்.

முதலியார் சின்னத்தம்பி, 'சைவசமயத்தின் தூய்மைக்கு இழுக்காக விளங்குவது தீண்டாமை' என்று குறிப்பிட்டார். திரு. கே. பி. ஹரன் அவர்கள் 'ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம். காந்தி அடிகளின் புரட்சித் திட்டங்களில் முதன்மையான ஆலயப் பிரவேசம் சற்றுத் தாமதித்து வந்தாலும், மக்களின் உள்ளக் கதவுகள் திறக்கப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது' என்று கூறினர்.

திருமதி அமிர்தலிங்கம் தேவாரபாராயணம் செய்ததுடன் உருக்கமாகவும் பேசினர்.

பாரதி சன சமூக நிலையத் தலைவர் திரு. கு. தில்லையம்பலம் "முருகா இன்று தான் உன் மனம் இளகியதோ, இன்று தான் உன் கருணை எமக்குக் கிடைத்ததோ, இன்றுதான் உன் தரிசனம் கிடைத்ததோ' என்று உளமுருகி பக்தி மேலிடப்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

## சந்தியில்....

ஒரு நாட்டின் தேசிய விழா வைக்கொண்டாடப் போவதாகக் கூறி, அந்த நாட்டுத் தூதுவராலயத்தில் கணிசமான தொகையைப் பெற்றுக்கொண்டு தோழர் குழாம் புடை சூழ ஒரு குழுவினர் யாழ்ப்பாணம் சென்றனராம். பெற்ற தொகையை, குழுவைப் பலப்படுத்துவதற்கு அதிகமாகச் செலவிட்டனராம்.

பலப்படுத்திய குழுவை 'ஆயுத பாணி'களாக்கவும் போதிய செலவு ஏற்பட்டதாம். ஆயுதம் என்ன தெரியுமா? கூழ் முட்டை தான். இந்தக் கூழ் முட்டைகளைச் சேகரிக்க மோட்டார்க்கார்கள் வட மாகாணத்தின் பல பாகங்களுக்கும் பறந்தனவாம்.

வேறொரு நாட்டின் தேசிய தினத்தைக்கொண்டாடுவதற்காகச் சென்ற இந்தத் தேசாபிமானிகள் ஒரு கூட்டத்தைக் குழப்பியடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு, தங்களுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொண்டனராம். இவர்களைப் பாராட்டிய மக்கள் இவர்களுக்கு கூழ் முட்டைப் போக்கிரிகள் என்று பட்டம் சூட்டியுள்ளதாக அம்மானுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தமிழர்கள் மத்தியில் மட்டும்தான் சாதி பேதங்கள் இருப்பதாகக் கூற முடியாது. சிங்களவர்கள் மத்தியிலும் சாதித் துவேஷம் மிக மும்முரமாக இருக்கின்றது.

அண்மையில் நடைபெற்ற செனட் சபைத் தேர்தலிலும் இந்தச் சாதித் துவேஷம் தலை தூக்கியிருக்கிறது. தாழ்ந்த சாதிக்காரன் என்ற நிலையில் ஒரு பிரபலஸ்தரை செனட் சபைக்குத் தெரிவு செய்ய வேண்டுமென்றே பல பாராளுமன்ற உறுப்பினர் மறுத்திருப்பதாக அம்மானுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

செனட் சபைத் தேர்வு சம்பந்தமாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களில் சில எம். பிக்கள் வெளிப்படையாக வே சாதியில் குறைந்தவனைச் செனட் சபைக்குத் தெரிவு செய்ய முடியாதெனக் கூறினராம்.

வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்படுவதாகக் கூறப்படும் ஒரு 'பிரபல' எழுத்தாளருக்கு உதவும் வகையில் சாகித்திய மண்டலப் பரிசில் ஒன்றை அவருக்கு வழங்குமாறு ஒரு குழுவினர் மண்டலத்தின் பிரமுகர் ஒருவரைப் பின் கதவால் அணுகிக் கெஞ்சினராம்.

அந்த பிரபல எழுத்தாளர் இன்று இலங்கையிலேயே நாவல் எழுதுவதன் மூலம் பணம் பெற்று வருகிறவராம். ஒரு பத்திரிகை மாதா மாதம் அவருக்குக் கணிசமான தொகைப் பணம் கொடுத்து வருகிறதாம்.

மண்டலப் பிரமுகர் மண்டியிட மறுக்கவே, கொண்ட கோபத்தில் குழு சேர்த்துக் கூழ் முட்டை நாடகம் நடாத்த முன் வந்தனராம் என்றும் அம்மானுக்குச் செய்தி கிடைத்தது.

நடைபெற்ற சச்சரவின் போது பகிரங்கமாகவே தான் எழுதிய நூலுக்கு பரிசு எங்கே? என்று கேட்டும் விட்டாராம். ஐயோ இலக்கியமே! இதுவா உன் கதி?

—அம்மான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளவந்தார் சாணக்கியத்துக்கு மீண்டும் ஒரு வெற்றி

## அரங்கம் 17

விடியற்காலை 4.07 மணி. நான்கு முன்றில்களை நோக்கி இடைக்கால அரசாங்கத்தின் துப்பாக்கிகள் குண்டு மாரி பொழிய ஆரம்பித்தன. உள்நாட்டு யுத்தமும் ஆரம்பித்து விட்டது! நூற்றுண்டு காலமாக அன்னியனை எதிர்த்துப் போராடிய அயர் நாட்டின புதல்வர்கள் தம்மிடையே போர் நடாத்த ஆரம்பித்து விட்டனர்! அண்ணன் தம்பியை நோக்கியும் தம்பி அண்ணனை நோக்கியும் நண்பன் நண்பனை நோக்கியும் சுட ஆரம்பித்து விட்டனர். இதற்கெல்லாம் காரணம் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளே. பல்லாண்டுகளாக அயர் தலைவர்கள் மத்தியில் மானுல் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தினசரிப் பத்திரிகைகளையோ வாணிப நோக்குடன் பார்க்கும் பங்குதாரர்களையுடைய பத்திரிகைகளையோ முகாமையாளர்களின் தாளத்திற்கு ஆடும் ஆசிரியர்களைக் கொண்ட பத்திரிகைகளையோ நம்பியிராமல் தாமாகவே அச்சடித்துப் பிரசுரிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் அயர் குடியரசு வாதிகள். அதனுல் தான் அவர்கள் ஒரு சிறு அச்சடிக்கும் இயந்திரத்தை வைத்திருந்தார்கள்.

நாட்டுப் புறங்களிலிருந்த பிரிவுகளுக்குப் போருக்கான ஆயுதங்களைச் செய்யும்படி கட்டளை அனுப்பப்பட்டது.

## அரங்கம் 18

நான்கு முன்றில்களைத் தாக்குவதை நிறுத்துமாறும் குடியரசுவாதிகளைத் தமது ஆயுதங்களுடன் விடுசெல்ல அனுமதிக்குமாறும் தோள் அயரிலே உடனடியாகக் கூட்டுமாறும் ஏமன் டி வேலரா, இடைக்கால அரசாங்கத்தின் அதிபர் மைக்கேல் கொலின்ஸைக் கேட்டுக் கொண்டார். எனினும் அவ் வேண்டுகோளை மைக்கேல் கொலின்ஸ் ஏற்க மறுத்து விட்டார். தமக்கும் ஆங்கில அரசாங்கத்துக்கும் இடையிலுள்ள இரகசிய உறவைப் பற்றி தோள் அயரின் ஆராய்வதை விரும்பாதபடியால்தான் அவர் அவ்வாறு செய்தார். 28-6-1922 புதன்கிழமை முழு நாளும் நான்கு முன்றில்கள் தாக்குதலுக்கு உட்பட்டிருந்தன. நான்கு முன்றில்களில் உள்ளவர்கள் சரணாகதியடையும் வரை தாக்குதல் தொடர்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

கப் பாதையொன்றினால் அப்புறப் படுத்தத் தொடங்கினர். வெடிமருந்து அனைத்தையும் அப்புறப்படுத்து முன்னர் தீ வெடிமருந்திலும் பற்றிவிட்டது. முடிவில் பல குடியரசுவாதிகள் அங்கு மாண்டு கிடந்தனர்.

இந்நேரத்தில் நாட்டில் கடும் பத்திரிகைத் தணிப்பு அமுலிலிருந்தது. இடைக்கால அரசாங்கத்தின் பொய்ச் செய்திகளே பத்திரிகைகளில் நிறைந்து இருந்தன. அத்தோடு கத்தோலிக்கத் திருச்சபை குடியரசு வாதிகளைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை யொன்றை விடுத்தது. அதிகாரத்தில் இருப்பவர்களை ஆதரித்து அறிக்கைகளை விடுப்பதில் அயர்நாட்டுக் கத்தோலிக்கச் திருச்சபை பெயர் பெற்றிருந்தது. முன்னர் பிரித்தானிய ஆட்சியை ஆதரித்து அறிக்கைகளை விடுத்தது; இப்பொழுது அயர் சுதந்திர மாநில ஆட்சியை ஆதரித்து அறிக்கை விடுத்துள்ளது. குடியரசுவாதிகள் பதவியிலிருந்தால் திருச்சபை நிச்சயமாக அவர்களைத்தான் ஆதரித்திருந்திருக்கும். ஆனால் பொது மக்கள் இவற்றையெல்லாம் சிந்திப்பதில்லை— சிந்திக்க அவர்களுக்கு நேரமிருப்பதில்லை. இக்காரணங்களுக்காகக் குடியரசுவாதிகளை ஆதரிக்குமுகமாகப் பொதுமக்கள் பொங்கியெழ முன்வரவில்லை. குடியரசுவாதிகளுக்குத் தோல்வி நிச்சயமாகிவிட்டது.

ஆதர் கிரிபித்துக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்திற்கு ஆயுதபலம் மூலம் தம் எதிர்ப்பைக் காட்டிவிட்டதாகத் திருப்தியடைந்த தளபதி திரேய்னர், நான்கு முன்றில்களிலிருந்த குடியரசுவாதிகள் சரணாகதியடைய வேண்டும் எனக் கட்டளையிட்டார். சரணாகதியடைவதிலும் பார்க்க நெருப்பில் எரிந்து மாள்வது மேல் என நான்கு முன்றில்களிலிருந்த பலர் எண்ணினாலும் தமது தளபதியின் கட்டளையை மீறப் படாது என்பதற்காக ஆயுதங்களை நெருப்பில் எறிந்து விட்டுச் சரணாகதியடைந்தனர். ரோறி ஓகொனர், லயம் மெலோவ்ஸ் உட்பட நூற்றுக்கும் மேலானவர்கள் கைதிகளாகினர்.

நான்கு முன்றில்கள் இடைக்கால அரசாங்கத்தின் கைவசம் ஆகியதைத் தொடர்ந்து ஓகொனல் வீதியிலிருந்த ஓட்டல்கள் தாக்குதலுக்கு உள்ளாகின. ஓட்டல்களிலுள்ளவர்கள் முடியுமானவரை போராடி விட்டுக் கடைசியில் சிறு சிறு கூட்டங்களாகச் சரணாகதியடைய வேண்டுமெனத் தளபதி திரேய்னர் தீர்மானித்தார்.

2-6-1922 ஞாயிற்றுக்கிழமை ஓட்டல்களிலிருந்த குடியரசுவாதிகளில் ஒரு பகுதியினர் சரணாகதியடைந்தனர். டி வேலரா, ஒஸ்டின் ஸ்ரக், ஒஸ்கார் திரேய்னர், கதல் புருகா ஆகியோர் உட்பட இன்னும் பலர் ஓட்டல்களில் எஞ்சி நின்றனர்.

அடுத்த நாள் டி வேலரா, ஸ்ரக், திரேய்னர் ஆகியோரும் இன்னும் பலரும் சரணாகதியடைவதற்காக வெளியேறினர். கதல் புருகாவும் 17 படைஞர்களும் மூன்று பெண்களுமே எஞ்சி நின்றனர். ஆனால் தெருவில் கால் வைத்த டி வேலரா முதலியோரை—ஆச்சரியம் காத்து நின்றது.

(வளரும்)

## தேசத் தந்தை போர் வீரனாகிறார்

இருந்து வந்த ஒற்றுமையை ஒரு சில மாதங்களில் சிதறடித்து உள்நாட்டு யுத்தம் ஒன்றையே ஏற்படுத்திய ஆங்கிலேயரைக் குறை கூறுதல் தகாது — உண்மையில் அவர்களின் சாணக்கியத்தை மெச்ச வேண்டும்!

தம்மீது திணிக்கப்பட்ட போரை நடாத்துவதற்காக அயர் குடியரசு இராணுவத்தினர் தயாரானார்கள். லயம் லிஞ்ச் இராணுவத் தண்டநாயகனாகப் பதவி ஏற்றார். டப்ளின் பிரிகேட் தளபதி ஒஸ்கார் திரேய்னர் டப்ளின் அனைத்துக்கும் இராணுவ அதிகாரியாகப் பதவியேற்றார். எந்தக் குடியரசைப் பிரகடனப்படுத்தி ஒப்புயர்வற்ற தலைவர்களான தோமஸ் கிளாக், சோண் மகடயாமடா, பட்றிக் பியஸ், ஜேம்ஸ் கொனோலி, தோமஸ் மக்டொனு, ஏமன் கென்ற், யோசேப் பிளங்கட் முதலியவர்கள் தம் உயிரையே பலி கொடுத்தார்களோ அந்தக் குடியரசு தரைமட்டமாவதைத் தடுப்பதற்காக கதல் புருகா, ஒஸ்டின் ஸ்ரக், மாக் ஸிவிக்ஸ் ஓமாட்டி முதலியோர் நான்கு முன்றில்களிலிருந்த இராணுவத் தலைவர்களுடன் வந்து சேர்ந்தனர். இன்னும் பல தலைவர்களும் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தனர்.

உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த 28—6—1922 காலை ஏமன் டி வேலரா, கிறேய்ஸ் டன்னிலுள்ள தனது வீட்டிலிருந்து டப்ளினை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது, டப்ளினில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகியுள்ளதாக ஒரு கமக்காரர் அவரிடம் கூறினார். இதை அவர் நம்ப மறுத்து விட்டார். ஆனால் டப்ளினை அண்மியதும் அவருக்கு விடயம் விளங்கி விட்டது. உடனடியாக அயர் நாட்டு மக்களுக்காக அவர் ஒரு செய்தியை வெளியிட்டார். அந்தச் செய்தியைத் தினசரிப் பத்திரிகைகள் பிரசுரிக்க மறுத்தன. ஆனால் குடியரசுவாதிகளின் பிரசாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த ஏனின் சில்டேஸ் அந்தச் செய்திகளை உடனடியாக ஒரு சிறு அச்சடிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் அச்சடித்து ஆயிரக்கணக்கான பிரதிகளை மக்களுக்கு விநியோகித்தார். தமது அபிப்பிராயங்களை ஒளிவு மறைவு இன்றி நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டு

டி வேலரா விடுத்த செய்தியில்,

"........இங்கிலாந்தின் பயமுறுத்தலைக் கண்டு நம் நாட்டவர்கள் சிலர் பின்வாங்கி விட்டார்கள். ஆனால் இப்பொழுது இடைக்கால அரசாங்கத்தின் படைகளால் தாக்கப்படும் மறவர்களோ, பின்வாங்கும்படி இடப்படும் ஆணையைச் சட்டை செய்யாதவர்கள், சாகப் பின்னிற்காதவர்கள். அவர்கள் தான் நம் நாடு ஈன்றெடுத்த திறமைசாலிகள், தீராதி தீரர்கள். அயர் மக்களின் விருப்பத்தை மிகுந்த பயபக்தியுடன் ஏற்று நடக்கக் கூடியவர்கள் அவர்கள். ஆனால் அன்னிய அரசாங்கம் ஒன்றின் கனை ஒன்றிற்குப் பயந்து அயர்நாட்டின் சுதந்திரத்தைப் பறிகொடுக்க என்றுமே அவர்கள் ஒப்பமாட்டார்கள்."

என்று கூறி முடித்தார்.

செய்தியொன்றைப் பத்திரிகைக்கு விடுப்பதோடு மட்டும் டி வேலரா நின்றுவிடவில்லை. ஒருசில தலைவர்களைப் போல் பத்திரிகைகளுக்குச் செய்தியைவிடுத்து விட்டுத் தமது மனைவி மக்களுடன் கொஞ்சிக் குலாவும் கபட தாரியல்ல ஏமன் டி வேலரா. உடனேயே குடியரசு இராணுவத்தின் மூன்றுவது பட்டாலியனை அடைந்து மீண்டும் தம்மை ஒரு போர் வீரனாகச் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டார்!

டப்ளினில் ஓகொனல் வீதியிலுள்ள ஓட்டல்கள் அனைத்தையும் முற்றுகையிட்டுக் குடியரசுவாதிகள் அங்கு தமது தலைமை நிலையத்தை அமைத்தனர். தளபதி திரேய்னர் திட்டங்கள் பலவற்றைத் தீட்டினார்.

## உள் நாட்டு யுத்தம் தலைவிரிகோலம்

ந்து நடைபெறும் என்று தெரிய வந்தது.

நிலைமையையுணர்ந்த மகளிர் கழகம் தமது உறுப்பினரை ஒன்று கூட்டியது. நான்கு முன்றில்களில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கும் தாதிமாருக்கும் உதவியாகப் பணிபுரிந்தது. மகளிர் கழக உறுப்பினர்கள் அஞ்சற்காரர்களாகவும் பணிபுரிந்தனர்.

வியாழக்கிழமை முழுவதும் தாக்குதல் நடைபெற்றது. ஆங்கில ஆட்சியினரிடமிருந்து பெரும் குண்டுகளை அரசாங்கம் வரவழைத்தது. டப்ளினிலிருந்த ஆங்கிலப் படைகளின் தலைவரான ஜெனரல் மக்றெடி இடைக்கால அரசாங்கத்திற்கு வாணக் குண்டுகளைக் கொடுத்து உதவினார். இவை யாவும் குடியரசுவாதிகளுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை காலை நான்கு முன்றில்களிலிருந்த கட்டடத்தின் வடபகுதி தீப்பிடித்தது. அப்பகுதியில் பெருந்தொகையான வெடிமருந்துகள் இருந்தன. அவற்றைக் குடியரசுப் படைஞர்கள் தென பகுதிக்குச் சுரங்

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

## சொந்தப் பத்திரிகையைக் குடியரசுவாதிகள் நடாத்தினர்

விகார்பில்ஸ்



விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
5. வீனா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹோல்
60, புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 ஒக்டோபர் மாதம் 27ந் தேதி

194 ஆ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## வகுப்புவாதக் கல்வித் திட்டம்

பள்ளிக்கூடங்களைத் தேசிய மயமாக்கிய அன்றே தொடங்கியது "தேசியக் கல்வி"ப் பிரசாரம். தேசியக் கல்வி என்ற இரு சொற்களையும் மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து முணுமுணுத்துக் கொண்டிருந்தார் முன்னாள் கல்வி மந்திரி. அது என்னவென்பதை அவராவது தெரிந்திருந்தாரோ என்னவோ! பெற்றோர்களுக்கென்றால், தேசியக் கல்வி இன்றும் ஒரு புதிர் தான்.

திடீரெனக் கல்வி மந்திரிப் பதவி கைமாறியது. புதிய மந்திரியும் வந்தார். அதே பல்லவியைப் பாடினார். கடைசியாக அதுபற்றி ஒரு வெள்ளை அறிக்கையும் சமர்ப்பித்துள்ளார்.

தொழில் நுட்பக் கல்விக் கமிஷன் சிபார்சுகளுக்கும், அண்மையில் வெளியான பல்கலைக் கழகக் கமிஷன் சிபார்சுகளுக்கும் மந்திரியின் வெள்ளை அறிக்கை நேர் முரணாக உள்ளது. ஆங்கிலத்தைக் கட்டாயப்பாடமாக்க வேண்டுமென்கிறது பல்கலைக்கழகக் கமிஷன். ஆங்கிலம் இஷ்டபாடமாக்கப்படும் என்கிறது வெள்ளை அறிக்கை.

மொழி வெறி, ஆட்சியாளரின் கண்ணை மறைத்துவிட்டது. சிங்களத்தை வளர்க்கும் போதையிலே ஆங்கிலத்தை அடியோடு புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆங்கிலம் உலகமொழி — அறிவுச் சுரங்கம். அதனைப் புறக்கணிக்கும் போக்கு பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்துமென பெற்றோர்கள் அஞ்சுகின்றனர்.

வெள்ளை அறிக்கையில் சிங்களம் இஷ்ட பாடம் என்று குறிப்பிட்டிருப்பது வெறும் கண் துடைப்பு. 'எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சிங்களம் கற்பிக்கப்பட வேண்டும், அதற்காகச் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்' என்பது மந்திரி சபை மொழிக் குழுவின் முடிவு. இஷ்ட பாடமென்றால் இந்த முடிவு ஏன்? வெள்ளை அறிக்கையில் இஷ்ட பாடமெனினும் நடைமுறையில் கட்டாயப் பாடமாகிவிடும் என்பதற்கு மொழிக் குழுவின் முடிவே சான்று.

இன வேற்றுமையின்றி எல்லாப் பிள்ளைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிப்போம் என்று மந்திரி பறைசாற்றுவது வெறும் பகட்டுப் பேச்சு. இதனை மந்திரிகளின் ஒவ்வொரு செயலும் தெளிவாக நிரூபித்துள்ளது.

மலைநாட்டில் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாம். ஆனால் அப் பாடசாலைகளிற் சிங்களமே போதனு மொழியாக இருக்குமென்கிறார் கல்வி மந்திரி.

இதைவிடப் பச்சை வகுப்புவாதம் வேறு என்ன இருக்க முடியும்? தோட்டத் தொழிலாளர்களோ தமிழர்கள். அந்தத் தமிழர்களின் பிள்ளைகளுக்குச் சிங்களத்தில் பாடபோதனையா? இது நயவஞ்சகச் செயல்; தோட்டத் தமிழ் மக்களைச் சிங்களவராக மாற்ற முயற்சி செய்யும் சதித்திட்டம்.

தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்த வேண்டும். தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கும் சிங்களப் பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கல்வி வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டும். போதனு மொழி தமிழாகவே இருக்க வேண்டும். இதுவே தோட்டத் தமிழர்களின் கோரிக்கை. தாய் மொழியைத் தவிர வேறு எந்தமொழியிலும் கல்வி கற்பிக்க யாருக்கும் உரிமை கிடையாது. எனவே தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளின் தொண்டையினுள் "தேசியக் கல்வி"யின் பெயரால் அன்னிய மொழியான சிங்களம் திணிக்கப்படுவதை இறுதி வரை எதிர்த்துப் போராடுவார்கள்.

ஒரு குறிப்பிட்ட மொழியை மட்டும் திணிக்கும் திட்டம் எப்படித் தேசியக் கல்வித் திட்டமாக முடியும்? அத்தகைய திட்டமொன்றில் தேசியம் இருக்கவும் முடியாது, தேசியக் கண்ணோட்டம் இருக்கவும் முடியாது. அது வெறும் வகுப்புவாதச் சதித் திட்டமாகவே இருக்க முடியும். ஆட்சியாளரின் எல்லாக் கல்வித் திட்டங்களும் சிறுபான்மையோருக்குப் பலவந்தமாகச் சிங்களம் கற்பித்து; அவர்களைப் படிப்படியாகச் சிங்களவராக்குவது என்ற வகுப்புவாதத் தீய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவைகளே.

"தேசியக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பைப் பௌத்த பிக்குகளிடம் விட வேண்டும். மீண்டும் பிரிவெனக் கல்வியைத் தொடங்க வேண்டும்" என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ஸ்ரீகம தர்ம வித்தியாலயத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

அப்படியானால் திரு. டட்லி இலங்கையில் முதற்தரக் கலாசாலைகளிலொன்றான சென்ட். தோமஸ் கல்லூரியில் ஏன் கல்வி கற்றார்? பின்னர் உயர்தரக் கல்வியைப் பெற லண்டனுக்குச் சென்றார். ஒரு பிரிவெனவிலேயே அவர் தன் கல்வியைக் கற்றிருக்கலாமே! இது சிங்கள அரசர்கள் காலமா எல்லோரும் பிரிவெனவில் கல்வி பயில? உயர்தர விஞ்ஞானக் கல்வியையும் கூடப் பிக்குகளிடம்தான் படிக்க வேண்டும் போலும்.

"சிறுபான்மையோரும் பிரிவெனக்களுக்குத்தான் செல்ல வேண்டும்—அப்படியில்லையேல், தேசியக் கல்வித் திட்டம் சிங்களவர்களுக்கு மட்டுமே". இவ்விரண்டிலொன்றே ஐ. தே. கட்சித் தலைவரின் கருத்தென்பது அவரது பிரசங்கத்திலிருந்து தெளிவாகிறது.

இதுதானா சிங்களத் தலைவர்களின் தேசியக் கல்வித் திட்டம்? இத்தகைய ஒரு திட்டம் தமிழ் பேசும் இனத்தையே அழித்துவிடும் என்பதைக் கூறவா வேண்டும்?

# சாதிக் கொடுமை சரிகிறது

## பாத யாத்திரையின் பலாபலன்

தமிழ் மக்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கிய சாதிச் சனியனைச் சாடும் பணியினைப் பலர் பல வழிகளில் மேற்கொண்டிருப்பினும், தமிழரசுக் கட்சியே இக்கொடுமையை அகற்றத் தீவிரமாகப் பணிபுரிந்துள்ளது. பாதயாத்திரையின்போது மேற்படி செயற்திட்டம் பூரணத்துவம் பெற்றுள்ளது. சாதியைச் சாக்கிட்டுச் சுயநலவேட்டை ஆடி வந்தவர்கள் பாடு திண்டாட்டமாகி விட்டது.

காந்தி அடிகளின் போராட்ட முறைகளையே ஆதாரமாகக் கொண்டு தமது போராட்டப்பாதைகளையும் அமைத்துக் கொண்டுள்ளது இலங்கைத் தமிழரசுக்கட்சி. மக்களை நெருங்கி, அவர்கள் மத்தியில் அறப் போராட்டத்துக்கான ஆயத்தங்களைச் செய்யும் வண்ணம் பாத யாத்திரைத் திட்டத்தை ஏற்படுத்தியது. காந்தி அண்ணல் அவதரித்த அக்டோபர் 2ம் திகதியன்றே அன்னாரின் புனித அஸ்திகள் கரைக்கப்பட்டு மேலும் புனிதமடைந்த கீரிமலையிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரை காங்கேசன்துறை, உடுவில், நல்லூர், வட்டுக்கோட்டை ஆகிய தொகுதிகளில் 16 நாட்களைச் செலவிட்டுக் காரை நகரை அடைந்தது.

பதினறு நாட்கள் நடைபெற்ற பாத யாத்திரையின் பலாபலன்கள் என்னவென்பதைவிட்டு ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

### மாண்டுவரும் தீண்டாமை

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உருக்குலைக்கும் கேவலத்தை உண்டாக்கியிருப்பது தீண்டாமையாகும். தீண்டாமைப் பேயை வேரோடு சாய்த்துத் தமிழ்ச் சாதியின் சாபத் தீட்டை அகற்ற அன்று தொட்டு இன்றுவரை பல பெரியார்கள் அரும்பாடுபட்டுழைத்து வந்துள்ளனர். ஆனால் போதுமான பலன் கிடைத்ததாகத் தெரியவில்லை.

தீண்டாமையை அகற்றுவதற்குப் போதுமான அறிவு மக்களிடம் வளர்ச்சி அடையவில்லை, என்ற காரணம் சுட்டிக் காட்டப்படுகிறது. பேரறிஞர்கள், கல்விமான்கள், கல்ஞானிகள் பல்கிப் பெருகியிருக்கும் யாழ்ப்பாணத்தில்தான் சாதிக் கொடுமை தலைவிரித்தாடுகிறது. சாதிக் கொடுமையின் கோரத்தனத்தைப் பகுத்துணர்ந்தறியாதவர்கள் இல்லை. ஆனால் அந்தக் கோரத்தை அகற்ற "பூனைக்கு மணி கட்டுவது யார்?" என்ற கேள்வியே தலைதூக்கியுள்ளது.


சாதியை ஒழிக்கவும், சமதர்மத்தை நிலைநாட்டவுமே அயராது பாடுபடுகிறோம், என்று தம்பட்டமடிப்பவர்களை நாம் பார்க்கிறோம். உண்மையில் சாதியைத் தொலைத்துத் தலைமுழுகிவிட இவர்களுக்கு உறுதியான உள உரம் இருப்பதாகத் தெரியவில்லை. சாதிப்பாகுபாடு சமூகத்தில் இருப்பதையே சுட்டிக்காட்டிக் கொண்டு, அதையே தத்தமது சுயநல வேட்டைக்கு ஆதாரக் கருவியாக்கிக் கொண்டு வாழும் பலரைக் காண முடிகிறது. சில அரசியல் கட்சிகளும் சமூக சங்கங்களும் சாதியை வைத்தே தங்கள் வளர்ச்சியைப் பெருக்குகின்றன. தனிப்பட்ட நபர்கள்கூட இந்தத் தீண்டாமையைக் கூறிக்கொண்டு வயிறு வளர்க்கின்றனர் என்றால் மிகையாகாது.

சொல்லுவது மட்டில் நில்லாது தீவிரமான செயலிலும் ஈடுபட்டு, சாதிக் கொடுமையை ஒழிக்க முயலும் ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சிதான் என்பதை அண்மையில் நடந்து முடிந்த பாத யாத்திரையின் முடிவாவது கட்டம் மக்களுக்கு ஐயந்திரிபற நிரூபித்துவிட்டது.

தமிழரசுக் கட்சி, ஆரம்பித்த காலத்திலிருந்தே சாதி ஒழிப்புக்கான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தி வந்திருக்கிறது. இதுகாலவரை இத்துறையில் எடுத்துக் கொண்டு வந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரமாக அமைவது பாத யாத்திரை என்று துணிபுடன் கூறலாம்.

பாதயாத்திரையின் போது தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் மக்கள் அனைவரும் எதுவித பாகுபாடுமின்றி உபசாரங்கள் செய்தனர். அவர்களும் உபசரணைகளை ஏற்றனர். இந்த நிலையில் மக்களின் மனமாற்றத்தையும், சௌஜன்ய உறவும் ஒற்றுமையும் வளர இடமுண்டு என்பதையும் காண முடிந்தது.

தீண்டாமை ஒழிப்பில் 'பூனைக்கு மணி கட்டும்' பணியை தமிழரசுக் கட்சியே மேற்கொண்டு விட்டது என்று கொள்ளலாம். இதே வேளையில் சாதி ஒழிந்துவிட்டால் நமது சதி வேலைகள் சீரழிந்து விடுமே! தங்கள் வளர்ச்சிகள் தடைப்பட்டு விடுமே! வயிறு வளர்க்க முடியாதே! என்று வயிறெரியும் கூட்டம் விஷமத்தனமான வீண் புரளிகளைச் செய்யத் தலைப்பட்டிருக்கிறது.



பதினறு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற பாத யாத்திரையில் பங்குபற்றிய பாலகன், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கத்தின் புதல்வன் காண்டீபன், காரைநகர் பிள்ளை மடத்தடி வரவேற்பின்போது தனது தாயார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் மடியில் படுத்து உறங்க முயற்சிக்கிறான்.

சிறுபான்மை மக்களின் அவலத்தை ஆதாரமாக — மூலதனமாக வைத்துக் கொண்டு உழலுபவர்கள்தான் இந்த விஷமத்தனமான பொய்ப் பித்தலாட்டங்களைச் செய்து வருகின்றனர் என்பதை மக்கள் உணர்ந்து விட்டனர். தமிழரசுக் கட்சியின் அந்தரங்க சுத்தியான — ஆணித்தரமான கொள்கையில் அசைக்க முடியாத பற்றுக் கொள்ள மக்கள் தலைப்பட்டு விட்டனர்.

உடன் பிறந்த சகோதரர்களை ஒரே அணியில் சேர்த்து இணைத்து அணைத்துக்கொண்டால்தான் உரிமைப்போரில் வெற்றி பெறலாம் என்பதை யாவரும் அறிந்துவிட்டனர். கோயில்களைத் திறந்துவிடவும், சரிசமமான உரிமைகளை வழங்கவும் மக்கள் தயாராகி விட்டனர்.

"தேசியக் கல்வி" என்ற பெயரால் மற்றொரு தகிடுதத்தம் நடைபெறவிருக்கிறது. அடுத்த ஜனவரியில் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பாடசாலைகளில் பாரதூரமான மாற்றங்களைச் செய்யப் போகின்றனராம்.

இந்த மாற்றத்தால் தமிழ்ப் பாடசாலைகள் சில, அடியோடு மூடப்படவிருக்கின்றன. இலங்கையில் மிகச் சிறந்த ஆரம்பப் பாடசாலையெனக் கருதப்படும் றோயல் ஆரம்ப பாடசாலையைச் சிங்களப் பிள்ளைகளுக்கு மட்டும் தாரை வார்த்துவிட்டு, தமிழ்ப் பிள்ளைகளைக் கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு பாடசாலைக்கு மாற்றப் போகின்றனராம். றோயல் ஆரம்பப் பாடசாலையின் கல்வித் தரமோ, அங்குள்ள வசதிகளோ இப்புதிய பாடசாலையில் நிச்சயம் இருக்க முடியாது.

அத்தோடு, றோயல் ஆ. பாடசாலையைச் சிங்களவர்களுக்கு மட்டும் ஒதுக்கிவிட்டால் அவர்கள் ஆரம்பக் கல்வி முடிந்ததும் றோயல் கல்லூரியில் சேர்ந்து, உயர்தரக் கல்வியைப்பெற வசதி ஏற்படும். அந்த வாய்ப்பையும் தமிழ்ப் பிள்ளைகளிடமிருந்து அபகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இது முற்றிலும் தமிழர்களுக்கெதிரான வகுப்புவாத நடவடிக்கையே.

"தேசியக் கல்வி" எனக் கூறிக்கொண்டு தமிழ் பேசும் [illegible] பாழ்படுத்தும் பொருட்டு, [illegible] கொண்டு வரப்படும் பாரபட்சமான வகுப்பு [illegible] எல்லாம் எதிர்த்து முறியடிக்கவேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் படிக்க நான் விரும்பவில்லை

## படி உயர்வு நிறுத்த வழக்கில் கோடீஸ்வரன் சாட்சியம்

சிங்கள மொழியில் தேர்ச்சிபெறாத காரணத்தினால், தனது வருடாந்தப் படி உயர்வு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. செல்லையா கோடீஸ்வரன் அவர்கள் இலங்கை அரசின் பிரதிநிதியான அட்டர்னி ஜெனரலுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள வழக்கு கடந்த திங்கட்கிழமை, கொழும்பு பதில் மாவட்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மூன்று தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. விசாரணையின் பின், வழக்கு எதிர்வரும் நவம்பர் 14-ம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் முதல் சாட்சியாகத் திறைசேரிப் பதில் துணைச் செயலாளர் திரு. பாலசிங்கம் விசாரணை செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் முன்னாள் நிரந்தரக் காரியதரிசியான சேர். கந்தையா வைத்தியநாதன் மனுதார் சார்பில் சாட்சியமளித்தார்.



திரு. செ. கோடீஸ்வரன்

### வைத்தியநாதன் சாட்சியம்

அவர் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

தமிழர்கள் இந்நாட்டில் நிரந்தர சமுதாயமாக உள்ளனர். அவர்களின் மொழி தமிழ். தமிழ் சமுதாயத்தில் இரு பிரிவுகள் உண்டு. அவையாவன: இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள். முஸ்லிம் சமூகத்தின் மொழியும் தமிழேயாகும்.

அரசாங்க மொழிச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாட்டின் நிர்வாகம் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வந்துள்ளது. நான் பதவியில் இருந்த காலத்தில் நிர்வாகம் முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வந்தது. எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மொழி மூலம் கடமையாற்றும்படி நான் வேண்டப்படவில்லை.

குறுக்கு விசாரணையின் போது அவர் மேலும் கூறியதாவது: நாட்டில் கல்வி தாய் மொழி மூலமே புகட்டப்படுகிறது. தமிழ் பேசும் மாணவன் ஒருவன் தமிழ் மொழி மூலமே கல்வி புகட்டப்படவேண்டும், காரணம் அவர்களின் மொழி தமிழாகும்.

### நேசையா சாட்சியம்

அடுத்து இலங்கைப் பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. நேசையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

தமிழர்களுடைய தாய் மொழி தமிழ். சிங்களவர்களுடைய தாய் மொழி சிங்களம். பரிமாறலின் கருவியாக மொழி பயன்படுகிறது. ஆழ்ந்த நிலையில் மொழி மனிதனுடைய தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. பள்ளி செல்லும் பிள்ளைக்குத் தாய் மொழி மூலம் கல்வி புகட்டப்பட்டால் பல நன்மையுண்டு.

அரச கரும மொழிச் சட்டம் தமிழ்ச் சிறார்களின் மீது திணிக்கப்பட்ட ஒரு சுமையாகும். ஆனால் இந்த நிலை சிங்களச் சிறார்களுக்கு ஏற்படவில்லை. ஒரு மொழியில் சிந்தித்து பிறிதொரு மொழியில் எழுதுவது ஒருவருக்கு மிகவும் கடினமாகும்.

மேலும் அவர் குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது:

பெருந்தொகையான மக்கள் தாய்மொழியில்லாத பிற மொழிகளைக் கற்பதில் ஆர்வம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். சிங்களத்தைப் படித்துக்கொள்ள முடியாத தமிழர்கள் பெருந்தொகையினர் உள்ளனர்.

ஒருவர் ஆங்கிலத்தைச் சிறு பிராயத்திலிருந்தே கற்று வந்தவராகவும், ஆங்கில நாகரிகச் சூழலில் வளர்ந்தவராகவும் இருந்தால் ஆங்கிலம் அவரது தாய் மொழியில்லாத போதிலும், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவருடன் போட்டியிட முடியும். எனினும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் முன்னையவரைவிடப் பல நன்மைகளைப் பெறுவர்.

சிங்களம் மட்டும் நாட்டின் அரசகரும மொழியாக இருப்பதை நான் எதிர்க்கிறேன். சிங்களம் நாட்டின் உத்தியோக மொழிகளில் ஒன்றாகவோ அல்லது நாட்டின் முதலாவது உத்தியோக மொழியாகவோ இருப்பதை நான் எதிர்க்கவில்லை.

### கோடீஸ்வரன் சாட்சியம்

மனுதார் திரு. செ. கோடீஸ்வரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

ஒரு காலத்தில் சிங்கள மொழியில் உள்ள சகல எழுத்துக்களையும் சாதாரண வழக்கில் உள்ள சிங்களச் சொற்களையும் தெரிந்திருந்தேன். இவை சிங்களத் தகுதிப் பரீட்சையின் முதல் பகுதியில் சித்தியடைவதற்குப் போதுமானதாக எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் அப்பரீட்சையில் தோற்றியிருந்தால் நான் தேர்ச்சிபெற்றிருப்பேனா இல்லையா என்று கூற முடியாது. சேவையில் உள்ள காலத்திலேயே எனது 'கலை இளைஞன்' (பி. ஏ.) பரீட்சையில் சித்தியடைந்தேன்.

### வழக்கு எடுத்துரைப்பு

சிங்களம் படிக்க விருப்பமில்லாத காரணத்தினால், நான் சிங்களப் பரீட்சையில் சித்தியடையவில்லை.

திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. ஆரம்பத்தில் வழக்கை எடுத்துரைக்கையில் 'எந்தவொரு மதத்தையோ அல்லது இனத்தையோ சேர்ந்த தனி நபருக்கு வழங்கப்படும் அதே உரிமைகளை மற்றொரு மதத்தையோ அல்லது இனத்தையோ சேர்ந்த ஒருவருக்குக்கிடைக்காதபடி தடைசெய்யக் கூடியவாறு சட்டமியற்றும் அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்துக்குக் கிடையாது,' என்று கூறினார்.

## ஐ. நா. வுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகையில் முப்பது சதவீதமான மக்களின் மொழியாகிய தமிழுக்கு உத்தியோக அந்தஸ்தை மறுத்து, சிங்களத்தை மாத்திரம் உத்தியோக மொழியாக்கும் உத்தியோக மொழி மசோதாவையும் குறிப்பிட விரும்புகிறோம். இன்று, மோசமான மொழிப் பிரச்சினை ஒன்றில் இலங்கை அகப்பட்டுள்ளது. பாரபட்சத்தை இலங்கைச் சட்டங்கள் அனுமதிக்கவில்லை என்று கூறுவது முற்றிலும் பொய்யாகும்."

தமிழ்

## அரசாங்க ஊழியர் மாநாடு

## திறைசேரி சுற்று நிருபம் பற்றி ஆராயப்படும்

தமிழ் அரசாங்க ஊழியர் சங்க ஆதரவில் எதிர்வரும் 28-ம் திகதி திங்கட்கிழமை மாலை ஆறு மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், சகல தமிழ் அரசாங்க ஊழியர்களும் அடங்கிய மாநாடு ஒன்று நடைபெறும். இம் மாநாடு கலாநிதி வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

அமைச்சரவை முடிவையொட்டி திறைசேரி அரசாங்க ஊழியர்களுக்கு அண்மையில் அனுப்பிய சுற்று நிருபம் பற்றி முக்கியமாக ஆராயப்படும். மேலும் அரசாங்க ஊழியர் சம்பந்தமாக உள்ள சட்ட நடவடிக்கை பற்றியும் ஆராயப்படும். திறைசேரி சுற்று நிருபம் சம்பந்தமாக எத்தகைய முடிவையும் கூட்டத்தின் முடிவைப் பின்பற்றி முடிவு செய்வது சகல அரசாங்க ஊழியர்களுக்கும் பயனைக் கொடுக்கும்.

தமிழ் அரசாங்க ஊழியர் சார்பில் இம் மாநாடு நடைபெற்ற பொழுதிலும், அங்கத்தவர்கள் அல்லாத சகல தமிழ் அரசாங்க ஊழியர்களும் மாநாடுக்கு அழைக்கப்படுகின்றார்கள்.

## சிறுபான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால், பாதகமான சொத்துக்களை நீக்கிவிடுக என்று சுகாதார அமைச்சர் ஜனாப் பதியுத்தீன் மஹ்மூது பல தடவைகளில் மந்திரிசபையிடம் கோரியதாகவும், ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லையென்றும் அறியப்படுகிறது.

படிப்படியாகச் சிறுபான்மை மக்களின் சகல உரிமைகளையும், என் உடைமைகளையுமே அபகரித்து விட்டு, பெரும்பான்மை இனம் மட்டும் ஏகபோக உரிமையுடன் இந்த நாட்டில் வாழ வழி வகுக்கும் வகையிலேயே சட்டங்களும் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு [illegible] முகர் மேலும் கூறினார்.

தமிழ் ஊழியர்

## நிர்ப்பந்த ஓய்வுக்கு ஆட்சியாளர் திட்டம்

### பொறுத்திருக்கும்படி அ. எ. வி. சங்கச் செயலாளர் வேண்டுகோள்

தமிழ் அரசாங்க ஊழியர்களை நிர்ப்பந்தமாக இளைப்பாறச் செய்யும் மறைமுக நோக்கத்துடன் திறைசேரி அண்மையில் அவர்களுக்கு ஒரு சுற்று நிருபத்தை அனுப்பி வைத்துள்ளது. இது பற்றி சட்ட வல்லுனர்களின் ஆலோசனையை அரசாங்க எழுது வினைஞர் சங்கம் நாடியுள்ளது. அந்த முடிவு வெளியாகும் வரை சகல அரசாங்க ஊழியர்களையும் எத்தகைய விளக்கமும் அச் சுற்று நிருபத்திற்கு கொடுக்க வேண்டாம் என்று அரசாங்க எழுது வினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் வேண்டியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு அண்மையில் அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபம் ஒன்றில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறத் தவறியது பற்றி விளக்கம் கோரப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கத்தைப் பயன்படுத்தி, அவர்களை நிர்ப்பந்தமாக இளைப்பாறச்செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் மறைமுக நடவடிக்கை இது என்று தெரிய வருகிறது.

இதுபற்றி அரசாங்கஎழுது வினைஞர் சங்கப் பொதுச் செயலாளரிடம் நமது நிருபர் வினவிய பொழுது அவர் கூறியதாவது:-

'இச் சுற்று நிருபம் பற்றி சட்ட வல்லுனர்களின் ஆலோசனையை நமது சங்கம் நாடியுள்ளது. அவர்களின் முடிவு வெகு விரைவில் கிடைக்கும்; சட்ட ஆலோசகர்களின் முடிவு வெளியானதும் சங்க உறுப்பினர்களுக்கு இது தெரிவிக்கப்படும்' என்பதே.

மேலும் 'சட்ட வல்லுனர்களின் முடிவு தெரியும் வரை எந்தவொரு அரசாங்க ஊழியரையும், அவசரப்பட்டு இச் சுற்று நிருபத்திற்கு விளக்கம் கொடுக்க வேண்டாம்' என்று அவர் வேண்டியுள்ளார்.

இச் சுற்று நிருபத்திற்கு விளக்கம் கொடுப்பதற்கு கால எல்லை எதுவும் குறிப்பிடப்படாமையால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் எத்தகைய திடீர் முடிவிற்கும் வரவேண்டிய நிர்ப்பந்தம் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஆங்கிலப் பாடசாலை, திருகோணமலை.

'விடயம்: 'நமது பொருளாதாரம் உயர...'

சா. அப்துல் சமத், இந்துக் கல்லூரி, திருகோணமலை.

விடயம்: 'காந்தி அண்ணல்.'

### பதுளை மாவட்டம் முதற் பரிசு

க. இராமசாமி, புனித பீட்ஸ் கல்லூரி, பதுளை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்.'

### இரண்டாம் பரிசு

அ. மீ. சா. முகமட்நியால், அ. த. க. பாடசாலை, பசறை, பதுளை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்'.

### மூன்றும் பரிசு

க. சரோஜா, 96, பதுளைவீதி, ஆலி-எல. பாடசாலை: புனித ஊர்சுலாஸ் கன்னியார் மடம், பதுளை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்'.

### பாராட்டுக்குரியவர்கள்

கு. பாலகணேசன், ஊவாக் கல்லூரி, பதுளை.

விடயம்: 'தமிழ் மொழி வாழ்வும் வளமும்'.

ஆ. இராசலிங்கம், குவீன்ஸ் டவுண், ஆலி-எல பாடசாலை: மகிந்தாக் கல்லூரி, உடுவரை.

விடயம்: 'காந்தி அண்ணல்'.

வே. தங்கராஜ், புதிய நாகவத்தை, கீழ்ப் பிரிவு, பண்டாரவளை. பாடசாலை: புதிய நாகவத்தை தமிழ் கலவன் பாடசாலை, பண்டாரவளை.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோரின் நிலை'.

ச. கணபதி, அ. த. க. பாடசாலை, பசறை, பதுளை.

விடயம்: 'பாரதிக்குப் பின்...'

இ. திருநாவுக்கரசு, 7வது கோட்டக் குடை, ஸ்பிரிங் வல்லி.

விடயம்: 'காந்தி அண்ணல்'.


**பரீட்சையில் சித்தியடையுங்கள்**

மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைவதற்கு (9-11-63) உதவுமுகமாக பட்டதாரி ஆசிரியர்கள் தயாரித்துள்ள தமிழ் மொழி, பொது விவேகம், பொது அறிவு ஆகிய மூன்று பாடங்களுக்குமான மாதிரி வினா விடை அடங்கியுள்ள ஒரே புத்தகம்

ரூபாய் 5-00

தபால் செலவு சதம் -/50

சர்வகலாசாலை

போதனா கழகம் (U.T.I.)

(மேல் மாடி)

540, மருதானை வீதி, கொழும்பு-10.



**தேவை**

பின் வரும் ஊர்களில் 'சுதந்திரன்' விற்பனை செய்ய, முன்பணங் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

மாங்குளம்
காரை நகர் (வ.மா.)
காரை தீவு (கி. மா.)

உப்புவெளி
வாழைச்சேனை
மீசாலை

நிர்வாகி,
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் பாகம்

## கதிர் ஒன்று

## மாலை இரவு




உலகம் என்பது தான் என்ன? ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கற்பிப்பதனால் தான் உலகம் என்று ஒன்று தோன்றுகிறது. 'உண்மைத் துவம்' பெறுகிறது. வாழ்க்கையை 'வெறுமை' யாக்கி விடுபவனுக்கோ உலகம் என்று ஒன்று இருப்பதில்லை. எனவே உலகம் என்பது கற்பனை வாதம் தானே?

இத்தகைய உலகில் வரையப்படும் கானல் கோடுகளா, இலட்சியங்கள்!

உலகில் இருளும், ஒளியும் மாறி மாறித் தோன்றுகின்றன. இருள் வரும்போது தனக்குத் துணை யார்? அருகிருப்போர் யார்? அன்புரைப்போர் யார்?... என்று தெரிவதில்லை. உண்மைக்கும், பொய்மைக்கும் வேறுபாடு புரிவதில்லை. இருளில் இருளாகி, புரியாது திணற வேண்டியதுதான்.

ஒளி வரும்போதோ, உண்மை புலனாகிவிடுகின்றது. அருகே துணையில்லாவிட்டாலும் தன்னிலிருந்து நீளும் நிழலாவது தனக்குத் துணையிருக்கிறதேயென்ற— தன் மனத்தைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் பொய்த் திருப்தியாவது ஏற்படும். ஆனால்....

ஒளியகன்று, நிழல் குறுகிக் குறுகி, கரிந்து விட்டால்...?

ராஜாவுக்கு அந்தி வானக் கருஞ் செம்மை நிறத்தினூடாக, ஒரு மின்னல் பொறி நீளுவதாக...

அதன் ஆயுட்காலம் எத்தனை விநாடிகளோ?...

செம்மை நிற வானத்திலே........அடிவாரத்துக்கப்பால்......மின்னும் கணப்பொழுது இடை வெளியில்... தன்னை இனங்காட்டி....புன்முறுவல் சிந்தி...பாசக் குரல் எழுப்பும்...அவள்!...

சரசு!...

மனிதன் வாழத்தான் வேண்டும்! அவன் தோல்வியில் இன்னொரு வெற்றியும் ஆரம்பமாகலாம்!...

நிலையற்ற உலகில் எது தான் சதம்!......இதற்கிடையில் வாழும் சில நாட்களில்., கண நேரம் துணையிருக்க வேண்டுமென விரும்புபவர்கள் கிடைக்காவிட்டால்... வாழும் சில நாட்களையும் குறுக்கிக் கொள்வதா?...

புவனம் திடீரென இறந்து விட்டிருந்தால்...

நானும் இறந்திருப்பேனா?. கதறியிருப்பேன்!...கலங்கி இருப்பேன்!...கால நெறியில் மீண்டும் வாழ்வைத் தொடங்க முயன்றிருப்பேன்!...

அதைப் போலத்தான் இதுவும்!...

அவளே வாழத் துணிந்து விட்டபோது!......ஒரு பெண்ணுக்கே இவ்வளவு உறுதி...

துணிச்சலென்றால்!.....எனக்கு!......

நான் ஆண்பிள்ளை!...

வாழ்க்கை என்னும் சத்திரத்தில் துணையிருக்க வந்த ஒருத்தி, அவனிடத்தையே காலி செய்து, இன்னொருவனுக்கு இடமளித்து விட்டாள்!...

அவனிடத்தே வாழ்வு தேடி ஒன்ட ஒருத்தியையும், முன்னவனுக்காகத் துரத்தி விட்டு, இருளோடு இருளாக தனிமையின் கோரப்பிடியில் அவன்!

தூரத்தியவளைத் தேடிப் பிடிக்க வேண்டியதுதான்!...

வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயமா?...

* * *

பாலாவுக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது!

...எதற்காக என்னைச் சரசு சந்திக்கச் சொன்னாள்!...'

—அவளும் அவனும் விரிவுரைகளின் போதும், 'ரியூடோறியல்' வகுப்புகளின் போதும் அடிக்கடி சந்தித்துக் கொள்வது வழக்கமாயினும், ஒரு போதும் பேசிக் கொள்வது வழக்கமில்லை. அவனுக்கோ, அவளுடன் ஓரறையிலேயே விரிவுரை கேட்பதில் ஒரு அமைதி கலந்த மகிழ்ச்சி. விரிவுரை நடந்து கொண்டிருக்கும் போதெல்லாம், அவனது திருட்டு விழிகள் அவளையே மேய்ந்து கொண்டிருக்கும்.

அவளை.. அவள் பின்னலில் சூடியிருக்கும் மணமற்ற மஞ்சள் பூவை......அல்லது சிவப்பு 'ரிபனை' அவன் கண்கள் மோகத்தில் தழுவிக் கொடுப்பதை, உணராமல் அவள் விரிவுரைக் குறிப்புகளை எடுத்துக் கொண்டிருப்பாள்.

'என்ன பாலா 'சைக்கோ' வா'விரிவுரையைக் கவனி!...' —என்று அவன் அறை நண்பன் கேலி கலந்த உரிமையுடன், பல்கலைக் கழகப் பரிபாஷையில், கண்டிக்கும் போது, முன்னிருக்கும் சில மாணவிகள்யதேச்சையாகத் திரும்புவது போல் திரும்பி, அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவன் முகம் சிவக்கும்.

**செம்பியன்செல்வன்**

'ரியூடோறியல்' வகுப்பில் அவளிடம் உயர்ந்த அபிப்பிராயத்தைப் பெற வேண்டுமென்ற வகுப்பில் அவன் எவ்வளவோ பாடுபட்டு, மிகச் சிறந்த கட்டுரைகளை எழுதி வருவான். அவற்றை மற்ற மாணவிகள் போட்டி போட்டு வாங்கும் போது, அவள் மட்டும் தூர நின்று வேடிக்கை பார்ப்பாளே யொழிய, ஒரு போதும் அவனிடம் அவள் வந்து கட்டுரை கேட்டது இல்லை.

அவன் மனம் கசந்து வழியும்!

சில வேளைகளில் எதிரெதிரே சந்தித்துவிட்டால், ராஜுவின் நண்பன் என்ற உணர்வில் அவள் விழிகள் அவனை மேலெழுந்தவாரியாகத் தடவிச் செல்லும் போதெல்லாம்—

அவன் இருண்ட மனவானில் வானத் தாமரை ஒன்று புஷ்பிக்கும்!

ஆனால் இன்றோ!...

'எதற்காக என்னைக் கூப்பிட்டாள்!... எதற்காக என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னாள்!...ஒரு வேளை ...ராஜு என்னைப் பற்றி ஏதாவது அவளுக்கு எழுதியிருப்பானோ?...'

'ராஜு...! நான் பாக்கியசாலியடா!... உன்னை நண்பனாகப் பெற்றதுக்கு என்ன தவம் செய்தேனோ?...'— களிப்பின் நன்றியுணர்வில் நெஞ்சம் ராஜுவுக்கு அஞ்சலி செய்கிறது.

காலையில் பாலா 'றெபரென்ஸ் செக்ஷனில்' இருந்து அடுத்த நாள் கட்டுரை வகுப்புக்கான, கட்டுரையை எழுதுவதற்கு குறிப்புகள் சேகரித்துக் கொண்டிருக்கிறான்.

'எக்ஸ்கியூஸ் மீ!...'—என்ற குரல் தயக்கத்துடன் மெதுவாக ஒலிக்கின்றது. அவன் திடுக்கிட்டு நிமிர, எதிரே நிற்பவள்—

சரசு!

—அவன் முகம், நெஞ்சமெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறது. வெளியே மழை கொட்டிக்கொண்டிருக்கிறது.

'உங்களுடன் ஒரு விசயம் கதைக்க வேணும்!... பின்னேரம் என்னை ஒருக்கா சந்திக்க [illegible]

'அப்படியானால் உங்களை 'ஹொஸ்டல்' வந்தே!...'

'வேண்டாம்... வேண்டாம்... அங்க இருந்து கதைக்க இயலாது!... அங்க இருக்கிற வானரங்கள் வேறு விதமா எண்ணிக் குசுகுசுக்குங்கள்!...'ஆட்ஸ் புளொக்'குக்கு முன்னால சந்திப்பமே!...'

'ஓ!...'—என்று தலையாட்டுகிறான்.

இப்போது அவன் தன் மண்டையைப் போட்டு உருட்டிக் கொள்கிறான்.

'எதற்காக வரச் சொன்னாள்?'

—பாலா தனது ஆடையை ஒருமுறை கண்ணாடிக்கு முன் நின்று சரிபார்த்துக் கொண்டு வெளியேறுகிறான்.

* * *

மாலைப் பொழுது, புகாருடன் கலந்து, கவிந்து கொண்டிருக்கிறது. ராஜு நடந்து கொண்டிருக்கிறான். பல்கலைக் கழகத்தினூடாக செல்லும் 'பஸ்'ஸை தவறவிட்டதால், அவன் பேராதனைப் பூந்தோட்டத்தினினூடாக நடக்க வேண்டியதாயிற்று. மாலைப் பொழுதில் அப்படி நடப்பதும் நொந்த மனதுக்கு ஆறுதலைப்பதாகத்தான் இருக்கின்றது.

பல்கலைக் கழக பூங்காவிற்குள் காலடி பதிக்கையில், புதிய உலகில் பிரவேசிப்பது போல், மனமும், விழிகளும் மயங்குகின்றன. சாலையோர மின்சார விளக்குகள், கவிந்து வரும் இருளை அணு அணுவாகச் சிதைத்து உருவழிக்கின்றன. ஒளியில் சாலையோர மரங்களின் மலர்களின் வர்ணங்கள்...மஞ்சள்...சிவப்பு...வைலட்...என மின்னுகின்றன.

ராஜு நடந்து கொண்டிருக்கிறான்!...

எதிரே சாரி சாரியாக, மாணவ மாணவிகள்!...

காதலர்கள் கைகோத்துக் கொண்டு!...

'இவர்களில் எத்தனை பேர் தான் வாழ்க்கை பூராவும் கைகோத்து இலவார்களோ!...'—ராஜுவின் நெஞ்சம் பெருமூச்சு விடுகிறது.

பாலாவின் மண்டபம் வந்துவிடுகிறது.

"பாலா!..."

"யாரது!..."—என்று கதவைத் திறப்பவன், புதியவன்.

"என்ன வேண்டும்!..."

"பாலசுப்ரமணியம் இந்த அறையில் தானே...பன்னிரண்டாம் நம்பர் அறை..."

"இது தான்...... யாழ்ப்பாணத்தில இருந்து வாறீங்களா... உள்ள வாங்க... இது தான் அவற்றை அறை...... நான் அவரோட கூட இருக்கிறனான். நானும் யாழ்ப்பாணந்தான்!..." அறை நண்பன் தன்னை அறிமுகப் படுத்துகிறான்.

"என் பெயர் ராஜகோபால்...... ராஜா என்டு கூப்பிடுவார்கள்...... பாலா இப்ப எங்க போயிட்டார்... அவர் வரக் கன நேரமே செல்லும்?...'

'எனக்குத் தெரியாது...... யாரையோ அவசரமாச் சந்திக்க வேணும் எண்டு சொல்லிக் கொண்டிருந்தவர்...... ஒருவேளை 'வாக்' போயிருப்பார்...... நீங்க அவசரமாப் பாக்கெணு மெண்டா... உந்த ரோட்டால நேராகப் போனா 'ஆட்ஸ் தியேட்டர்' வரும்...அதில 'பரபெட்'டில் இருந்து அவர் கதைச்சுக் கொண்டிருப்பார்!...' —நண்பன் வழிகாட்ட, ராஜா, பாலாவைத் தேடிச் செல்கிறான். அங்கே—

பரபெட்டில் — மதில் சுவரில் — அமர்ந்து பாலா, எந்தப் பெண்ணுடன் கதைச்சுக் கொண்டிருக்கிறான்?

மங்கிய ஒளியில், பெண்ணை இனங்கண்டு விட்டபோது, ராஜாவின் தலை — பொறி கலக்கிவிட்ட பிரமையில் சுழல்கிறது.

* * *

பாலா சரசுவுக்காகக்காத்திருக்கிறான். அவளை இன்னும் காணவில்லை.

'ஒரு வேளை மறந்திருப்பாளோ!...... சே! அவளே வரச்சொல்லி விட்டு மறப்பாளா?...' என்ற சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, 'கலகல'வென்று நகைக்கும் ஓசை கேட்டுத் திரும்புகிறான்.

சரசு தனது சில தோழிகளுடன் வருகின்றாள்.

'நீண்ட நேரமா உங்களைக் காக்க வைத்து விட்டேனா?... மன்னித்து விடுங்க!......' — என்று அவனிடம் கூறியவாறு, தன் தோழிகளைப் பார்க்கிறாள்.

'ஓல்ரைட்!...... வித் தி பெஸ்ட் விஷ்ஷெஸ்' என்று குறும்பாகக் கூறியவாறு தோழிகள் விடை பெறுகின்றார்கள்.

'நீங்கள் எதற்காக என்னை வரச் சொல்லியிருந்தீர்கள்?...' என்று பாலா தனது கேள்வியைக் கேட்டு முடிப்பதற்கிடையில் மனம்தான் எத்தனை எத்தனை நளினமான நினைவுகளைக் கற்பனை பண்ணிவிட்டது!...

'வந்து... உங்கள் நண்பனிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?...... நீண்ட நாளா ஒரு கடிதமும் போடவில்லை என்று, உங்களை விசாரிக்கும்படி அக்கா கடிதம் எழுதியிருந்தா...

— பாலாவின் மனம், முகம் எல்லாமே ஏமாற்றத்தின், வெப்பத்தில், வாடும் மலர்களாகின்றன.

'ஓ!...... நீங்க ராஜாவைப் பற்றிக் கேக்கிறீங்களா?...... அவனிடமிருந்து எனக்கும் நீண்ட நாளாகவே கடிதம் வரவில்லை... ஒருக்கா யாழ்ப்பாணம் போறனெண்டு எழுதியிருந்தான். அதுக்குப் பிறகு நாலைந்து மாதமாக ஒரு கடிதத்தையும் காணேல்ல. நான் எழுதிற கடிதங்களுக்கும் ஒரு பதிலையும் காணேல்ல... அவனைப் பற்றி ஒரு விசயமும் தெரியேல்ல!...'

'நீங்களும் இப்படிச் சொல்லுறீங்கள்!...... அவரைப்பற்றி ஒரு விசயமும் தெரியேல்லயே!...' — என்று அவள் பரிதவிப்பது, பாலாவுக்கு உள்ளூர எரிச்சலாகக் கிடக்கின்றது.

'அவன் என்ன சின்னப் பிள்ளையா!... நீங்கள் கஷ்டப் படுகிறதைப் பார்த்தா எனக்குச் சிரிப்பாக வருகிறது!...'

'உங்களுக்கு அவற்ற நிலைமை தெரியாது... மனவருத்தத்தோடு, கண்டி திரும்பினவர் எண்டு அக்கா எழுதியிருக்கிறா!... மனவருத்தத்தில் போனவரைப் பற்றி ஒரு சங்கதியும் தெரியாட்டி ... எவ்வளவு விபரீத எண்ணங்களெல்லாம் ஏற்படும் எண்டு உங்களுக்குத் தெரியாதா!...'

'அவனுக்கு இப்படி மனவருத்தம்ஏற்படும்படி என்ன நடந்து விட்டது...... ஒருவேளை...'

— 'என்ன ஒருவேளை!...'

'ஒண்டுமில்லை!...' — என்று முகத்தில் அசடுவழிய பாலா சமாளிக்கிறான்.

'சொல்லுங்க!... உங்களுக்குத் தெரிஞ்சவிசயத்தை ஒளிக்காம சொல்லுங்க!...'—

(11-ம் பக்கம் பார்க்க)

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 18 பொயின்ட் ரேமன், 12 பொயின்ட் போல்ட், 10 பொயின்ட் ரேமன், 10 பொயின்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை,

8, 10, 12, 14, 18 பொயின்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும்; ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப் படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சரசுவின் முகத்தில் முத்துக்கள் துளிர்த்து, விளக்கொளியில் ஒளிர்கின்றன.

'ஒண்டுமில்லை...... வந்து... வந்து... அதனால ஏதாவ்து...!'

'பூ!... இதைத்தானு சொல்ல இவ்வளவு கஷ்டப்பட்டீங்க!...... அவர் புவனத்தைக் காதலித்தார்...... ஆனால் அவள் அவருக்குத் துரோகம் செய்து விட்டாள்!...' — சரசு அமைதியாகச் சொற்களை உதிர்க்கிறாள்.

பாலாவுக்குப் பூமியே சுழல்வதாகப் பிரமை!

'புவனம்!... துரோகமா!... என்னால் நம்பமுடியாது!...' —என்று வாய்விட்டே அலறி விடுகிறான்.

'நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்!... அவளுக்கு வேறோர் இடத்தில திருமணமாகி விட்டதைக் கேள்விப்பட்ட அன்றுதான் அவர் கண்டிக்குப் புறப்பட்டாராம்... அதன் பிறகு தகவலே இல்லையாம்!...'

—பாலா வேதனையில் சிரிக்கிறான்.

'மிஸ் சரசு!...நீங்க இந்த... இவர்களின் காதலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்!...'

'நினைக்க என்ன இருக்கிறது!... அவரின் தூய்மையான காதலை உணர்ந்து கொள்ளும் சக்தி... தூய்மை அவளுக்கில்லை... தனக்காக ஒருயிர் துடியாய்த் துடிக்கும் போது, இன்னொருவனிடம் தன்னை நீட்ட அவளுக்கு, என்ன... இதயமே இல்லையா!... பூஜிக்க வேண்டிய தெய்வத்தைக் கல்லாக்கி விட்டாளே!......'

'அப்படியானால் உள்ளன்புடன் நேசிக்கும் இதயத்தை உணர்தல், அதனை ஏற்றுக் கொள்வதுதான் சரி என்கிறீர்களா?...'

'கட்டாயமாக!...'

'உதாரணத்துக்கு உங்களை எடுத்துக் கொள்ளுங்களேன் ...உங்களுக்காக ஒரு உயிர் ஏங்கி நிற்கிறதாக உணர்ந்தால்—...'

'...நீங்கள் என் கருத்தைத் தவறாகப் புரிந்து விட்டீர்கள் பாலா... ஒருத்தியும் ஒருவனும் ஏதோ காரணத்தால் கவரப்பட்ட பின், ஒரு இதயம் இன்னொரிதயத்துக்கு சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் துரோகமிழைத்தல் பெரும் பாவம் என்று கூறுகிறேனே தவிர, மற்றோர் இதயத்துக்கும் விருப்பமில்லாமல், ஒரு இதயம் கிடந்து அடித்துக் கொள்வதில் அர்த்தமில்லை... அது காதலுமில்லை!...'

பாலாவின் இதயம் வேகமாக அடித்துக் கொள்கிறது.

'மிஸ் சரசு!... என்னைப் பற்றி ராஜா உங்களிடம் ஏதும் சொல்லவில்லையா!...'

'ஏன் நிறையச் சொன்னாரே!... அதனால்தான் இந்தச் சந்திப்புக் கூட நடந்தது...'

'சரசு... இந்தக் கேள்விக்காகஎன்னை மன்னித்து விடுங்கள்... என் உள்ளத்தைப் பற்றி... என் காதலைப்பற்றி ஏதுவும்...ஒரு சொல் கூடவா ராஜா உங்களிடம் சொல்லவில்லை!... உண்மையைச் சொல்லுங்கள்!... சரசு!...' —பாலாவின் நாத் தழுதழுக்கிறது.

'எனது முடிவையும் அவரிடம் சொல்லியிருந்தேனே! ...சொல்லவில்லையா?... நண்பரின் மனத்தை துன்பப்படுத்துவாரேன் என்று அவர் கூறவில்லைப் போலும் ...... பாலா!... உங்களுக்காக பரிதாபப்படுவதைவிட வேறெதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன்.'

பாலா தலை நிமிர்கிறான். அவன் விழிகளைக் கண்ணீர் நிறைக்கிறது.

'பாலா நீங்களாவது ஆண்பிள்ளை... ஆனால் நானோ!... நீங்கள் காலமாறுதல்களில் உங்கள் காதலை... என்னை... மறந்து இன்னொருத்தியை மணந்து வருவீர்கள்... ஆனால் நானோ... காலம் முழுதும் கன்னியாக...'

'சரசு!...' — பாலா கண்டம் வெடிக்கக் கூவுகிறான்.

'எதற்காக... ஏன் நீங்கள் நித்திய கன்னியாக இருக்க வேண்டும்...!'

'நீங்கள் ஒருத்தியை விரும்பினீர்கள்... அவள் கிடைக்கவில்லை... அவள்... நான் ஒருவரை விரும்பினேன் அவரோ... எனக்கு முன்னர் இன்னொருத்தியிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டார்...!'

'...யாரவர்... சொல்லுங்கள் சரசு!... யாரவர்?...'

'அவர்தான் உங்கள் நண்பர்!...'

—தெய்வத்தின் திருவிளையாடல் தாம் விதி என்றழைக்கப்படுகிறதா? கண்ணாம்மூச்சி விளையாட்டா வாழ்வு! வல்லான் விளையாட்டில், ராஜா...பாலா... சரசு...... புவனம்.......எல்லாருமே விளையாட்டுக் கருவிகளா?... சூத்திரதாரியின் கரங்களைத் துண்டிக்கும் ஆற்றல், பாலாவுக்கு இருந்திருந்தால்......

'அவன்தான் உங்களை மறுத்துவிட்டானே!... அவனுக்காக உங்கள் வாழ்வைப் பலியிட்டுக் கொள்வதில் என்ன பொருள் இருக்கிறது சரசு!...

'இதில்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு முளைக்கிறது... அவள் இதயத்தில் ஒருவன் தெய்வமாக... தெய்வத்தின் அனுமதியின்றியே... குடியிருந்து விட்டால்... அந்த இடத்தில் இன்னோர் தெய்வத்தைக்குடியிருத்த அவளால் கூட முடியாது... கோவில்களில்கூட ஒரு மூலஸ்தானத்தை அகற்றி, இன்னொன்றிற்கு இடமளிக்க மாட்டார்களே! ...அதைப் போலத்தான் இதுவும்...மனம்...உணர்வுகள் எல்லாம் அவருக்கே சொந்தமான பின்பு, வெறும் உடலை இன்னொருவனுக்குக் காணிக்கையாக்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது... இது வெறும் எலும்புத் துண்டை நாய்க்குப் போடுவதைப் போலத்தான்... நான் உலகிற்குத்தான் கன்னியாக இருப்பேனே யொழிய, காலமெல்லாம்... ஒரு கண நேரம் கூட விட்டகலாமல் அவர் நினைவில் கலந்து என்னுடன் உரையாடுகிறார்...... உண்கிறார்... உறங்குகிறார்!...'' — அருள்பெற்ற 'தபஸ்வினி'யாகச் சரசுமெய் மறந்து, உணர்ச்சிச் சுழிப்பால் தன்வயமிழந்து, சொற்களை உதிர்க்க, பாலா, தெய்வ சந்நிதான பக்தன் ஆகி நிற்கிறான்.

— ஆனால் அவர்களை உணராது, காட்சியைக் கொண்டே, அவர்களை எடை போட்டுவிட்டு, விரக்தியுடன் திரும்பும் ராஜாவை ஒருவருமே அறியவில்லை.

'ஏ!...விதியின் கோரக்கரங்களே! உங்களுக்கு 'மென்மை, பாசம்' எதுவுமே கிடையாதா?...'

**

இருள் கவிந்து, புகாருடன் கலந்து, பல்கலைக் கழகக் கட்டிடங்களைத் தழுவத் தொடங்கிவிட்டது.

இருளுக்கும் ஒளியிற்கும் 'ஜீவமரணப் போர்'.

ராஜா நடந்துகொண்டிருக்கிறான்!...

எங்கே?...?...?...

இருள் திடீரென மிகுதியாகக் கவிழ்கிறது.

அந்தகாரம்!

வரும்போதிருந்த சாலை விளக்குகள் எல்லாம் எங்கே? அணைந்துவிட்டனவா?...

வாழ்வும் இப்படித்தானே!...

வரும் போது ஒளியில் கலக்கிறோம். போகும்போது இருளில் கலக்கிறோம்.

திக்குத் திசை எதுவுமே புரியவில்லை!...

கால்கள் தட்டுத் தடுமாறி முன்னேறுகின்றன...

எதனை நோக்கி?...?...?...

மின்மினிப் பூச்சிகள் பறக்கத் தொடங்கிவிட்டன!...

அவற்றின் மெல்லிய ஒளியில், அந்தச் சின்னஞ் சிறு பூச்சிகளே, 'கும்' மிருட்டில் நம்பிக்கையுடன் எதனையோ தேடி முன்னேறுகின்றன...

மனிதன்?...

ராஜா நடந்து கொண்டிருக்கிறான். வழியோ நீள்கிறது.

(முற்றும்)

# நன்றி



செங்கை ஆழியான்

'யார் இவர்கள்? இருவரும் ஒருவரா?'

—இக் கேள்விகள் 'நிழல்கள்' வெளிவந்து கொண்டிருந்த கால வேளையில், எழுத்தாள அன்பர்களிடையேயும், வாசகப் பெருமக்களிடையேயும பலமாக அடிபட்டுக் கொண்டிருந்தன. உண்மையைக் கூறப்போனால்—

இருவரும் ஒருவரே!

திசைக்காதிர்கள்—ஒட்டுச் செடியன ஒரு கிளையில பூத்த இரு மலர்கள்!

'ஒருவரே இருவர் பெயர்களிலும் எழுதி வருகிறார்' என்று எழுத்தாள அன்பர்களே எம்மிடம் கூறிக்கொள்ளும் போதெல்லாம், நாம் மனதிற்குள் சிரித்துக் கொள்வோம், எங்கள் முயற்சி வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு மதிப்புரையாக அதைக் கருதினோம்.

ஆரம்பத்தில் இத்தொடர் நவீனத்தை எழுததொடங்கியபோது, எங்கள் மனதில் ஒரு பயம் குடி கொண்டிருந்தது. ஒருவரே நாவல் எழுதும் போது, முரண்பாடுகள் தோன்றும் வேளையில், இருவர் ஒரு நாவலைக் கூட்டாகப் படைக்கும்போது, முரண்பாடுகள் மிகுதியாகத் தோன்றி விடுமோ என்று பயந்தோம். மேலும், கூட்டு மொத்தமாக 'நிழல்களை' எழுதிக் கொடுத்தவர்களல்லர்; கூட்டு மொத்தமாகக் கதையை முடிவு செய்தவர்களுமல்லர். வாசகர்களைப் போலவே, அடுத்த வார அத்தியாயத்தை ஒருவரிடமிருந்து ஒருவர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்!

எம்நவீனத்தைப் பொறுத்தளவில் எம்மனதில் உருவாகியவை, இன்றைய வாலிப மனங்களின் மனோவிகாரச் சிக்கல்களும், அறிவிற்கு முக்கியத்துவமளிக்காது வெறும் உணர்ச்சிக்கு அடிமைப்படும் நிலையும், அவர்கள் வாழ்வை எந்தளவு தூரம் பாதித்துச் செல்கின்றன என்பனவாம். அவற்றைப் படமாக அவர்களுக்கே திருப்பிக்காட்ட விரும்பினோம். இக் குறை வியல்புகளைப் பெற்று, பரிதாபமாக வேதனைச் சிரிப்போடு நம்முன் தோன்றினான்—ஒருவன்; 'நிழல்களி'ன் தலைவன்!

—'நிழல்கள்' காதற் கதையா?

இது எங்களையே எடைபோடும் விமர்சனமல்ல; ஆனால், சொல்ல வேண்டியவை:

—'ரசிகர் மனதில் பதிவதாகக் காதல்கதை வடிவில் தந்திருக்கும் தத்துவார்த்தச் சிந்தனைகளின் கலைவடிவம்'—இதை நாங்கள் கூறவில்லை; 'நிழல்களை' விரும்பிப் படித்து வந்த ஓர் அன்பரின் இலக்கிய மதிப்பீடு.

எம்முடைய எண்ணக் கருத்துக்களை வெளியிட வாசகர்களுக்கும், எங்களுக்குமிடையே ஓர் இலக்கியப் பாலம் அமைத்துத் தந்தமைக்காக, 'சுதந்திரன்' ஆசிரியர் குழுவினருக்கு எம் நன்றி கலந்த வணக்கம் என்றுமுரியது! எமது எழுத்திற்கு ஓவிய வடிவந் தந்த ஓவியர் எம் நன்றிக்கும், அன்பிற்கும் உரியவர்!

இருபத்தேழு வாரங்களாக எம்முடன் கலந்துறவாடி, கடிதங்கள் வாயிலாகவும், நேரிலும் எம்மை ஊக்கப்படுத்தி, தம் வேறுபட்ட மனவிருப்பங்களுக்கமைய, 'நிழல்களி'ன் கதாபாத்திரங்களை மாற்றி அமைத்து உருவாக்கும்படி இடையறாது அன்புத் தொல்லை தந்த வாசகர்களைப் பிரிவது மிகுந்த மனவேதனையை யளிக்கிறது.

எனினும்—

—சந்திக்காமலா போகப் போகிறோம்!

வணக்கம்!

செங்கை ஆழியான்
செம்பியன் செல்வன்

—o—



செம்பியன் செல்வன்

உரை நடைத் தமிழுக்கு ஆக்கம் அளித்து வந்தது கட்டுரையே. இதைத் தொடர்ந்து சிறுகதை இலக்கியமும் உரை நடைத் தமிழுக்குப் பெரிதும் ஊட்டம் அளித்து வந்துள்ளது. நாவல் இலக்கியத்தைப் பொறுத்த வரையில்—அதுவும் ஈழத் தமிழுலகத்தில்—பிறந்த பிள்ளைப் பருவத்திலேயே, உள்ளது. ஆகவே நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கம் அளிக்க வேண்டியது இன்று நமது கடமையாகின்றது. இந்த வகையிலே, வளர்ந்து வரும் ஈழத் தமிழ் இலக்கிய அரங்கின் முன்னணியில் நிற்கும் பல்கலைக் கழக மாணவர்களாகிய செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகிய இருவருக்கும் ஒரு சந்தர்ப்பம் அளித்தோம்.

கூட்டாக இலக்கியம் உருவாக்கும் முயற்சி தமிழ் இலக்கிய உலகில் மிகக் குறைவு—நம்மவர்க்கு அது புதியது. ஆனால் இவர்கள் இருவரும் வேறுபாடு தோன்றாத முறையில் — கதையின் வளர்ச்சியில் சிக்கல் ஏற்படாத வகையில் இந்த நாவலை உருவாக்கியது பாராட்டத்தக்கதே.

கடந்த இருபத்தியேழு வாரங்களாக வாசகர்களின் உணர்வுப்பசியைத் தட்டி எழுப்பி நல்ல முறையில் நிழல்களை நீள விட்டுள்ளார்கள். அவர்களுக்கு வாசகப் பெரு மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் வளர்ந்து வரும் தமிழ் நாவல் இலக்கியத்தை மேலும் நல்ல வகையில் அணி செய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

இரசிகப் பெருமக்களின் உள்ளங்கள், 'நிழல்களி'ன் பாத்திரங்களுக்காக எத்தனை தடவை பெருமூச்சு விட்டனவோ யாம் அறியோம். அந்தப் பாத்திரங்கள் இரசிகர்களின் உள்ளங்களில் தனியிடத்தைப் பெற்றிருக்கும் என்று நம்புகிறோம். ஆகவே, 'நிழல்கள்' பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை உடன் நமக்குத் தெரியவையுங்கள்.

(ஆ—ர்)




# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாணியில் தமிழ்ப் படம்

## பாவை பிக்சர்ஸார் தயாரிக்கிருர்கள்

(நமது சென்னை நிருபர்)

மதுரைத் திருமாறன் எழுதிய 'சந்தனச் சிலை' என்னும் மர்மக் கதையை தங்களின் அடுத்த தயாரிப்பாகத் தெரிந்தெடுத்திருக்கிருர்கள் பாவை பிக்சர்ஸார். பிரபல மர்மப்பட இயக்குநரான அல்பேர்ட் ஹிட்ச்கொக்கின் பாணியில் அமையும் முதல் தமிழ்ப் படமாகும் இது.

மயிர் சிலிர்க்க வைக்கும் மர்மங்களோடு, இசையும் நடனங்களும் இப்படத்தின் முக்கிய அம்சங்களாக இருக்கும். பரபரப்பையூட்டக் கூடிய முறையில் மிகப் பிரமாண்டமான அளவில் கடலில் சண்டைக் காட்சியொன்றும் இடம் பெறும் என்று தெரிகிறது. பிரபல இந்தி இசையமைப்பாளரான சலீல் சௌத்திரி இப்படத்திற்கு இசையமைக்க இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் படத்தின் முக்கிய பாத்திரத்தை டி. கே. பாலச்சந்திரன் ஏற்று நடிக்கவிருக்கிருர் என்று தெரிகிறது. பிரபல இயக்குநர் கே. சுப்பிரமணியம் அவர்களின் மகன் எஸ். வி. ரமணன் பி. கொம். இப்படத்தின் இயக்குநராகக் கடமையாற்றுவார். இம்மாதக் கடைசியில் படப் பிடிப்பு ஆரம்பமாகும் என்றும், பொங்கல் தினத்தன்று திரையிடப்படும் என்றும் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கதை ஓராண்டு காலத்துக்கு முன்னர் 'இள முழக்கம்' என்னும் பத்திரிகையில் நான்கு வாரங்கள் தொடர்ந்து வெளிவந்துள்ளது. தமிழிலக்கிய உலகில் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கிய கதை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடக விமர்சனம்

## பெட்டிப் பாம்பு

(நகைச்சுவை நாடகம்)

## எரிமலை

(சமூக நாடகம்)

சில காலமாக நல்ல நாடகங்கள் மேடையேற்றப்படவில்லையென்று வருந்திய கொழும்பு வாழ் நாடக ரசிகர்களுக்கு, ஒரே மேடையில் இரு நாடகங்களைப் பார்த்து மகிழும் சந்தர்ப்பம் கடந்த ஞாயிறு (13—10—63) மாலை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கிட்டியது.

முதலாவதாக, 'பெட்டிப் பாம்பு' என்ற ஓரங்க நகைச்சுவை நாடகம் நடைபெற்றது.

கொழும்பில் வாழும் யாழ்ப்பாணத் தம்பதிகள். இருவரும் உத்தியோகம் பார்ப்பவர்கள். இதன் விளைவாக, மனைவி கணவனுக்கு அடங்காதவளாக ஆர்ப்பாட்டம் செய்கிருள். கதை நகைச்சுவையாக எழுதப்பட்ட போதும், நல்ல படிப்பினையையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது.

### வசனம்

வசன நடை பெரும்பாலும் நகைச்சுவையை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஒருசில இடங்களில், சில சிலேடைச் சொற்களும் இடம் பெற்றன. அவை, இரு கருத்துக்களை — நல்லதும், கெட்டதும் — கொடுத்த போதும், ஒரு சிலர் தப்பான கருத்தையே கொள்வதற்கும் இடமளித்தன. இதைத் தவிர்த்திருக்கலாம்.

### நடிப்பு

யாழ்ப்பாணத்துக் கிராமிய வயோதிகத் தந்தையாக நடித்த கே. என். நவரத்தினம் தமது பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்தார். அவரும், வேலைக்காரனுகத் தோன்றிய ரி. கே. தேவனும் சபையோரின் கரகோஷத்தை அடிக்கடி பெற்றனர்.

கணவனுக நடித்த ஏ. சுப்பிரமணியமும், அவருக்கு அடங்காத மனைவியாக நடித்த செல்வி ஜி. எல். நிர்மலாவும், தங்களது இயற்கையான நடிப்பால், கதையின் நோக்கத்தை நிறைவேற்றினர். குடும்ப நண்பனுக நடித்த ரி. ஜெகநாதம் பிள்ளையின் தோற்றமும், நடிப்பும் பாத்திரத்துக்குக் கச்சிதமாகப் பொருந்தின.

### எரிமலை

இரண்டாவதாக, 'எரிமலை' என்னும் சமூக நாடகம் இடம் பெற்றது.

#### கதை

சிறந்த கதை அமைப்பைக் கொண்டிருந்த போதும், அதை வழங்கிய விதம் சபையோருக்குச் சிக்கலை ஏற்படுத்தியது. கதாசிரியர், சிறிது சிரத்தையெடுத்திருந்தால், இந்தத் தவற்றைத் தவிர்த்திருக்கலாம். நாடகம் எதிர்பார்த்த அளவு வெற்றி காட்டவில்லையெனில், அதற்கு 'புதுமை' என்ற பெயரில் 'புதிராக' விளங்கிய கதையே முக்கிய காரணம்.

#### நடிப்பு

கதாநாயகியின் தந்தையாக நடித்த ஜெரோமும், இரண்டே இரண்டு காட்சிகளில் இரு மாறுபட்ட பாத்திரங்களில் தோன்றி அப் பாத்திரங்களாகவே மாறிவிட்ட செல்வி ஜி. எல். நிர்மலாவும் பாராட்டத்தக்க முறையில் நடித்தனர்.

கதாநாயகியாக நடித்த செல்வி தர்மதேவி துரைசிங்கம் தமது பாத்திரத்தைச் செவ்வனே செய்திருந்த போதிலும், சில கட்டங்களில் அவரது உணர்ச்சிப் பிரதிபலிப்புப் போதாது. மற்றும்படி நடிப்பில் குறை சொல்ல இடமில்லை.

கதாநாயகன் குமாராக நடித்த மனோகரன் மயில் வாகனம் மேடைக்குப் புதியவராகத் தோன்றினுலும், தாயுடன் வாதாடும் கட்டத்தில் நன்கு சோபித்தார்.

கலியாணத்தரகர் துரையப்பாவின் பாத்திரம் கதைக்கு அவசியமா? என்ற கேள்வி எழும்பினுலும், அந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்த கே. என். நவரத்தினம், தமது திறமையான நடிப்பால், அதற்கு உயிர் கொடுத்துவிட்டார்.

வில்லன் பாத்திரத்தில் நடித்த எஸ். சுந்தரலிங்கம் நன்ருக நடித்திருந்தார். இரகுநாதனுகத் தோன்றிய ஏ. சுப்பிரமணியம், மற்றும் கிருஷ்ணதேவன், கிங்ஸ்லி துரைசிங்கம் ஆகியோரும் நன்ருக நடித்தனர்.

அநேகமான நடிகர்களுக்கு அவர்களது வசனம் சரியாக மனனமில்லை என்ற குறை, அவர்களின் நடிப்பையும் பாதித்தது.

ஒலி அமைப்பு அவ்வளவு நல்லதில்லையெனினும், ஒளியும், காட்சி அமைப்பும், ஒப்பனையும் சிறந்து விளங்கின.

#### டைரக்ஷன்

கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பேற்றவர் திரு. ஆர். ஜெகசோதி. அவருடைய முயற்சி பாராட்டத்தக்கதாக அமைந்த போதிலும், அதிக பொறுப்புக்கள் அவரது திறமையைப் பாதித்துவிட்டன போல் தோன்றியது. இன்னும் அதிக கவனத்துடன், மீண்டும் இந்நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றி [illegible] இல்லை.

—ஜி. என். எம்.

## 'மலர்ந்த வாழ்வு'

'சாதியிரண்டொழிய வேறில்லை' என்ற தத்துவத்தை அடிப்படையில் வைத்து, தாழ்ந்த சாதியென்று கூறும் மோகனைக் காதலித்த உயர் சாதியென்று கலாராணியின் வீர சரித்திரம்தான் 'மலர்ந்த வாழ்வு'. எத்தனையோ இன்னல்களுக்கிடையில் தன் கொள்கையை நிறைவேற்றுகிருள் அந்த வீர மங்கை கலாராணி.

இந்நாடகத்தை அல்லைப்பிட்டி அண்ணு நாடக மன்றத்தினர் இரண்டாவது தடவையாக மண்கும்பானில் அரங்கேற்றினர்.

அல்லைப்பிட்டி அண்ணு நாடக மன்றம் தயாரித்த இந்நாடகத்தின் கதை வசனம், டைரக்ஷன் பொறுப்பை 'அல்லையூர் வேலன்' ஏற்று திறம்பட நடத்தினுர். அதோடு வில்லன் பாத்திரத்தையும் ஏற்றுக் கச்சிதமாக நடித்துள்ளார். கதாநாயகன் மோகனுக நடித்த செல்வநாயகத்தின் நடிப்பு நன்ருக இருந்தது. கதாநாயகி கலாராணியாக நடித்த தில்லையம்பலம் நன்ருக நடித்தார். அவருக்கு ஒப்பனை செய்த சண்முகராசா, தியாகராசா இவர்களைப் பாராட்டவேண்டும். அசல் பெண்ணுகவே அவரை மாற்றிவிட்டனர். மற்றும் பத்மநாதன், இந்திரகுமாரன், பரிமளகாந்தன் இவர்களின் நடிப்பும் திறமையாக அமைந்தது.

—சேந்திவேல்



ஹிந்திச் சித்திரங்களில் சகல துறைகளிலும் சிறப்பானது என்று பாராட்டைப் பெற்ற 'ஆரத்தி'யில் மீனுகுமாரி இப்படித் தோன்றுகிருர்.



தேங்காய் முடியுடன் பழவகைகளையும் வைத்துக் கொண்டு, மலர்களையும் சேர்த்து விளையாடும் இவ்வழகிய இளவனிதையர் கூட்டத்தை "பவுண்டி கப்பலில் கலவரம்" (Mutiny on the Bounty) என்ற ஆங்கிலப்படத்தில் காணலாம். கண்கவர் வர்ணத்தில் அகன்ற திரை ஓவியமாகத் தயாரிக்கப்பட்ட இப்படம் கொழும்பு மெஜஸ்டிக் திரையில் வெற்றி முரசு கொட்டுகிறது.

## 'ஆத்ம திருப்தி' 'வாடகை வீடு'

சென்ற 5-10-63 சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் வாணெலி நாடகக் குழுவினர் 'ஆத்ம திருப்தி', 'வாடகை வீடு' என்ற இரு நாடகங்களை அரங்கேற்றினர்.

'அன்பு மணி' எழுதிய 'ஆத்ம திருப்தி' என்ற நாடகம் முற்றிலும் சோகரசம் ததும்பும் வண்ணம் அமைந்திருந்தது. மூன்றே மூன்று கதாபாத்திரங்களில் நாடகத்தை உருவாக்கியிருந்தார் கதாசிரியர். நடிகர்களும் தத்தம் பாகங்களை உணர்ந்து நடித்தனர். இதில் எஸ். எஸ். கணேசபிள்ளை (டாக்டர்), ஏ. சுப்பிரமணியம் (ரகுநாதன்), செல்வி நிர்மலா ஜோர்ஜ்(இந்துமதி) ஆகியோர் பங்குபற்றினர்.

இதைத் தொடர்ந்து சி. சண்முகம் எழுதிய முழு நீள நகைச்சுவை நாடகமாகிய 'வாடகை வீடு' என்ற நாடகம் இடம் பெற்றது. திருஞானசம்பந்த மூர்த்தி கொழும்பில் வாடகை வீடொன்றை வைத்து நடத்துகிருர். அவர் மனைவி நாகம்மா. மகள் பூங்குழல் டாக்டருக்குப் படிக்கிருள். இவர்களது வேலைக்காரன் பொடிபண்டா. வாடகை வீட்டில் தங்குவதற்காக அங்கொடையில் பணியாற்றும் கடும்செழியன், சட்டக் கல்லூரி மாணவன் காளிங்கன், தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் முத்து முகமது ஆகியோர் வருகின்றனர். காளிங்கன் பூங்குழலியைக் காதலிக்கிருன். ஆனுல் அவளோ கடும்செழியனின் தமிழ்ப்பற்றில் மனதைப்பறி கொடுக்கிருள். பல எதிர்ப்புக்களின் பின்னர் கடும்செழியன்—பூங்குழலி திருமணம் நடக்க ஏற்பாடாகிறது. இதுதான் கதை.

இதில் திருஞானசம்பந்த மூர்த்தியாக நகைச்சுவை மன்னன் ஆர். ரி. சுப்பிரமணியமும், மனைவி நாகம்மாவாக ஏ. பரமசாமியும், மகள் பூங்குழலியாக நிர்மலா ஜோர்ஜ்ஜும், வேலைக்காரன் பண்டாவாக எஸ். ஆறுமுகமும், கடும்செழியனுக சுந்தரலிங்கமும், காளிங்கனுக எஸ். எஸ். அச்சுதம்பிள்ளையும், முத்து முகமதுவாக எஸ். எஸ். கணேசபிள்ளை (வாணியூரான்)யும் தோன்றி வெகு சிறப்பாக நடித்தனர்.

—கலா

## அறிமுகப்படுத்துகிரேம்

முழுப் பெயர் ....................

முகவரி ....................

....................

துறை ....................

(நாடகமா, நடனமா அல்லது வேறு வகையா என்பதைக் குறிப்பிடவும்)

பங்குபற்றிய நிகழ்ச்சிகள் ....................

....................

....................

பெற்ருர் அல்லது பராமரிப்பாளர் கையொப்பம்

(18 வயதுக்குக் குறைந்த நடிகர்களும் பெண் கலைஞர்களும் அவசியம் நிரப்ப வேண்டியது)

....................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாக்குமூலம் சிங்களத்தில் பதிவு

## ஆங்கில மொழிபெயர்ப்பளிக்க சட்டத்தில் இடமில்லையாம்

தமிழில் கூறப்பட்ட வாக்குமூலத்தைச் சிங்களத்தில் பதிவு செய்துள்ள பொலிசாருக்கு அதே வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் சட்டமில்லையாம். மொழி பெயர்ப்புச் சரியாக இருக்குமென உத்தரவாதமளிக்கவும் இயலாதாம். இந்நிலையில் ஒரு வழக்கை விளக்கத்துக்கு எடுக்க முடியாத சூழ்நிலை மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்பட்டிருக்கிறதாக அறிகிறோம்.

அச்சுவேலி இடைக்காடைச் சேர்ந்த கணபதி கந்தையா என்பவர் அவ்வூரைச் சேர்ந்த செல்லையா ஆறுமுகத்தைக் கல்லால் அடித்துக்' காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் நீதிபதி முன்னர் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர்தரப்பு வழக்கறிஞரான திரு. நடராசா வழக்கு விளக்கத்தை நடாத்துவதற்குத் தம்மால் இயலாமலிருக்கிறது என்று பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பினார்.

வழக்கறிஞர் திரு. நடராசா அவர்களுக்குப் பொலிசாரால் கொடுக்கப்பட்ட, காயப்பட்டவரின் வாக்குமூலப் பிரதி சிங்களத்திலிருந்ததாம். வழக்கறிஞருக்குச் சிங்களத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்கும்படி நீதிபதி திரு. ஆர். சுண்ணுத்துரை, பொலிஸ் அதிகாரியைக் கேட்டார். வேறு எம்மொழியிலும் வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்கச் சட்டத்தில் இடமில்லை என்றும், ஆங்கில மொழிபெயர்ப்புச் சரியாக இருக்குமென்று தாம் உத்தரவாதமளிக்க முடியாது என்றும், அத்தோடு சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் இல்லாதபடியினால் எதுவும் செய்ய வியலாது என்றும் பொலீஸ் அதிகாரி கூறிவிட்டார்.

மேற்கொண்டு வழக்கை நடாத்த முடியாத நிலையில் நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார்.

காயப்பட்டவர் தமது வாக்குமூலத்தைத் தமிழிலேயே கொடுத்துள்ளார். ஆனால் பொலிசார் அதைச் சிங்களத்திலேயே பதிவு செய்கின்றனர். அதே வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால், அது சரியாக இருக்குமென்று உத்தரவாதம் அளிக்க முடியாதெனப் பொலிசார் கூறுகின்றனர். தமிழில் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தைச் சிங்களத்தில் பதிவு செய்தது சரியாகவிருக்குமென்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியுமோ தெரியவில்லையே, என்ற ஐயப்பாடு மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளதாக நமது நிருபர் அறிவிக்கிறார்.

## இந்தி எதிர்ப்புப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'எப்பக்கம் வந்து புகும் இந்தி, அது எத்தனை பட்டாளம் கூட்டி வரும்' எனக் கேட்கும் வகையில் தமிழ் நாட்டின் தலைநகரில் அன்று மக்கள் கூடி நின்ற காட்சி நிச்சயம் போராட்டத் தலைவர்களுக்குத் தெம்பையும் திராணியையும் கொடுத்திருக்கும்.

### போர்த் தீயில் புடம் போடப்பட்டவர்கள்

இந்தி எதிர்ப்புப்போராட்டத்தை முன்னின்று நடாத்தவிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போராட்டக் களம் புதியது அல்ல.

1937ம் ஆண்டு இந்தி தமிழகத்தில் அடியெடுத்து வைக்க முனைந்த பொழுது அதை விரட்டியடித்த பெருமைக்குரியவர்கள் அவர்கள்.

அதைத் தொடர்ந்து தமிழ் மா நிலத்தினதும், தமிழ் பேசும் மக்களினதும் தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல்களையெல்லாம் துடைத்தெறியும் பணியில் முன்வந்து உழைத்துப் பல போராட்டங்களை நடாத்தி வெற்றி கண்டவர்கள் அவர்கள்.

போராட்டக் களத்தில் புடம்போட்டு எடுத்த தங்கத் தலைவர்களையும்-தொண்டர்களையும் உடைய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முயற்சி வெற்றியன்றி வேறு எதையும் தரமாட்டாது என்பதை ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தென்னக மக்களின் நிலையும், நமது நிலையை ஒத்ததாகவே இருக்கிறது. ஈழத்தவர்கள் எவ்வாறு சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிகின்றோமோ; அதே போன்று தமிழ் நாட்டு மக்களும் இந்தி வெறியர்களின் ஆட்சியின்கீழ் அவலநிலையில் தன்மானமிழந்த நிலையில் வாழ்கிறார்கள்.

இந்நிலை மாறத் திராவிட முன்னேற்றக் கழகம் போர்க் கொடி உயர்த்தி விட்டது. இந்த நிலையில் போராட்டப் பாதையில் வெற்றி நடை போடும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் தென்னகத்தின் மகத்தான உரிமைப்போராட்டத்திற்கு நமது தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலம் மாறும்—நமக்கு வாழ்வு வரும்—உலகாண்ட நாம் ஒன்றுபட்டுச் சுதந்திர புருடர்களாக இந்த மேதினியில் வாழ்வோம்.

## வட பகுதிக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் உடனுக்குடன் கவனஞ் செலுத்தி ஆவன செய்வேன் என்று உங்கள் முன் உறுதி கூறுகிறேன். அதற்காகவே இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளையை இங்கு நிறுவுவதற்கு முயற்சி எடுத்துள்ளோம். இக் கழகத்தில் சேர்ந்து கட்டுப்பாடுடன் நீங்கள் இருக்க வேண்டும்.

நீங்கள் மது அருந்துவதை அறவே ஒழிக்க வேண்டும். அன்றுதான் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு விமோசனம் உண்டு. நீங்களும் நல்ல நிலைமைக்கு வர முடியும்' என்று கூறினார்.

திரு. பெனடிக்ற் அவர்கள் பேசும்போது 'விவசாயிகளும் தொழிலாளர்களும், ஒன்றுபட வேண்டும். இலங்கைத் தொழிலாளர் கழகம் இதற்கு வழி வகுக்கும். குலம், கோத்திரம், சாதி என்றெல்லாம் பிரிந்திருப்பது அநாகரிகமாகும். தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றுபட்டுக் கழகத்தில் சேர்ந்து கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும்' என்றார்.

அடுத்து திரு. கையிலாயப் பிள்ளை அவர்கள் பேசும் போது: 'தமிழினம் என்றால் எல்லாம் ஒரே இனம். நாம் நமக்குள் பிரிவினை இருக்கக் கூடாது. பிரிந்து வாழ்வது ஒரு வாழ்வு அல்ல. காந்தியின் அடிப்படையில் நாம் அஹிம்சையைக் கடைப் பிடித்து, நாம் எல்லோரும் ஒரே இனம் என்ற அடிப்படையில் இவ்வியக்கத்தை வளர்ப்போம்' என்றார்.

பரப்புகடந்தான் கிராமக் குழு.

### செயற்குழுவினர்கள்

திருவாளர்கள்: மா. சுப்பையா, கு. தங்கராஜு, த. முத்தையா, செல்லத்துரை, ஏ. ராசையா, பொ. சோமாலை, சி. குப்பான், மு. நாராயணன், அண்ணக் குட்டி.

### வாலிப முன்னணி

திருவாளர்கள்: பொ. முருகையா, க. வேலுப்பிள்ளை; செ. சுப்பையா, எஸ். சந்தனம்.

### மாதர் குழு

திருமதிகள்: பாப்பு, தலைவி: கருப்பாயி, செல்லம்மாள், மீனாட்சி.

## பிரதமர் கூட்டும் வட்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லோரும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டால், இவ்விரு கிராமக் கமிட்டிகளையும் சிங்களவர் மிக எளிதாகக் கைப்பற்றி விடலாமென்று கூறியதாக இப் பத்திரிகை எழுதுகிறது.

"இரத்தினபுரியில் "நாம் தமிழர்" இயக்க வேலைகளை நடத்தும் பொருட்டு இரத்தினபுரியில் மாதம் ரூ. 300 வாடகையில் ஒரு கட்டிடம் அமர்த்தப்பட்டுள்ளது" என்று 17-10-63ந் திகதி "சிங்களே" பத்திரிகை ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

அட்டன், தலவாகொல்லைப் பகுதியில் வசிக்கும் சுமார் 2,60,000 [illegible] றவர்கள் அட்டனிலிருந்து, சிவனடிபாதமலை வழியாக இரத்தினபுரிக்குச் (சுமார் 14 மைல்) தேவையான போது போகக் கூடியதாக ஒரு சாலை (கள்ளவழி) அமைப்பதற்கும் நாம் தமிழர் திட்டம் திட்டியிருப்பதாகவும் இப் பத்திரிகை எழுதுகிறது.

## மலையக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் 'இலங்கைத் தொழிலாளர் கழகமே.'

கற்பாறைகள் மோதிச் சிதறுண்டு காலடியில் மிதிபடட்டும். அதைக்கண்டு தங்கக்கட்டிகள் தனி இடத்தில் [illegible] மலையகத் தமிழின் போராட்டத்தில் [illegible] ஏடு திறக்கட்டும்.

## தோட்டப் பாடசாலைகளில்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணும், எழுத்துந்தாம் போதிக்கப்படும் பாடங்கள். ஒரே ஒரு ஆசிரியர்தான் உயிரைப் போக்கிக் கொண்டிருப்பார்.

இந்தவிதமான இழிநிலை நீங்கி, தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி வசதி கிடைக்க வேண்டுமேயென எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் மலைநாட்டு மக்களுக்கு, கல்வி நிலையிலே ஒரு மறுமலர்ச்சியேற்படுமானால் பெரிதும் ஆனந்தப் படத்தான் செய்வார்கள். இருந்தாலும் தாய்மொழி புறக்கணிக்கப்பட்டு வேறோர் மொழி புகுத்தப்பட்டால் "வேண்டாமய்யா நமக்கிந்த வீண் படிப்பு" என்று வெறுக்கத்தான் செய்வார்கள்.

கல்வி என்று சொல்லிக் கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு சிங்களத்தைப் படிக்க—கண்களைக் கெடுத்துக் கொண்டு சித்திரங்களைப் பெற, எந்த ஒரு மலைநாட்டுத் தமிழனும் விரும்ப மாட்டான். தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுச் சிங்களத்தைத் திணிப்பதை விட, அது பழைய மாதிரியே இருந்து, தமிழைக் கற்பிப்பதே மேல் என்று எண்ணுகின்றோம்.

"பிச்சை வேண்டாம், நாயை மட்டும் பிடியுங்கள்" என்று துர்ச்சனரான சிங்கள வகுப்புவாதிகளை எங்களது வண்டமிழர் கேட்டுக் கொள்கின்றார்கள்.

### நயவஞ்சகர்களை நாம் பகிஷ்கரிப்போம்

மேலும், சில "அதிகம் படித்தவர்கள்" மலையக மக்களை ஏமாற்ற முனைகின்றார்கள். "சிங்களம் படிப்பதில் தவறு இல்லை. சிங்களம் படித்தால்தான் இந்த நாட்டிலே நாமும் வாழலாம். பயமில்லாமல் படியுங்கள்" என்று கூறிவருகின்றார்கள்.

வேலையற்ற வீணர்கள் வீட்டிலேயேயிருந்து பணம் தேடுவதற்குப் புதிய வழிகளைக் கையாளுகின்றனர். சிங்களத்தில் "அயனு, அயனு" மட்டும் தெரிந்த இந்தப் "பட்டதாரிகள்" இராப் பாடசாலை என்ற பெயர் வைத்து, ஏதோ சிங்களம் சொல்லித் தருகின்றோம் என்று சொல்லி, சிறார் குழந்தைகளை ஏமாற்றிப் பணம்பறிக்கின்றனர். தந்திரமாக வாழ்வதற்கு ஏதோ மந்திரத்தைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். கிளிப்பிள்ளைகளைப்போல இந்தக் குழந்தைகளும் அதைக் கேட்டுச் சொல்லுகின்றார்கள். ஆனால் அதற்கு அர்த்தமிராது. இந்த மாதிரியான ஏமாற்று வித்தைக்காரர்கள் விஷயத்தில் மலையக மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமக்குள்ளே இருந்து கொண்டு நாசத்தையுண்டு பண்ணும் இந்த நச்சுப் பாம்புகளிடம் கவனமாக இருக்க வேண்டும்.

### உண்மைத் தலைவர் சொற் கேட்டு உரிமைக்காகப் போர் தொடுப்போம்

"ஆனா, ஆவன்னா"க் கூடப் படிக்காமல் அப்பனும் ஆயாவுமாக இருக்கும் நம்மவர்கள் எத்தனையோ பேர் தங்கள் பிள்ளைகளையும் அதே பாதையில் தள்ளிக் கொண்டிருக்கின்றார்கள்.

"தமிழ் என்றால், தானே வரும். சிங்களத்தைப் படித்தால் சிங்கார வாழ்வு கிடைக்கும் என்று எண்ணி ஏமாந்து, தங்கள் குழந்தைகளுக்குச் சிங்களம் கற்பிக்க ஆவல் கொண்டு அலையும் பெற்றோர்களும் நம்மிடையே இருப்பது தானது அருவருக்குத் தக்கதான காரியமாகும் ஏன், எங்கள் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் கூட, சிங்களத்தை நாம் படிக்க வேண்டுமென்று தானே பலமுறைகளில் மறைமுகமாகவும், நேரடியாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றார். அவர்கள் எல்லாம், சமயசந்தர்ப்பத்துக்கேற்ற விதமாகத் தலையைச் சாய்த்துத், தங்கள் தலைமைப் பதவிகளைக் காத்துக் கொண்டிருக்கும் தலைவர்களானதையாலே, நாம் வாழ, நம் மொழி வாழ உழைக்கும் தூய எண்ணமும் தியாகச் சிந்தையும் நிறைந்த தலைவர்கள் சொற்கேட்டு நடப்பதே நமக்குச் சுபீட்சத்தை உண்டுபண்ணும் என்பதை உறுதியாக நம்புவோமாக. நம் மத்தியிலுள்ள நம் விரோதிகளை நாம் பகிஷ்கரித்து, நாம் தனியினமாக, தமிழினமாக, சுதந்திர இனமாக வாழ வழி வகுப்போமாக.

## விதவைகள்
### உபகாரச் சம்பளப் பட்டியல் சிங்களத்திலா?

அடுத்த மாதத்திற்குரிய மலாய் நாட்டு விதவைகள் உபகாரச் சம்பளப் பட்டியல் சிங்களத்தில் தயாரிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. கடந்த மாதம் கச்சேரியில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பட்டியல் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டதும் பின்னர் அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கிளையின் வன்மையான கண்டனம் காரணமாகத் தமிழ் மொழி பெயர்ப்பு இணைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பொழுது ஆட்சியாளரின் சிங்களத் திணிப்பு பொதுமக்கள் மீது நேரடியாக அமுல்செய்யப்படுவதற்கு எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாகும் இது.

## அராலி வடக்கில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட ஆரம்பித்ததும் பெருமழை பொழிய ஆரம்பித்ததுடன் பார்த்திருந்தோர் கண்களும் கண்ணீரைக் கொட்டிய காட்சி என்றென்றும் மறக்க முடியாத ஒரு காட்சியாகும்.

கிறிஸ்தவரும், அவ்வூரிலேயே வயோதிபருமான ஒருவர் தனது மனைவியுடன் கோயிலுக்கு வந்து பரவச மேலீட்டால் உருகிப் பேசினார்.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஒன்றாக எதுவித பாகுபாடுமின்றி ஆலயத்துள் சென்று முருகனை வழிபட்டனர். திரு. எஸ். ஜி. எஸ். மணியம் 'வாருங்கள்; வாருங்கள்' என்று எல்லோரையும் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார்.

ஊர் மக்களின் ஏகோபித்த சம்மதத்துடனும், உள்ளத் தூய்மையுடனும் சிறப்பாக ஆலயப் பிரவேசத்தை நடாத்திய வடக்கு அராலி மக்களையும் குறிப்பாக கோயில் முகாமையாளர் திரு. மணியம் அவர்களையும் பாராட்டாமலிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளலாமா என்று எண்ணியவனுக்குத் திடீரென்று ஒரு முரட்டுத் தைரியம் உண்டாகியது. காரை உற்றுப் பார்த்தபடி அப்படியே நின்றான், அவனுடைய கை,...கால்சட்டைப் பையில் நுழைந்து சுழல் துப்பாக்கியை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. அப்போது கார் அவனுக்குப் பக்கத்திலே வந்து நின்றது.

காரில் இருந்தவர்கள் கங்காணியாரின் நிலையைக் கண்டதும் பதறிப்போய் இறங்கினர். "என்ன நடந்தது சார்?" என்று சாரதி படபடப்புடன் வினவினார். 'என்னோடு பேசிக்கொண்டே வந்தவர் இப்படியென்று அலறியபடி விழுந்துவிட்டார்... தயவு செய்து இவரை யாராவது வைத்தியரிடம்.......' என்று வேதனை கலந்த குரலில் இழுத்தான்.

"ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை சார்! அடிக்கடி இவருக்கு இப்படி ஏற்படுவது வழக்கந்தான்...ஏதுவுமே பண்ண வேண்டியதில்லை. சொற்ப நேரத்தில் எல்லாம் சரியாகப் போய் விடும்...' என்றார் காரில் வந்தவர்களில் ஒருவர், அவர் கங்காணியாரின் நண்பர் போலும்! சோகமே உருவாக நின்ற இளைஞனைப் பார்த்து 'நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க சார்! அவருடைய வீட்டிலேயே சேர்த்துவிடுகிறோம்...'என்று கூறியபடி கங்காணியாரைக் காரில் ஏற்றினார்கள். கார்... இரைச்சலுடன் கிளம்பியது. இளைஞனுக்கு இப்போது தான் நிம்மதியாக மூச்சு வெளிவந்தது. வெற்றிப் புன்னகையுடன் வந்த வழியே திரும்பி விரைவாக நடையைக் கட்டினான்.

[7]

நடு இரவு, நேரம் சுமார்.. ஒரு மணியிருக்கலாம்... எங்கும் ஒரே பயங்கர இருள். பளீர், பளீர் என்ற மின்னலும்; கிடு, கிடு என்ற முழக்கமும் இடையறாது நிகழ்ந்து கொண்டிருந்தன. அந்தப் பயங்கர வேளையில்......... இரண்டு இளைஞர்கள்....... மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்த ஒரு கடலை வழியாக நடந்துகொண்டிருந்தனர். ஒரு இளைஞனின் தோளில் பிரயாணப் பையொன்று தொங்கிக்கொண்டிருந்தது. மற்ற இளைஞன் தங்கமுலாம் பூசிய அழகிய மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். அவர்களின் சம்பாஷணையிலிருந்து அவர்கள் இரண்டாவது காட்சி சினிமாப் பார்த்துவிட்டு வருகிறார்கள் என்பது புலனாகியது. அப்போது...!

அந்தக் கடலையில் ஒரு பிரேதம் எரிந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சியைக் கண்டதும் மூக்குக் கண்ணாடியணிந்திருந்த இளைஞன் பேயைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தான். 'பேயாவது பிசாசாவது.. எல்லாம் நமது மனப் பிரமைதான்.........' என்று மற்ற இளைஞன் கூறிய போது மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் திடுதிடுவென்று உரத்துப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. சுடலையில் தென்பட்ட ஒரு இடிந்து தகர்ந்த பாழ் மண்டபத்துள் இருவரும் ஓடிச் சென்று நுழைந்தனர். உள்ளே...! ஒரே கும்மிருட்டு! ஒருவாறு தட்டித் தடுமாறி உள்ளே கிடந்த ஒரு முரட்டுக் கட்டையில் இருவரும் அமர்ந்து கொண்டனர். மழை சோனாவாரியாகப் பொழிந்துகொண்டிருந்தது. மின்னலும், முழக்கமும் முன்னைவிட அதிபயங்கரமாயிருந்தன.

மூக்குக்கண்ணாடி இளைஞன் மீண்டும் பேயைப் பற்றிய கதையை ஆரம்பித்தான். 'இந்த இடிந்த பாழ் வீட்டைப் பேய்வீடு என்று தானே சனங்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். மாலை ஆறு மணிக்குப் பிறகு இந்தப் பக்கம் யாருமே வருவதில்லையாம்...சென்ற மாதம் ஒரு வெள்ளிக்கிழமை இங்கு ஒரு மனிதன் கழுத்துத் திருகப்பட்டுக் கிடந்ததை நான் கூட வந்து பார்த்தேன். இன்று கூட வெள்ளிக்கிழமைதான்...!" என்று அவன் சொல்லிக்கொண்டு வரும்போது அவனுடைய உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்துவிட்டது. அப்போது...! எங்கிருந்தோ ஒரு நரியின் பயங்கர ஊளைச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து அப் பாழ் மண்டபத்து மூலையிலிருந்து ஒரு ஆந்தை பயங்கரமாக அலறியது. பிரயாணப் பையுடன் பதுமை போல அமர்ந்திருந்த இளை[illegible]

அப்போது..! நேரம் சுமார் இரண்டு மணியிருக்கும். அந்த அகால வேளையில்...! யாரோ அனுங்குவது போன்ற சத்தமும், அதைத் தொடர்ந்து யாரோ பயங்கரமாகச் சிரிக்கும் இடியோசையும் எங்கிருந்தோ எழுந்தன. இரு நிமிட அமைதிக்குப் பின்...யாரோ பயங்கரமாக அலறுவது கேட்டது. இளைஞர்கள் சிலைபோல வீற்றிருந்தனர். அப்போது...... கோரப் பற்களும், குண்டுக் கண்களுமுடைய ஒரு ராட்சத உருவம் வாயைப் பிளந்தவாறு தலையை மேலும் கீழும் அசைத்தபடி இளைஞர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது!

(அடுத்த இதழில் முடியும்)



'என்ன, அப்படிப் பார்க்கிறீங்க? விழுந்து விடுவேனென்றா? அதெல்லாம் நான் மேசையை நன்றாகப் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறேன்' என்கிறாரோ அப்நின் ஜூங்கிரா?

அன்புள்ள மருமக்களே!

அடுத்த இதழுடன் மர்மத் தொடர்கதை முடிகிறது. இது பற்றிய பரிசுத் திட்டமொன்று அடுத்த வாரம் வெளியாகும்.

குழந்தைகளின் படங்கள் 'வளர்மதி'யில் இடம் பெறுவதில்லையே என்று பலரும் குறைப்பட்டார்கள். அவர்களது குறையையும் ஓரளவு தீர்த்து வைக்க, படங்கள் வெளியிடலாமென யோசித்துள்ளேன். இவ்வாரம் முதலாவது படம் வெளியாகின்றது. தமது செல்லக் குழந்தைகளின் படங்களைப் பெற்றோர்கள் வளர்மதி மாமா, மே/பா, சுதந்திரன், 194 ஏ, பண்டாரநாயக்கா வீதி, கொழும்பு-12 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம். இடவசதிக்கேற்பவே, படங்கள் வெளியாகும். ஆகவே, வெளிவராத படங்களைப்பற்றி எவரும் வருத்தப்படல் ஆகாது.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

# தெய்வீகக் கலை விழா நவராத்திரித் திருவிழா

—விமலா நடராசா, தெல்லிப்பளை—

நவராத்திரி என்னும் சொல்லிற்கு ஒன்பது நாட்களிற் செய்யப்படும் நோன்பு என்பது பொருளாகும். வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே இலங்கை வரையிலும், மேற்கே பாஞ்சாலம் முதல் கிழக்கே பர்மாவின் எல்லை வரை நவராத்திரி நோன்பு இந்துக்களாற் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்கப் பிரதமைத் திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகளும் நவராத்திரி எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் நாமம் பெறும். இந்தியாவில் இதனைத் தசரா என அழைப்பர்.

கிருத யுகத்திலே பக்தியிற் சிறந்த சுகேத மன்னன் தனது இராச்சியத்தை இழந்து மனைவியோடு வனவாசம் சென்றான். அங்கு அங்கிரசன் என்னும் இருடி நவராத்திரி பூஜா மகிமையை உபதேசிக்க, அவ்வரசன் அப் பூஜையைப் பக்தியோடு செய்து தன் இராச்சியத்தை மீளவும் பெற்றான். அது முதல் மானிலத்திலுள்ளோர் வருடந்தோறும் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் முறையே மும்மூன்று தினமாக ஒன்பது நாளும் பூசிக்கின்றனர் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

மகிஷாசுரன் என்னும் ஓர் அரக்கன் மக்களுக்குப் பல இன்னல்களை இழைத்து வந்தான். அவன் ஆண் மகன் எவரும் தன்னைக் கொல்ல முடியாதென்ற வரம் பெற்றிருந்தான். இதனால் தேவர்கள் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரிடம் முறையிட அவர்கள் ஒன்று சேர்ந்து துர்க்கை வடிவுடன் மகிஷாசுரனைக் கொன்றனர். இதனாலேயே மானிலத்தோர் நவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றனரென வேறொரு சாரார் கூறுவர்.

வீட்டிற்கு வீடு, கோவிலிற்குக் கோவில் இந்தப் பராசக்தி வழிபாட்டைச் செய்கின்றனர். நவராத்திரியை வழிபடும் முறைகள் பலஉள. முதன் மூன்று நாட்களும் வெற்றி வேண்டித் துர்க்கையையும், பின்பு செல்வம் வேண்டி லட்சுமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிச் சரஸ்வதியையும் முறையே வணங்குவர். கோவில்களிற் கொலு வைப்பார்கள். ஆயுதங்களையும், ஆபரணங்களையும், புத்தகங்களையும் வைத்து முறையே வழிபடுவர்.

வேறு சிலர் ஒன்று முதல் ஒன்பது வயதுடைய பெண்களைத் தெரிந்தெடுத்து முதல் நாள் ஒரு வயதுடைய குழந்தையையும், இரண்டாம் நாள் இரண்டு வயதுடைய குழந்தையையும், இவ்வாறே ஒன்பது தினங்களும் அவ்வவ் எண்ணிக்கைக்கேற்ற வயதுள்ள குழந்தைகளையும் கலைமகளாகவே கருதி அலங்கரித்து மகிழ்வர். ஆகவே, சுருங்கக் கூறின், தெய்வீகம் நிறைந்த கலைத் திருவிழாவாக நவராத்திரி திகழ்கின்றது.

# வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் வாணியே!

செ. குணரெத்தினம்,
மட்டக்களப்பு.

வெண் தாமரையில் வீற்றிருக்கும்,
வீணை கையில் வைத்திருக்கும்
பெண்ணே! கல்விப் பெட்டகமே!
பேணிக் காப்பாய் சரஸ்வதியே!

வெள்ளை யாடை அணிந்திருக்கும்,
வெள்ளை யுள்ளம் கொண்டிருக்கும்
கள்ள மில்லாச் சரஸ்வதியே!
காப்பாய் யென்று, மெய்யம்மா!

பள்ளி சென்று படித்துவரும்
பாலர் நாங்கள் பாரம்மா
அள்ளி அறிவை வழங்கம்மா
அனைத்தும் நீயே அருளம்மா!

நீதான் எங்களுயி ரம்மா
நெஞ்சில் நிறைந்த பொருளம்மா
நீதான் கல்விக் கரசம்மா
நெஞ்சம் மறக்கா துணையம்மா!

# இதோ விளக்கம்.....

குருவிக்குத் தக்க இராமேஸ்வரம் — என்று தான் ஜனங்கள் சொல்லுகிறார்கள்: ஆனால், இராமேஸ்வரத்திற்கும் குருவிக்கும் உள்ள தொடர்பு மொட்டந் தலைக்கும், முழந்தாளுக்கும் முடிச்சுப் போட்டது போன்று இருக்கின்றது. சிலர் குருவிக்குத்தக்க இராமசாரம் என்றும் சொல்லுகிறார்கள். இதன்படி, பெரிய குருவியாயின் அம்பு சற்றுப் பெரிதாகவும், குருவி சிறிதாயின் அம்பு சிறிதாயும் இருக்கும் என்று கருத இடம் உண்டு. இதுவும் அவ்வளவு பொருத்தம் அன்று. ஆனால் குருவிக்குத் தக்க இராகசுரம்—இதுவே சரியான பழமொழி. ஒவ்வொரு குருவியினுடைய ராகஸ்வரம் அவ்வதற்குத்தக்கதாக இருக்கும்.

அனுப்பியவர்:
எஸ். செல்வரதி,
சங்குவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## 'புண்படுத்தும் இலக்கியம் விடுத்து பண்பட்ட இலக்கியம் சமைப்போம்

### கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணக் கிளைக் கூட்டத்தில் பேராசிரியர் சிவானந்தன் உரை

"புண்படுத்தும் இலக்கியமே யொழியப் பிறரைப் புண்படுத்தும் இலக்கியம் எமக்கு வேண்டாம் கலைஞன் ஆழ்ந்த புலமையிருலும் முதிர்ந்த அனுபவததிஞலும தன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைச் சொல்லாலும், கல்லாலும், தூரிகையாலும் நடிப்பாலும் வெளிப்படுத்தும் போது கலை பிறக்கிறது. இவற்றை விடுத்துக் கூழ் முட்டைகள் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்திஞல் கலவைதான் பிறக்கும். சில கொள்கைகளுக்காகத்தான் இலக்கியம் படைக்க வேண்டுமெனக் கூற எவருக்கும் உரிமை கிடையாது." என திரு மு. சிவானந்தம் எம். ஏ. அவர்கள் கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

கொழும்புக் கலை இலக்கியப் பேரவையின் துணைத் தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் விசேட விருந்தினராக வருகை தந்து தலைமை வகித்துப் பேசிய போது குறிப்பிட்டதாவது:"பெரும்பான்மை மக்கள் விரும்புகின்றனரே யென்று கூறி ஆபாச இலக்கியங்களைப் படைக்கக் கூடாது. பிற நாட்டுக் கதைகளின் கருவையும் இந்நாட்டுச் சம்பவங்களையும இணைத்து இதுதான் மண்வள இலக்கியம் என்று சிலர் பெருமைப்படுகின்றனர். ஆங்கில நாட்டில் தோன்றிய சில விமரிசன நூல்களைத் தமது அரைகுறை ஆங்கில அறிவோடு வாசித்துப் பூரணமாக விளங்கிக் கொள்ளாது இடர்படுகின்றனர். மக்களை நல்வழிப் படுத்த பண்படுத்த இலக்கியம் படைக்க வேண்டுமே யொழிய எங்கோ மழை பெய்ய இங்கே குடை பிடித்துக்கொண்டு வயிற்று வாதத்திற்காகக் கூழ் முட்டை இலக்கியங்கள் படைக்கக் கூடாது."

கலை இலக்கியப் பேரவையின் யாழ் கிளைப் பணியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு. சிவானந்தம், செயலாளர்: திரு. சி. க. பொன்னம்பலம், பொருளாளர்: திரு. செ. சண்முகலிங்கம்,

ஏழு பேரைக் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### நொச்சிமோட்டை எல்லாளன் இளைஞர் விவசாயக் கழகம

10-10-63 வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நொச்சிமோட்டை மேற்கு எல்லாளன் விவசாயக் கழகக் கூட்டம் ஆரம்பமாகியது. கிராம சேவையாளர் திருவாளர் சு. தருமராசா அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

செல்வன் வ. ஜெயசீலனுல் சுயரோகம் பற்றி ஓர் உரை நிகழ்த்தப்பட்டது.

தலைமை ஆசிரியர் திருவாளர் சு. அருளானந்தம் அவர்கள் சுயரோக கொடித்தினம் என்றல் என்ன வென்றும் அதன் நோக்கம் பற்றியும் ஓர் விரிவுரை நிகழ்த்திஞர்.

பின்பு சுகாதார பரிசோதகர் திருவாளர் க. சிவசுப்பிரமணியம் அவர்கள் சுயரோக கொடித்தினம் ஆரம்பமும், வளர்ச்சியும் அதன் தேவையும் பற்றி ஓர் உரை நிகழ்த்தினர்.

தலைவர் அவர்கள் உண்டியலில் பணம் இட்டு கொடித்தினத்தை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தொண்டர்கள் கொடிகளை வினியோகித்து, சமுகம் கொடுத்தவர்களிடம் இருந்து பணம் சேகரித்தனர்.

ஈற்றில் தலைவரால் வீதிகள் தோறும் இல்லங்கள் தோறும் சென்று பண உதவியைப் பெறும்படியும் இவ்வரிய சேவையையும் இவை போன்ற இன்னும் பொது சேவைகளையும் புரிவதற்கு ஊக்குமுடன் சிறுவர்கள் பங்கு பற்றும்படி கேட்டு கூட்டத்தை இனிது முடித்து வைத்தார்.

### விளையாட்டுப் போட்டி

பண்டாரவளையைச் சேர்ந்த கிறேக் தோட்டப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை காலை (13-10-63) பண்டாரவளை வித்தியாதரிசி திரு ஐ. எஸ். அபூகாகிர் அவர்களின் தலைமையில் தோட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. ஐ. எஸ். அபூதாகிர் அவர்கள் "மாணவர்களுக்கு உளவளர்ச்சியுடன் உடல் வளர்ச்சியும் அவசியம் தேவை. அதற்கு இத்தகைய போட்டிகள் ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெற வேண்டும். இன்று நகரத்தில் இருக்கும் கலாசாலைகளும் தூங்கும் இவ்வேளைகளில், இத் தோட்டப் பாடசாலையில் இவ் விழா நடைபெறுவது அவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கட்டும். சிறப்பான முறையில் ஒழுங்கு செய்த இவ் விளையாட்டுப் போட்டியின் பொறுப்பாளரான திரு. நா. திருச்செல்வம் ஆசிரியர் அவர்களையும் உதவி ஆசிரியர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்."

விளையாட்டுப் போட்டிக்குத் தோட்டத்துரை திரு. சி. எ. பண்டாரநாயக்கா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிஞர்கள்.

விளையாட்டுப் போட்டியில் நாவலர் இல்லம்; பாண்டியன் இல்லம்; சேரன் இல்லம்; -முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் இடங்களைப் பெற்றன.

தோட்டத் தொழிலாளர்களில் பலர் விளையாட்டில் மும்முரமாகக் கலந்து கொண்டனர். ஆசிரியர் திரு. க. அரசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்த ஆசிரியர் திரு. கா. திருவ[illegible] நன்றி நவின்றூர்.

### கணபதி வித்தியாலயத்தில் நவராத்திரி விழா

தட்டா தெரு கணபதி வித்தியாலயத்தில் 26, 27ம் திகதிகளில் நவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. 26ம் திகதி சனிக்கிழமை உதவி வித்தியாதிபதி திரு. வி. துரைசிங்கம் தலைமையில் காலை 9-30 மணியிலிருந்து கலைமகள் விழா நடைபெறும். உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் உட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

27ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை எட்டு மணி முதல் விசேட பூசையும் வித்தியாரம்பமும் நடைபெறும். மேலும் கணபதி கலாலயத்தில் கலந்து நடனம் பயில விரும்பும் மாணவர்களும் அன்றைய தினம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### இஸ்லாமிய முன்னேற்றக் கழகம் கொழும்பு

அகில இலங்கை முஸ்லிம் லீகின் ஆதரவில் 13ம் திகதி ஞாயிறன்று நடாத்தப்பட்ட மாநாட்டின் தீர்மானங்களை இஸ்லாமியர் அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

பல்வகை அபிப்பிராயங்கள் தம் மாநாட்டில் பரிமாறப்பட்டபோதிலும் முஸ்லிம் விவாக ரத்துச் சட்டம் — பராமரிப்புச் செலவு சம்பந்தமாக விசாரிக்கும் தகுதியை காதிமார்களுக்கு மாத்திரமே உரியது என விளக்கும் (48வது பிரிவு) இடைக்கால தற்காலிக காதிமார் ஏற்பாடாக அரசாங்கத்தைத் திருத்தித் தருமாறு வேண்டப்பட்ட தீர்மானத்தை நாங்கள் மனப் பூர்வமாக ஆதரிக்கிறோம்.

அத்தோடு காதிமார் நியமிக்கும் விஷயத்தில் அரசாங்கம் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி இஸ்லாமிய சமுக நலன்களைப் போதியளவு அறிந்த அனுபவசாலிகளை வெகு விரைவில் நியமித்து, அரசாங்கம் இதுகாலவரை தாமதித்து வைத்திருக்கும் இஸ்லாமிய சமுக வளர்ச்சியின் முக்கிய சாதனமான காதிக் கோடுகள் அமைப்பை ஆவன செய்யுமாறும் வேண்டுகிறோம்.

இவ்வாறு கொழும்பு இஸ்லாமிய முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் ஜனுப் ஏ. ஆஸாத் தெரிவித்துள்ளார்.

### ஐக்கிய நாடுகள தினம்

ஐக்கிய நாடுகள் தினத்தை யொட்டிப் பின் வரும் அறிக்கையை மலைநாட்டு நல் வாழ்வு வாலிபர் சங்கம் விடுத்துள்ளது.

நமது அரசாங்கம் நம் உரிமைகளைப் புறக்கணித்து விட்டதால் நமது உரிமைக் கோரிக்கையை ஐ. நா. விடம் சமர்ப்பிக்கவேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனப்படி நாம் நாடற்றவர்களாக இருக்க முடியாது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள இப் பிரச்சினையை என்றுதான் முடிவு காண்பார்களோ தெரியாது. அவர்கள் முடிவு செய்யும் வரை நாம் உரிமையற்றவர்களாக வாழ முடியாது. ஆகையால் நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க ஐ. நா. சபை முன் வரவேண்டும். 10 இலட்சம் மக்களின் "மனித உரிமை" புறக்கணிக்கப் படும்வரை எந்த நாட்டிலும் அமைதியோ, நீதியோ, முன்னேற்றமோ ஏற்பட முடியாது. இன்றைய உலகத்தில் எங்கெங்கு மனித உரிமை பாதிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஐ. நா. சபை தலையிட்டிருக்கிறது. அதைப் போலவே நமது அடிப்படை மனித உரிமைகளைப் பெற்றுத் தரவும் ஐ. நா. சபை முன் வரவேண்டும்.

எமது உரிமையற்ற நிலைமையை மாற்ற எந்த அரசாங்கமும் முன் வராததால், நாம் ஐ. நா. சபையிடம் முறையிடுவதை விட வேறு வழி நமக்கிருப்பதாகத் தெரியவில்லை. பத்து இலட்சம் மக்களின் சார்பாக மனித உரிமைகளை மலைநாட்டு மக்களுக்கு வழங்க ஐ. நா. சபையைக் கேட்டுக் கொள்கிறோம். இந்த அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றி ஐ. நா. சபை பொதுக் காரியதரிசிக்கும், எமது இலங்கைப் பிரதமருக்கும் அனுப்பி வைக்கும்படி மலை நாட்டு மக்களின் நலன் கருதி இயங்கும் எல்லாச் சங்கங்களையும், இயக்கங்களையும் மன்றங்களையும் வேண்டிக் கொள்கிறோம்.'

### கொழும்பு கலாவிருத்திச் சங்கம்

கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 19—10—63 சனிக்கிழமை மாலை 6-00 மணியளவில் கொட்டாஞ்சேனை இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் சங்கத் தலைவர் திரு. ஈ. வி. டேவிட் ராஜு வின் தலைமையின் கீழ் ஆரம்பமாகியதுடன் சென்ற வருடம் சங்கம் நடாத்திய நிகழ்ச்சிகளின் வரவு செலவுக் கணக்கைப் பொருளாளர் திரு. வி. எஸ். இரத்தினம் வாசித்துக் கூறியபின் இவ்வாண்டு நிர்வாகிகளாகப் பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஈ.வி. டேவிட் ராஜு, துணைத் தலைவர்: திரு. வீ. எஸ். சங்கரப்பிள்ளை, துணைச் செயலாளர்: திரு. டி. எம். எஸ். சண்முகசுந்தரம் பிள்ளை, திரு. அ. விசுவநாதன், துணைப் பொருளாளர்: வி. எஸ். இரத்தினம், செல்வி. கௌரீஸ்வரி கனகரத்தினம், கணக்குப் பரிசோதகர்: திரு. வி. எஸ். வீரகத்திப்பிள்ளை, ஆட்சிக்குழு உறுப்பினர்களாக: திருவாளர்கள்: வி. நடேசு, அ. சுப்பிரமணியம், ஏ. கே. விஜயபாலன், ஆர். கே. நல்லையா, கே. யோகராஜா ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இச் சங்கத்தின் பொங்கல் வெளியீடாக ஒரு சரித்திர நாடகத்தை மேடையேற்ற ஆலோசிக்கப்பட்ட பின்னர் தேநீர் விருந்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## அயர் நாட்டின் விடுதலைக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தனம், பேடிமை-அப்போது அவருக்கு எதிரிகள்!

அயர்நாட்டின் ஒரு பகுதியை இன்னும் பிரிட்டிஷ் காரர்கள் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறுர்கள். 'அந்தக் கடைசிச் சங்கிலித் தொடர்பு அற வேண்டும். நாற்புறமும் நீர் சூழ்ந்த அயர்நாடு பரிபூரண —முழுமையான சுதந்திரம் அடைய வேண்டும்'-என்பது அவருடைய இதய ஆசைகளில் ஒன்று!

'ஆங்கில மொழி மோகம் கொண்டலையும் மக்களே! திரும்பிப் பாருங்கள்! உங்களைப் பெற்ற அன்னை மொழியாம் கெயிலி மொழி கேலிக்குள்ளாகிக் கிடப்பதை! ஆதிக்கக் காரர்களின் மொழியைக் கற்று, எதிர்காலத்தின் ஆத்திரத்திற்குள்ளாகாதீர்! நம்மை மடி மீது வைத்துப் பாடிக்களித்த தாய் மொழியாம் கெயிலி மொழியைக் கற்பீர்!'-என்று வேண்டுகோள் விடும் அவர், தம்முடைய வேண்டுகோள் மக்களால் கடைபிடிக்கப் பட வேண்டும் என்பது அவரது ஆசைகளில் இரண்டாவது!

### நாட்டினரின் மரியாதை

இத்தகைய பெருவீரமும், பரந்த நோக்கும் கொண்டிருப்பதால்தான், வயது 81 ஆகியும், எழுத்துக்களைச் சரிவரப் படிக்க முடியாதபடி கண்ணொளி மங்கியிருந்தும், அவரை அந்நாட்டு மக்கள் சரியான நிலையில் வைத்துப் புகழ்ந்து பாராட்டுகிறுர்கள்.

'அடுத்த போர் இனி எம்மை அடிமைப்படுத்திய நாடாம் இங்கிலாந்துடன் வந்தால், அந்த நாட்டினர் தம் புறமுதுகு காண்போம்; எங்கள் சொந்தத் தலைவர்—தங்கத் தலைவர் டி வேலரா வின் தலைமையில் மணி முடி சூட்டிக் களிப்போம்—என்னும் [illegible] கவிதையை உணர்ச்சி பொங்க படிக்க அயர்நாட்டின் பலப் பல பகுதி மக்கள் பாடுகின்றனர். அதோடு அம் மக்கள் நின்று விடவில்லை; அவருக்குரிய இடத்தைத் தந்திருக்கின்றனர். டி வேலராவின் 50 வருட அரசியல் வாழ்க்கையில் 20 வருடங்களுக்கு மேலாக அவர் நாட்டின் நிர்வாகத்தை நடத்தும் பெரும் பதவியேற்றிருக்கிறுர்! பதவியை அவர் வெகு எளிதாகப் பெற்று விடவில்லை; ஆம்! தேர்தல் போர்க்களத்தில் குதித்தார். அந்தத் தள்ளாத வயதிலும் —சூறுவளியெனச் சுழன்று தம கட்சியான 'நாம் ஐரிஷ் காரர்கள்' எனும் கட்சிக்கு வாக்குச் சேகரித்தார்.

இவரை எதிர்த்தவர்கள் இவரையோ, இவரது கட்சியையோ, குறை கூற முடியவில்லை. எனவே, பல தடவை தோற்றுர்கள். டி வேலரா 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிபீடத்தில் இருந்தார்.

இப்போது கூட மக்களால் கொடுக்கப்பட்ட பிரதமர் பதவியிலிருந்து விலகி, ஜனுபதிப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி, நாடும் நாட்டு மக்களும் வழி செய்திருக்கிறுர்கள்.

### விடுதலை வீரருக்கு ஓர் வழிகாட்டி

உடலில் நடுக்கம் ஏற்பட்டாலும் உள்ளத்தில் நடுக்கமற்று, வலிமையால், ஊரான நினைப்போருக்கு நடுக்கம் தருபவராகக் காட்சியளிக்கிறுர்! தியாகம், தன்னலமற்ற சேவை!-இத்தனையையும் சேர்ந்து மொத்தமாக உருவாகியவர்தான் டி வேலரா! சுதந்திர உணர்வற்ற சுவர்களுக்கு ஓர் இடி! அடிமை இருட்டை விரும்பாதவர்களுக்கு வழி காட்டும் தீப் பந்தம்!

[எமன் டி வேலரா அவர்களின் பிறந்த தினத்தை யொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. அன்னரின் பிறந்ததினம் ஒக்டோபர் பதினுளாம் நாளாகும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண வேண்டிய கலைப் படைப்பு! அக்டோபர் 30ம் திகதி புதன்கிழமை முதல் !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) விஜிதா (அட்டன) ஜெமினி (ராகலை)

* முத்துராமன்
* விஜயகுமாரி
* பாலாஜி
* புஷ்பலதா
* சகஸ்ரநாமம்
* சந்திரபாபு
* மனோரமா
* முத்தையா
* நாகேஷ்

மற்றும் பலர் நடிக்கும்



திரைக் கதை—வசனம்
டைரக்ஷன்
ஸ்ரீதர்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி

ஒளிப்பதிவு:
ஏ. வின்சென்ட்

பின்னணி:
ஜானகி, பி. பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், எல். ஆர். ஈஸ்வரி.

சித்ரகலாவின் **போலீஸ்காரன் மகள்**

---

**4வது வாரம் காண்பிக்கப்படுகிறது!**

செண்ட்ரல் [மருதானை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] ஓடியன் [கல்கிசை]

லிபர்ட்டி [பதுளை] ஜோதி [திருகோணமலை] செண்ட்ரல் [நாவலப்பிட்டி]

ஓடியன் [கண்டி] செண்ட்ரல் (பருத்தித்துறை)

பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல்
பகையையும் சாடுகிறார் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
எம். ஆர். ஆர். வாசு, எஸ். ஏ. அசோகன், பி. கண்ணாம்பா,
சாண்டோ சின்னப்பா தேவர்

மற்றும் பலர் நடித்த



# தாயைக் காத்த தனயன்

---

**காண்பிக்கப்படுகிறது!**

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை)
அசோகமாலா (நீர்கொழும்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருமலை)
இம்பீரியல் (மட்டக்களப்பு) ரீகல் (அம்பாறை) வேல்ஸ் (கண்டி)
வின்சர் (யாழ்ப்பாணம்)

ஆனந்தன்—இ. வி. சரோஜா—அசோகன்
ராமராவ்—சரஸ்வதி—எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த



# வீரத்திருமகன்

**5வது வாரம்!**

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கல்யாணகுமார் — நாகேஷ்
மற்றும் பலர் நடித்த



# நீங்காத நினைவு

**நவம்பர் 14 முதல்!**

ரீகல் — எல்பின்ஸ்டன் — ரெக்ஸி
மற்றும் பல திரைகளில்!

ஜெமினி கணேசன் — சாவித்திரி
கமலா லக்ஷ்மணன்—மனோகர்
மற்றும் பலர் நடித்த



# கொஞ்சும் சலங்கை

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org